V. B. SUBRAHMANIYASARMA
TAMIL-PANDIT

ஸ்ரீ

இவை

திணைமாலைநூற்றைம்பது
பன்னிருபாட்டியல்.
~~திருநூற்றந்தாதி.~~
திருச்செந்திற்கலம்பகம்.
இன்கம்ப்லீட்.

பி. சுப்ரமணியன்.

கடவுள்துணை.

# கணிமேதாவியார்

அருளிச்செய்த

# திணைமாலை நூற்றைம்பது

## மூலமும் உரையும்.

## க.—குறிஞ்சி.

*நறைபடர் சாந்த மறவெறிந்து நாளால்
உறையெதிர்ந்து வித்தியவூ ழேனல்—பிறையெதிர்ந்த
தாமரைபோல் வாண்முகத்துத் தாழ்குழலீர் காணீரோ
வேமரை போந்தன வின்று.

என்றது தலைமகனுந் தோழியும் ஒருங்கிருந்தவழிச் சென்று தலைமகன் தோழியை மதியுடம்படுத்தது.

இதன் பொருள்: நறைக்கொடி படர்தற்குக் காரணமான சந்தனங்களை அற வெட்டி நல்ல நாளால் மழை பெய்யுங் காலத்தை எதிர்ப்பட்டுக்கொண்டு விதைத்து முதிர்ந்த ஏனலின்கண், பிறையை எதிர்ப்படக்கொண்டதொரு தாமரை மலரைப்போலும் வாண்முகத்தையும் தாழ்ந்த குழலையுமுடையீர்! கண்டிலீரோ? எய்யுண்ட மரை போந்தனவற்றை இவ்விடத்து என்றவாறு. (க)

உ. †சுள்ளி சுனைநீலஞ் சோபா லிகைசெயலை
யள்ளி யளகத்தின் மேலாய்ந்து—தெள்ளி

* 'நறைபரந்த சாந்தம்' என்பதும் பாடம். "இது மதியுடம்படுத்தது, இது முதற்பொருளின்றி வந்த குறிஞ்சி" என்றுரைத்தது, (தொல், பொ, அகத், ௩) இதனை "ஊரும் பெயருங் கெடுதியும் பிறவு, நீரிற் குறிப்பி னிரம்பக் கூறித், தோழியைக் குறையுறும் பகுதியும்" (தொல், பொ, களவு, ௧௧) என்புழிக் கெடுதிவினாயதற்கு உதாரணங்காட்டினார் நச்சினார்க்கினியர்.

† "இது களிற்றிடையுதவி கூறிற்று" என்றுரைத்தது (தொல், பொ, களவு, ௨௩) இதனை எதிர்ப்பட்டதற்கு உதாரணங்காட்டி, "இதனுள் அளகத்தின் மேலாய்ந்து எனவே பூத்தந்தமை கூறினாள்" என்றார் நச்சினார்க்கினியர். (௸, ௸, பொரு, க௩) எதிர்ப்-ஒருவன் களிறும் புலியும் நாயும் போல்வன காத்து எம்மைக் கைக்கொண்டான் என்றும், பூத்தந்தான் தழைதந்தான் எனவும் இவைமுதலிய காரணமிட்டுணர்த்தல் என்பார்.

யிதணாற் கடியொடுங்கா வீர்ங்கடா யானை
யுதணாற் கடிந்தா னுளன்.

எ-து தோழி செவிலிக்கு அறத்தொடுநின்றது.

இ-ள். நறவமலரையுஞ் சுனைநீலமலரையும் அசோகமலரையும் கொய்து முடித்து நின்மகள் குழலின்மேலே ஆராய்ந்து புனைவதுஞ்செய்து பின்னொருநாட்டணிந்து பரணாற் காவலமையாத ஈர்ங்கடா யானையை மொட்டம்பாற் கடிந்து காத்தும் இப்பெற்றி யுதவிசெய்தான் ஒருவனுளன் ; எ-று. (2)

௩. ‡சாந்த மெறிந்துழுத சாரற் சிறுதினைச்
சாந்த மெறிந்த விதண்மிசைச்—சாந்தங்
கமழக் கிளிகடியுங் கார்மயி லன்னா
ளிமிழக் கிளியெழா வார்த்து.

எ-து பகற்குறிக்கண் வந்த தலைமகனைக்கண்டு தோழி செறிப்பறிவுறீஇயது.

இ-ள். சந்தனங்களை வெட்டியுழுத சாரலின்கண் விதைத்த தினையின்கட் படிந்த கிளிகளைச், சந்தனங்களைக் காலெறிந்து செய்த பரண்மிசையிருந்து பூசிய சாந்தம் எங்கும் பரந்துகமழ உலாவிக், கடிகின்ற கார்மயிலன்னாள் தான் வாய்திறந்து ஆயோ என்றியம்புதலாற் றம்மினமென்று கிளிகள் ஆர்த்துப்போகா; எ-று.

'சாந்தமறைத்தவிதண்' என்று பாடமோதிச் சந்தனத் தழையான் மறைத்த இதண் என்பாருமுளர்.

௪ $கோடாப் புகழ்மாறன் கூட லனையாளை
யாடா வடகினுங் காணேன்போர்—வாடாக்
கருங்கோல்வேன் மன்னர் கலம்புக்க கொல்லோ
மருங்குல்கொம் பன்னா ளுயிர்.

எ-து தலைமகள் இற்செறிந்தகாலத்துப் புனத்தின்கண்வந்த தலைமகன் றலைமகளைக் காணாது ஆற்றதுபெயர்கின்றான் சொல்லியது.

---

‡ 'இது பிறரைக் காத்தற்கு இடுவரெனச் செறிப்பறிவுறீஇயது' என்றார் நச்சினார்க்கினியரும். (தொல், பொ, சுள, உ௩.)

$ இதனைப்'பரிவுற்றுமெலியினும்' என்பதற்குதாரணங் காட்டினார் நச்சினார்க்கினியர். (௩௪, ௯௪, ௬௪; கஉ)

**இ-ள்.** கோடாத புகழையுடைய மாறன் மதுரையனையாளை அடாத பண்ணையுளுங் காண்கின்றிலேன் ; போரின்கண் வாடாத கருங்காற்றொழிலையுடைய வேல்மன்னர் அணிகலமாகிய முடிசூடினகொல்லோ! இடையாற் கொம்பையனையாள் மயிர்கள் ; **எ-று.**

ஆடாவடகு என்று விளையாட்டிற்கு வெளிப்படைநிலை யென்னும் அலங்காரத்தாற் பெயராயிற்று. அடா என்பதனை ஆடா என்று நீட்டியது. மன்னர்கலம் என்பது மன்னாணியும் மணிமுடியாதலான் முடியின் பெயராற் கூந்தற்குச் சேர்த்தி முடிசூடிற்றுக் கொல்லோ என்றதாகக்கொள்க. (௪)

௫. விளைவிளையச் செல்வம் விளைவதுபோ னீடாப்
*பனைவிளைவு நாமெண்ணப் பாத்தித்—தினைவிளைய
மையார் தடங்கண் †மயிலன்னாய் தீத்தீண்டு
கையார் பிரிவித்தல் காண்.‡

**எ-து தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகட்குச் சொல்லுவாளாய்த் தோழிசெறிப்பறிவுறீஇயது.**

**இ-ள்.** கெடாத பனை யென்னு மளவுபோன்ற அளவினையுடைய இன்பவிளைவினை நாமெண்ணியிருப்ப அதற்கிடையூறாக, நல்வினை விளையச் செல்வம் விளைவது போலப் பாத்தியின்கட் டினைவிளைதலான், மையார் தடங்கண்மயிலன்னாய்! தினைகொய்ய நாட்சொல்லி வேங்கையார் நம்மை இங்குநின்றும் பிரிவித்தலைப் பாராய்; **எ-று.** (௫)

பானீல மாண்ட துகிலுமிழ்வ தொத்தருவி
மானீல மால்வரை நாடகேள்—§மாநீலங்
காயும்வேற் கண்ணாள் கனையிருளி னீவர
வாயுமோ மன்றநீ யாய்.

**எ-து இரவுக்குறிவேண்டிய தலைமகற்குத் தோழி மறுத்துச்சொல்லியது**

**இ-ள்.** மிக்க நீலமணிவரை மாட்சிமைப்பட்ட வெண்டுகிலையுமிழ்வது போல, அருவிகள் மயங்காநின்ற நீலமால்வரைநாடனே! கேளாய்; கரியநீல மலர்களை வெகுளாநின்ற வேல்போன்றகண்ணாள், செறிந்த இருளின்கண் நீவர, நினக்கிடையூறில்லாமைஆராயவல்லளோ; உண்மையாகப்பாராய்**எ-று**

---

* பனையளவு எனவும், † மடநல்லாய் எனவும் பாடம்.

‡ இஃது இவ்வொழுக்கத்தினை வேங்கை நீக்கிற்றெனத் தலைவிக்குக் கூறியது என்றார் நச்சினார்க்கினியரும். (தொல், பொ, கள, உ௩).

§ 'மானீலம்' எனவும் பாடம்.

எ கறிவளர்பூஞ் சாரற் கைந்நாகம் பார்த்து
சிறுவளர் நீள்வேங்கை கொட்கு—முறிவளர்
நன்மலை நாட விரவரின் வாழாளா
னன்மலை நாடன் மகள்.

இதுவுமது.

இ-ள். மிளகு படர்கின்ற பூஞ்சாரலின்கட் கையையுடைய நாகங்களை ப்பார்த்து வழியின்கண் வளர்கின்ற பெரும்புலிகள் திரிதரும் இரவின்கண் நீவரிற், றளிர்வளர்கின்ற நன்மலைநாட! நன்மலைநாடன்மகள் வாழாள்;எ-று.

அ அவட்காயி னைவனங் காவ லமைந்த
திவட்காயிற் செந்தினைகா ரேன—லிவட்காயி
னெண்ணுளவா லைந்திரண் டீத்தான்கொ லென்னுங்கொல்
கண்ணுளவாற் காமன் கணை.

எ-து பின்னிலைமுனியாது நின்ற தலைமகன் றோழியை மதியுடம்படுத்தது.

இ-ள். அவ்விடத்து வருவேனாயின் நினக்கு ஐவனங்காவலமைந்தது; இவ்விடத்தின்கண் வருவேனாயிற் செந்தினையுஞ் செறிந்த பசுந்தினையும் காத்தலே அமைந்தது; ஆதலான் எனக்கொரு மறுமாற்றந் தருகின்றிலை; நின்றோழியாகிய இவட்காயிற், காமன் அம்பு ஐந்தெண்ணுளவால், அவற் றுளிரண்டம்பினைக் கண்ணாகக்கொடுத்தான் கொல்லோ! நின்றோழிக்குக் கண்கள் காமன்கணை யுளவால், என்னுயிர்க்கு என்னாங் கொல்லோ? எ-று.

கூ வஞ்சமே யென்னும் வகைத்தாலோர் மாவினாய்த்
தஞ்சந் தமியனாய்ச் சென்றேனென்—னெஞ்சை
நலங்கொண்டார் பூங்குழலா ளன்றாயத் தன்றென்
வலங்கொண்டா ளொண்டா ளிடம்.

எ-து பாங்கற்குத் தலைமகன் றலைமகளைக் கண்டவகைகூறித் தன்னாற் றமைமிகுதி சொல்லியது.

இ-ள். மாயமே யென்று சொல்லப்படுந் தன்மைத்தால்! ஒருமாவினை வினவி யானினைவினை நீங்கித் தனியே எளியேனாய்ச் சென்றேன்: சென்ற விடத்து நலங்கொண்டு நிறைந்த பூங்குழலையுடையாள் மிகவுந் தன்னயத் தின்கண் அன்று என் வென்றியை யெல்லாங் கொண்டு என்னெஞ்சத்தைத் தனக்கிடமாய்க் கொண்டாள்; எ-று. (கூ)

க0 கருவிரற் செம்முக வெண்பற்சூன் மந்தி
பருவிரலாற் பைஞ்சுனைநீர் தூஉய்ப்—பெருவரைமேற்
றேன்றேவர்க் *கொக்கு மலைநாட வாரலோ
வான்றேவர் கொட்கும் வழி.

எ-து தோழி நெறிவிலக்கியது.

இ-ள். கருவிரலினையுஞ் செம்முகத்தினையும் வெண்பல்லினையுமுடைய யசூன்மந்தி தன் பெரியவிரலானே பைஞ்சுனையினீரைத்தூவிப், பெருவரையின்மேலே வைத்த தேன்பொதிகளைத் தேவர்கட்குக் கொடுக்கும் மலைநாடனே! வாராதொழிவாயாக; தேவர்கள் திரிதரும் வழியாம்; எ-று. (க0)

கக கரவில் வளமலைக் கல்லருவி நாட
வுரவில் வலியா யொருநீ—யிரவின்
வழிகடாஞ் சால வரவரிய வார
லிழிகடா யானை யெதிர்.

இதுவுமது.

இ-ள். பழுதில்லாத வளங்களையுடைய கல்லருவி நாடனே! வலிய வில்லே நினக்கு வலியாய் ஒருநீ இரவின்கண்ணாகத் துணையின்றி வழிகள் தாம் மிகவும் வரவரிய; இழியாநின்ற கடாத்தையுடைய யானைகளி னெதிர் வாரல்; எ-று. (கக)

கஉ வேலனார் போக மறிவிடுக்க வோரியும்
பாலனார்க் கீக பழியிலாள்—பாலாற்
கடும்புனலி னீந்திக் கரைவைத்தாற் கல்லா
னெடும்பணைபோ றோணோ ரணின்று.

எ-து வெறிவிலக்கித் தோழி செவிலிக்கு அறத்தொடுநின்றது.

இ-ள். வெறியை விட்டு வேலனார் போக; மறியையும் விடுக்க; கள்ளையும் அக்கள்ளினை நுகர்வார்க்கீக; இப்பழியிலாதாள் ஊழ்வலியாற் கடும்புனலுட் பாய்ந்து நீந்தித் தன்னை யெடுத்துக் கரையின்கண் வைத்தாற்கல்லது நெடிய வேய்போன்ற தோளை நல்காள் இறந்துநின்று; எ-று. (கஉ)

---

'ஒண்ணிண்ப்பலி யொக்குவல்' என்பது திருச்சிற்றம்பலக் கோவை. (உநடு.)

கங. ஒருவரை போலெங்கும் பல்வரையுஞ் சூழ்ந்த
வருவரை யுள்ளதாஞ் சீறூர்—வருவரையு
ளைவாய நாகம் புறமெல்லா மாயுங்காற்
கைவாய நாகஞ்சேர் காடு.

எ-து நெறியினதருமை கூறித் தோழி இரவுக்குறிமறுத்தது.

இ-ள். ஒரு மலைபோல எல்லா மலையும் தம்முள் அளவொக்க உயர்ந்து சூழ்ந்த அரிய எல்லையுள் உள்ளதாம் எங்கள் சீறூர்; நீவரும் அவ்வெல்லையுள் உள்ளகத்தின்கண் உள்ளன ஐந்துவாயையுடைய நாகங்கள்; புறத்துள்ளன ஆராயுங்காற் கையொடுசேர்ந்த வாயையுடைய யானைகள் சேர்ந்தகாடுகள்; எ-று. (கங)

கச வருக்கை வளமலையுண் மாதரும் யானு
மிருக்கை யிதண்மேலே மாகப்—பருக்கைக்
கடாஅயால் யானை கடிந்தானை யல்லாற்
றொடாஅவா லென்றோழி தோள்.

எ-து. செவிலிக்குத் தோழி அறத்தொடுநின்றது.

இ-ள். வருக்கைப் பலாவினையுடைய வளமலையின்கண் மாதரும் யானும் எமக்கிருக்கையாகிய பரண்மேலேயிருந்தேமாகப், பெரிய கையினையுங் கடாத்தையும் பெருமையையும் உடைய யானையைத் துரந்து கடிந்தானை யன்றித் தீண்டாவால், என்றோழியுடைய தோள்கள்; எ-று. (கச)

கரு வாடாத சான்றோர் வரவெதிர் கொண்டிராய்க்
கோடாது நீர்கொடுப்பி னல்லது—கோடா
வெழிலு முலையு மிரண்டிற்கு முந்நீர்ப்
பொழிலும் விலையாமோ போந்து.‡

எ-து தலைமகன் சான்றோரை வரைவுவேண்டி விடுத்தவிடத்துத் தலைமகள்தந்தைக்குந் தமையன்மார்க்கும் நற்றாய் அறத்தொடுநின்றது.

இ-ள். தள்ளாத சான்றாண்மையையுடையார் வரவை எதிர்கொண்டிராய்க் கோடாது உடம்பட்டு நீர் கொடுப்பினன்றித் தளராத அழகும் முலையும் என்னும் இரண்டிற்கும் முந்நீரால் சூழப்பட்டவுலகும் விலையாமோ நிரம்பி; எ-று. (கரு)

‡ இதுவும் உசாதலாயடங்கும் என்பர் நச்சினார்க்கினியர். (தொல். பொ. பொருளி. கங)

## குறிஞ்சி.

கசு நாணாக நாறு நனைகுழலா ணல்கித்*தன்
பூணாக நேர்வளவும் போகாது—பூணாக
மென்றே னிரண்டாவ துண்டோ மடன்மாமே
னின்றேன் மறுகிடையே நேர்ந்து.

**எ-து தோழி சேட்படுத்தவிடத்துத் தலைமகன்றனதாற்றாமையாற்சொல்லியது.**

**இ-ள்.** *நாகநாண்மலர்நாறும் தேனால் நனையப்பட்ட குழலாள் எனக்கு நல்கித் தன்னுடைய பூண்மார்பினை நேருமளவும் என் மார்பினின்றும் அவ் வெலும்பாற் செய்த பூண்போகாதென்று நினக்குச் சொல்லினேன்; இனி யிரண்டாவது வேறொரு சொல்லுண்டோ? பனைமடலாற் செய்யப்பட்ட மாவினையூரத் துணிந்துநின்றேன், தெருவினடுவே யுடன்பட்டு;* **எ-று.** (கசு)

கஎ அறிகவளை யைய விடைமடவா யாயச்
சிறிதவள்செல் லாளிறுமென் றஞ்சிச—சிறிதவ
ணல்கும்வாய் காணா நைந்துருகி யென்னெஞ்ச
மொல்கும்வா யொல்க லுறும்.

**எ-து நின்னாற் சொல்லப்பட்டவளை அறியேனாலோ என்ற தோழிக்குத் தலைமகனறிய வுரைத்தது.†**

**இ-ள்.** *அறிவேன் யான் அவளை; தன்னுடைய மெல்லிய இடைவருந்த, மடவாய்! சிறிதுமவள் நடவாளாக இறும்இறும் என்றஞ்சி அவள் எனக்குச் சிறிதும் அருளுநெறிகாணாது தளர்ந்துருகி என்னெஞ்சம் அவளொல்கி நடக்குந்தோறும் பின்சென்று தளர்தலுறும்;* **எ-று.**

*இதனுள் ஆய என்பது வருந்த என்றதாம்.* (கஎ)

கஅ என்னுங்கொ லீடி‡லிளவேங்கை நாளுரைப்பப்
பொன்னும்போர் வேலவர் தாம்புரிந்த—தென்னே
மருவியா மாலை மலைநாடன் கேண்மை
யிருவியா மேன லினி.§

---

* இது சாக்காடு குறித்தது எனக்கொள்வர் நச்சினார்க்கினியர். (தொல். பொ, களா, கக)

† நச்சினார்க்கினியரும் இதுவே கருத்தாகக்கொள்வர். (தொல், பொ, களா, கக)

‡ 'இணைவேங்கை' எனவும் பாடம்.

§ இது தினையரிகின்றமையுஞ் சுற்றத்தார் பொருள்வேட்கையுங் கூறியது என்பர் நச்சினார்க்கினியர். (தொல். பொ. களா- உங)

எ-து பகற்குறிக்கட் டலைமகள் சிறைப்புறத்தானாகத் தோழி செறிப் பறிவுறீஇ வரைவுகடாயது.

இ-ள். தகுதியில்லாத இளவேங்கை நாட்சொல்ல இனிக்குரலொழிந்து இருவியாயக் கழியுந்தினையெல்லாம்; எந்தையும் என்னையன்மாருமாகிய போர்வேலவர் இவட்குப் பரிசமாக மிகவிரும்புகின்றது பொன்னும்; ஆதலாற் பயிலப்பழகிவருந்தன்மையையுடைய மலைநாடன்கேண்மை யினியென்னாய விளையுங்கொல்லோ! என்னே! எ-று. (கஅ)

கக பாலொத்த வெள்ளருவி பாய்ந்தாடிப் பல்பூப்பெய்
தாலொத்த வைவனங் காப்பாள்கண்—வேலொத்தென்
னெஞ்சம்வாய்ப் புககொழிவு காண்பானோ காண்கொடா
வஞ்சாயற் கேநோவல் யான்.*

எ-து பின்னின்ற தலைமகன் தோழி குறைமறுமற் றனதாற்றாமைமிகுதி சொல்லியது.

இ-ள். பால்போன்ற வெள்ளருவியைப் பாய்ந்தாடிப், பலபூக்களையும் பெய்து பரப்பினாற்போலப் பூங்கொடிகள் பரந்த ஐவனப்புனத்தைக் காப்பாள் கண்கள், வேல்போன்று எனது நெஞ்சத்தின்கண் வாவிப்புக்கு என்னுயிரை ஒழிவுகாணவேண்டியோ புறம்போகாது உள்ளே அடங்கின; இத்துணை வேண்டுமோ? அவளுடைய அழகிய மேனிக்கே நோவாநின்றேன் யான்; எ-று. (கக)

உ0 நாள்வேங்கை பொன்விளையு நன்மலை நன்னாடா [வேங்கை
கோள்வேங்கை போற்கொடியா ரென்னையன்மார்—கோள்
யன்னையா னீயு மருந்தழையா மேலாமைக
கென்னையோ நாளை யெளிது.‡

எ-து கையுறைமறை.

இ-ள். வேங்கை நாண்மலர் பொன்விளைவிக்கும் நன்மலை நாடனே! கோள்வேங்கைபோற் கொடியார் என் ஐயன்மார்; நீயுங் கோள்வேங்கை யனையையாதலான் இன்று நீயும் இங்கே நிற்கின் மிகப்போர் விளையும்; நீ கொணர்ந்த தழையை யாங்கொள்ளாமைக்கு வேறு காரண மென்னை? நாளை நீ கொண்டு வந்தால் எளிது; எ-று. (உ0)

---

* இது பகற்குறியிரந்தது எனக்கொள்வர் நச்சினார்க்கினியர். (தொல் பொ. களவு. கக)

‡ இது கையுறை மறுத்துப் பின்வருக என்றது என்றார் நச்சினார்க் கினியரும். (தொல். பொ. களவு. உக)

எ-து. தலைமகனைத் தோழி வரைவுகடாயது.

இ-ள். கடலின்கட் சங்குகளே பெரியமருப்பாகக் காற்றே பாகனாகத் திரையே அடற்கோட்டியானையாக வருத்திக் கரையைக் குத்துகின்ற நீண்ட சேர்ப்பையுடையானே! செறிந்த இருளின்கண் வாராதொழிக ... (எ-று)

சச கடும்புலால் புன்னை கடியுந் துறைவ
படும்புலாற் புட்கடிவான் புக்க—தடம்புலாந்
தாழைமா ஞாழற் றதைந்துயர்ந்த தாழ்பொழி
லேழைமா னேக்கி யிடம்.

எ-து பகற்குறியிடங்காட்டியது.

இ-ள். மிக்கபுலானாற்றத்தைப் புன்னைப்பூக்கள் நீக்குந் துறைவனே! புலாலிற்பட்ட புள்ளைக்கடியவேண்டிப் புக்கஏழைமானேக்கிவிளையாடுமிடம், பெரியபுல்லாகிய தாழையும் ஞாழலும் நெருங்கியுயர்ந்ததாழ்பொழில்; எ-று.

சரு தாழை தவழ்ந்துலாம் வெண்மணற் றண்கானன்
மாழை நுளையர் மடமக—ளேழை
யிணைநாடி லில்லா விருந்தடங்கண் கண்டுந்
துணைநாடி னன்றோ மிலன்.

எ-து தலைமகன் சொல்லிய குறிவழியறிந்து தலைமகளைக்கண்ட பாங்கன் தலைமகனை வியந்து சொல்லியது.

இ-ள். தாழைகள் படர்ந்து பரக்கும் வெண்மணலையுடைய தணகானலின்கண் வாழும் மாழைமையையுடைய நுளையர்மடமகளாகிய இவ்வேழையுடைய ஒப்புவமை நாடிலில்லாத இருந்தடங்கண்கண்டுந் துணையை நாடிய எம்பெருமான் ஒரு குற்றமுமிலன்; எ-று. (கச)

சசா தந்தாயல் வேண்டாவோர் நாட்கேட்டுத் தாழாது
வந்தானீ யெய்துதல் வாயான்மற்—றெந்தாய்
மறிமகர வார்குழையாள் வாழாணி வாய
லெறிமகரங் கொட்கு மிரா.

எ-து தோழி நெறிவிலக்கி வரைவுகடாயது.

இ-ள். சிலரைக் கொணர்ந்து ஆராயல்வேண்டுவதில்லை; நல்லதொரு நாட்கேட்டு நீட்டியாதே நீவரைதற்கு வந்தால் இவளை எய்துதல் மெய்ம்மையால்: எம்மிறைவனே! எறிசுறாக்கள் கழியெங்குஞ் சுழலுமிராவின்கண் வா

ரல்: வரின், மறிமகர வார்குழையாள் உயிர் வாழாள்; எ-று. (கரு)

சஎ பண்ணுது பண்மேற்றே பாடுங் கழிக்கான
லெண்ணுது கண்டார்க்கே யேரணங்கா—லெண்ணுது
சாவார்சான் ருண்மை சலித்திலா மற்றிவளைக்
காவார் *கயிறுரீஇவிட் டார்.

**எ-து பாங்கன் றலைமகளைக் கண்டு தலைமகளை வியந்துசொல்லியது.**

**இ-ள்.** யாழினைப் பண்ணுது பண்மேற்சேரத் தேன்கள்பாடுங் கழிக்கானலின்கண் ஆராயாதே வந்து கண்டார்க்கே அழகிய தெய்வங்களாம், ஆதலான், அறிவினுணராயாது இறந்துபடுவார் சான்ருண்மையின்கண் வேறுபட்டிலாமற்றிவளைக்காவாது கயிறுரீஇவிட்டார் சான்ருண்மையின் வேறுபட்டார்; **எ-று.** (கசு)

சஅ திரைமேற்போந் தெஞ்சிய தெண்கழிக் கானல்
விரைமேவும் பாக்கம் விளக்காக்—கரைமேல்
விடுவாய்ப் பசும்புற விப்பிகான் முத்தம்
படுவா யிருளகற்றும் பாத்து.†

**எ-து தலைமகற்கு இரவுக்குறி மறுத்தது.**

**இ-ள்.** திரைமேற்போந்து கரைமேலொழிந்த விடுவாயையும் பசும்புறத்தையுமுடைய இப்பிகான்ற முத்தம், தெண்கழிக்கானலின் விரைமேவும் பாக்கம் ஒளியுண்டாம்வகை இருள்படுமிடமெல்லாம் அவ்விருளைப் பகுத்தகற்றும்; **எ-று.** (கஎ)

சகூ எங்கு வருதி யிருங்கழித் தண்சேர்ப்ப
பொங்கு திரையுதைப்பப் போந்தொழிந்த—சங்கு
நரன்றுயிர்த்த நித்தில நள்ளிருள்கால் சிக்கு
வரன்றுயிர்த்த பாக்கத்து வந்து.

**இதுவுமது.**

**இ-ள்.** எவ்விடத்தானே வருவாய் இருங்கழித்தண் சேர்ப்பனே! பொங்குதிரைகளானே யுதைக்கப்பட்டுப் போந்து கரையின்கட் டங்கிய சங்குகள்

---

* "வண்டலர் கோதை வாட்கண் வனமுலை வளர்த்த தாயர், கண்டுயிருண்ணுங் கூற்றங் **கயிறுரீஇக்** காட்டியிட்டார்." என்ருர் **சிந்தாமணியினும்.** (இலக்கணை. அ0.)

† இது பகற்குறி நேர்வாள்போல் இரவுக்குறி விலக்கியது எனக்கொள்வர் **நச்சினார்க்கினியநம்.** (தொல். கள, உ௩.)

கதறிப் பொறையுயிர்த்த முத்தங்கள் செறிந்து இருளை இடங்களினின்றுஞ் சீயாநிற்கும்: திரைகொணர்ந்து போதவிட்டனவற்றைக் கண்டார் வான்று நின்ற பாக்கத்தின்கண் ; எ-று. (கஅ)

௫௦ திமில்களி றாகத் திரைபறையாப் பல்புட்
டுயில்கெடத் தோன்றும் படையாத்—துயில்போற்
குறியா வரவொழிந்து கோலநீர்ச் சேர்ப்ப
நெறியானீ கொள்வது நேர்.

எ-து தோழி வரைவுகடாயது.

இ—ள். * திமிலே களிறாகத் திரையே பறையாகத் துயில்கெடத்தோன்றும்படை புட்களாகக், கனுக்கண்டாற்போலத் தேறமுடியாத களவின் கட்டணியேவரும் வரவினை யொழிந்து, கோலநீர்சசேர்ப்பனே! நெறியானே வரைந்து இவளைக்கொள்வது நினக்குத்தகுதி ; எ-று. (க௯)

௫௧ கடும்புலால் வெண்மணற் கானலுறு மீன்கட்
படும்புலால் பார்த்தும் பகர்து—மடும்பெலாஞ்
சாலிகை போல்வலை சாலப் பலவுணங்கும்
பாலிகை பூக்கும் பயின்று.

எ-து தலைமகற்குத் தோழி துறைநேர்ந்து பகற்குறியிடமறியச் சொல்லியது.

இ-ள். கடும்புலாலையுடைய வெண்மணற் றண்கழிக்கானலின்கண் இருந்து, யாங்களாங்கடுத்த மீனுகிய படுபுலாலின்கட் புட்டிரியாமற்பார்ப்பேம் : அவற்றை விற்பதுஞ்செய்வேம் ; அக்கானலின்கண் அடும்பெல்லாம் பாலிகைபோலப் பூக்கும்:† சாலிகை விரிந்தாற்போல வலைகளும்உணங்கும்; எ-று

௫௨ திரைபாக னாகத் திமில்களி றாகக்
கரைசேர்ந்த கானல் படையா—விரையாது
வேந்து கிளர்ந்தன்ன வேலைநீர்ச் சேர்ப்பநா
ளாய்ந்து வரைத லறம்.

எ-து தலைமகனைத் தோழி வரைவுகடாயது.

இ-ள். திரையே பாகனாகத் திமிலேகளிறாகக் கரைசேர்ந்த கானலின் கண்ணுள்ள பலபுட்களே படையாக வேந்துகிளர்ந்தன்ன வேலைநீர்ச் சேர்ப்ப

---

* திமில் - மீன்பட்டு.

† சாலிகை – மெய்புகுகருவி.

னே! விரையாதே நல்லநாளாராய்ந்தறிந்து வரைந்திவளைக்கோடல் நினக்கற மாவது ; எ-று. (உக)

௫௩ பாறு புரவியாப் பல்களிறு நீடிமிலாத்
தேறு திரைபறையாப் புட்படையாத்—தேருத
மன்கிளர்ந்த போலுங் கடற்சேர்ப்ப மற்றெமர்
முன்கிளர்ந் தெய்தன் முடி.

இதுவுமது.

இ-ள். பாறே குதிரையாக நீண்டதிமிலே பலகளிறுகளாகத் தெளிந் த திரையே பறையாகப் புட்களே படையாகத் தேருத வேந்துகள் படை யெழுந்து கிளர்ந்தனபோலுங் கடற்சேர்ப்பனே! எமருடைய முன்னேசெ ன்று இவளை நீயே புணர்தலை முடிப்பாயாக ; எ-று. (உஉ)

௫௪ வாராய் வரினீர்க் கழிக்கான லுண்மணன்மேற்
றேரின்மா காலாழுந் தீமைத்தே—யோரிலோர்
கோளுடல் வேண்டா குறியறிவார்க் கூஉய்க்கொண்டோர்
நாணாடி நல்குத னன்று.

இதுவுமது.

இ-ள். வாராதொழிவாயாக : வருவையாயின் நீர்க்கழிக்கானல்தான் நுண்மணன்மேல் நின்றேர் பூண்ட குதிரை காலாழுந்தீமையுடைத்தாத லான் ; ஒத்தகுலத்தார்க்குத் தொடர்ச்சிசோடலை ஐயுற்றுராய்தல்வேண்டா: நிமித்தமறிவாரையழைத்து நல்லதொருநாளை நாடி இவட்குநல்குதல் நன்று; எ-று. (உ௩)

௫௫ கண்பரப்ப காணாய் கடும்பனி கால்வறேர்
மண்பரக்கு மாயிருண் மேற்கொண்டு—மண்பரக்கு
மாறுநீர் வேலைநீ வாரல் வரினாற்று
ளேறுநீர் வேலை யெதிர்.

இதுவுமது.

இ-ள். இவளுடைய கண்களும் மிக்கநீர்பரப்பகாணாய்: கால்வலிய தே ரில் மண்ணெல்லாம் பரக்கும் பெரிய இருண்மேற்கொண்டு உலகமெல்லாம் நிவந்த அலர்பரக்குமாறு, நீருண்ட வேலையுடையாய்! வாரல்: வருவையாயின் இவளுயிர் வாழாள், ஓதமேறுநின்ற நீர்வேலையினெதிரே: எ-று. (உ௪)

ருரு கடற்கானற் சேர்ப்ப கழியுலாஅய் நீண்ட
வடற்கானற் புன்னைதாழ்ந் தாற்ற—மடற்கான
லன்றி லகவு மணிநெடும் பெண்ணைத்தெம்
முன்றி லிளமணன்மேன் மொய்த்து.*

எ-து தலைமகற்கு இரவுக்குறிநேர்ந்த தோழி இடங்காட்டியது.

இ-ள். கடற்கானற்சேர்ப்பனே! கழிகள்சூழ்ந்து நீண்ட மீன் கொலைகளையுடைய கானலின்கண் மிகவும்புன்னை தழைக்கப்பட்டு, பூவிதழையுடைய இக்கானலின்கண் உள்ள அன்றில்கள் அழையாநின்ற அழகியநெடும்பெண்ணையையுடைத்து, எம்மில்லத்தின்முன் இளமணல்களும் மொய்த்து; எ-று.

ருஎ வருதிரை தானுலாம் வார்மணற் கான
லொருதிரை யோடா வளமை—யிருதிரை
முன்வீழுங் கானன் முழங்கு கடற்சேர்ப்ப
வென்வீழல் வேண்டா வினி.

எ-து தோழி வரைவுகடாயது.

இ-ள். வருதிரை தான்வந்து உலவாநின்ற ஒழுகிய மணற்கானலின்கண் ஒருதிரைவந்து பெயர்வதற்குமுன்னே இரண்டுதிரைவந்து வீழாநின்ற கானலின்கண் வந்து முழங்குகடற்சேர்ப்பனே! என்னல் வந்து இப்புணர்ச்சியை விரும்பல்வேண்டா; இனிவரைந்து கொள்வாய்; எ-று. (உரு)

ருஅ மாயவனுந் தம்முனும் போலே மறிகடலுங்
கானலுஞ்சேர் வெண்மணலுங் காணுயோ—கான
லிடையெலா ஞாழலுந் தாழையு மார்ந்த
புடையெலாம் புன்னை புகன்று.

எ-து தலைமகற்குத் தோழி பகற்குறிநேர்ந்து இடங்காட்டியது.

இ-ள். மாயவனும் அவன் முன்னோனும் போல, மறிகடலும் கடற்சோலையும் அச்சோலையைச்சேர்ந்த வெண்மணலும் பாராயோ? அக்கடற்சோலையின் நடுவெல்லாம் ஞாழலுந் தாழையுமாயிருக்கும்: நிறைந்த மருங்கெல்லாம் புன்னையாயிருக்கும்: இவற்றையும் விரும்பிப்பாராய்; எ-று.

ருகூ பகல்வரிற் கவ்வை பலவாம் பரியா
திரவரி னேதமு மன்ன—புகவரிய

* "இரவுக்குறி யிடங்காட்டித் தோழி கூறியது" என்றார் நச்சினார்க்கினியரும். (தொல் கள, உ௩.)

தாழை துவளுந் தரங்கநீர்ச் சேர்ப்பிற்றே
யேழை நுளைய ரிடம்.

எ-து இப்போழுது வாரலென்று வரைவுகடாயது.

இ-ள். பகல் வருவாயாயின் அலர் பலவுமுளவாம்; அவ்வலர்க்கு இரங்காதே இரவுவருவையாயின் ஊறுவரும்: ஏதமும் பலவுளவாம்; உள்புகுதற்கரிய தாழையடர்ந்த திரைநீர்ச் சேர்ப்பையுடைத்து, எங்கள் ஏழைநுளையர் வாழுமிடம்; எ-று. (உ அ)

சூ0 திரையலறிப் பேராத் தெழியாத் திரியாக்
கரையலவன் காலினாற் காணுக்—கரையருகே
நெய்தன் மலர்கொய்யு நீணெடுங் கண்ணினாண்
மைய னுளையர் மகள்.

எ-து பாங்கற்குத் தலைமகன் கூறியது.

இ-ள். திரைகள் அலறிப்பெயரும்வகை தெழித்துத்திரிந்து கரையின்கண் அலவன்களைத் தன் காலினாலாராய்ந்து, கரையருகே நின்ற நெய்தன் மலர்களைக் கொய்யாநிற்கும் நீளிய நெடுங்கண்ணினாள் நுளையருடைய மையன் மகள்; எ-று. (உ கூ)

சூக அறிகரிதி யார்க்கு மரவநீர்ச் சேர்ப்ப
நெறிதிரிவா ரின்மையா லில்லை—முறிதிரிந்த
கண்டலந்தண் டில்லை கலந்து கழிசூழ்ந்த
மிண்டலந்தண் டாழை யிணைந்து.

எ-து தலைமகற்குத் தோழி இரவுக்குறிமறுத்தது.

இ-ள். யார்க்கும் அறிதலரிது, ஓசையையுடைய நீர்ச்சேர்ப்பனே! எங்குந்திரிவாரில்லாமல் வழியில்லை: தளிர் சுருண்டிருந்த கண்டலும், அழகிய தண்டில்லைகளும், தம்முண் மிடைந்து கழியைச் சூழ்ந்த மிண்டன் மரங்களும், தாழைகளும் இடைப்பட்டு; எ-று. (ங0)

சூஉ வில்லார் விழவினும் வேலாழி சூழுலகி
னல்லார் விழவகத்து நாங்காணே—நல்லா
யுவர்க்கத் தொரோவுதவிச் சேர்ப்பனைப் பாரைச்
சுவர்க்கத் துளராயிற் சூழ்.

**எ-து தலைமகளை ஒருநாட் கோலஞ்செய்து. அடியிற்கொண்டு முடிகாறு நோக்கி 'இவட்குத் தக்கான் யாவனுவன்கொல்லோ' என்றாராய்ந்த செவிலிக் குத் தோழி அறத்தொடுநின்றது.**

**இ-ள்.** *வில்லுழவர் காரணமாகத் தொடங்கிய விழவகத்தும் நல்லா ராகிய வனிதையர் காரணமாகத் தொடங்கிய விழவகத்தும் எல்லா மாந் தருந்திரள்வராதலால், நாங்கள் அங்குக் கண்டறியேம், எமக்கு ஒருதவி பண் டொருநாட் செய்த சேர்ப்பனேடொப்பாரை; மற்றவனே இவட்குத்தக் கான்: அவனைப்போலும் ஆடவர் சுவர்க்கத்துளராயின் ஆராய்வாய்;* **எ-று.**

*உவர்க்கம் என்பது கடற்கரை. வேலாழி என்பது கடல்.* (௩௧)

நெய்தன் முற்றிற்று.

## ௩—பாலை.

*௩௩ எரிநிறநீள் பிண்டி யிணரின மெல்லாம்*
*வரிநிற நீள்வண்டர் பாடப்—புரிநிறநீள்*
*பொன்னணிந்த கோங்கம் புணர்முலையாய் பூங்தொடித்தோ*
*ளென்னணிந்த வீடில் பரப்பு.*

**எ-து தலைமகளைத் தோழி பருவங்காட்டி வற்புறீஇயது.**

**இ-ள்.** *எரிநிறத்தையுடைய அசோகின் பூங்கொத்தினமெல்லாம்: வரி நிறத்தையுடைய வண்டுகள் இளியென்னும் பண்ணைப்பாட விரும்பப்படு கின்ற நீண்ட மிக்க பொன்போன்ற மலர்களையணிந்தன, கோங்கமெல் லாம்: ஆதலாற் பொருந்திய முலையினையுடையாய்! நின்னுடைய பூங்தொடித் தோள்கள் யாதின் பொருட்டு அணிந்தன? தமக்குத் தகுதியில்லாத பசப் பினை;* **எ-று.** (௧)

*௩௪ பேணு யிதன்றிறத் தென்றாலும் பேணாதே*
*நாணுய நல்வளையாய் நாணின்மை—காணு*
*யெரிசிதறி விட்டன்ன வீர்முருக் கீடில்*
*பொரிசிதறி விட்டன்ன புன்கு.*

**இதுவுமது.**

**இ-ள்.** *'நீ யுறுகின்ற துன்பத்தைப் பாதுகாவாய்' என்று யான் சொன் னாலும் பாதுகாவாதே நாணத்தகும் ஆற்றாமை செய்த நல்வளையாய்! நீயு முன்பு நாணின்மை செய்தாயென்பதனை இனியறிந்து கொள்ளாய்; எரியைச்*

சிதறிவிட்டாற் போலவிருந்த, ஈர்முருக்குக்கள்: கனமில்லாத பொரி சிதறி விட்டாற் போலப் பூத்தன, புன்குகள்: ஆதலான் அவர் சொல்லிய பருவம் இது காண்; எ-று. (உ)

சரு தான்றாயாய் கோங்கந் தளர்ந்து முலைகொடுப்ப
வீன்றாய்நீ பாவை யிருங்குரவே—யீன்றாண்
மொழிகாட்டா யாயினு முள்ளெயிற்றாள் சென்ற
வழிகாட்டா யீதென்று வந்து.

எ-து சுரத்திடைச் சென்ற செவிலித்தாய் குரவோடு புலம்பியது.

இ-ள். கோங்கந் தான் தாயாகத் தாழ்ந்து முலை கொடுத்து வளர்ப்ப நீ பாவையினையீன்ற இத்துணையேயாதலான், இருங்குரவே! யானீன்றாள் நினக்குச் சொல்லிய சொல்லை யெனக்குச் சொல்லாயாயினும் முள்ளெயிற் றாள் போயினவழியையாயினும் சொல்லிக்காட்டாய் வந்து இது என்று; எ-று. (ந)

சசு வல்வருங் காணாய் வயங்கி முருக்கெல்லாஞ்
செல்வர் சிறார்க்குப்பொற் கொல்லர்போ—னல்ல
பவளக் கொழுந்தின்மேற் பொற்றாலி பாஅய்த்
திகழக்கான் றிட்டன தேர்ந்து.

எ-து தோழி பருவங் காட்டி வற்புறுத்தியது.

இ-ள். நங்காதலர் விரைந்து வருவர்: விளங்கி முருக்குக்களெல்லாம், செல்வமுடையார் புதல்வர்க்குப் பொற்கொல்லர் ஐம்படைத்தாலி செய்தாற் போல, மிக்க பவளக்கொழுந்தின் அடியிலே பொற்றாலியைப் பதித்து வைத் தாற்போல்விளங்கக் கான்றன: ஆதலாற் றேர்ந்து பாராய்; எ-று. (ச)

சஎ வெறுக்கைக்குச் சென்றார் விளங்கிழாய் தோன்றார்
பொறுக்கவென் றாற்பொறுக்க லாமோ—வொறுப்பபோற்
பொன்னு ளுறுபவளம் போன்ற புணர்முருக்க
மென்னு ளுறுநோய் பெரிது.

எ-து பருவங்கண்டு ஆற்றளாகிய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

இ-ள். மிக்க பொருட்பொருட்டுச் சென்றார், விளங்கிழையாய்! வந்து தோன்றுகின்றிலர்; இப்பருவத்தின்கண் நீயென்னை ஆற்று என்றால் எனக்கு ஆற்றலாமோ? என்னை ஒறுப்பனபோலப் பொன்னின் உள்ளுறவைத்த பவ ளம்போன்ற, பொருந்தியமுருக்கம்பூக்கள்; ஆதலால் என்னுள்ளத்துற்ற நோய் பெரிது; எ-று. (ரு)

சுஅ சென்றக்காற் செல்லும்வா யென்னோ விருஞ்சுரத்து
நின்றக்கா னீடி யொளிவிடா—நின்ற
விழைக்கமர்ந்த வேயே ரிளமுலையா ளீடில்
குழைக்கமர்ந்த நோக்கின் குறிப்பு.

**எ-து. பொருள்வலித்த நெஞ்சிற்குத் தலைமகன் சொல்லிச் செலவழுங்கியது.**

**இ-ள்.** பொருளின் பொருட்டு நாமிவளை நீங்கிப்போயக்காற் போம் வகை யெங்ஙனேயோ? நெஞ்சே! மன்னிய அணிகட்குத் தக்க அழகையுடைய இளமுலையாளுடைய ஒப்பில்லாத குழைக்கமர்ந்த நோக்கின் குறிப்புக்கள் நம்முன்னே வந்து நீடியொளிவிட்டு இருஞ்சுரத்திடையே தோன்றி நின்றக்கால்; **எ-று.** (சு)

சுகூ அத்த நெடிய வழற்கதிரோன் செம்பாக
மத்தமறைந் தானிவ் வணியிழையோ—டொத்த
தகையினா லெஞ்சீறூர்த் தங்கினிரா னாளை
வகையினிராய்ச் சேறல் வனப்பு.

**எ-து. இடைச்சுரத்துக் கண்டார் செலவு விலக்கியது.**

**இ-ள்** வழிகளும் நெடிய: அத்தமலையின்கண்ணே அழற்கதிரோனுஞ் செம்பாகம் மறைந்தான்: இவ்வணியிழையோடு நீரும் எம்மோடொத்த தகையினால் எஞ்சீறூரிலே இன்று தங்கினீராய் நாளை எங்களினீங்கிப்போதலழகு; **எ-று.** (எ)

எ0 நின்னோக்கங் கொண்டமான் றண்குரவ நீழல்காண்
பொன்னோக்கங் கொண்டபூங் கோங்கங்காண்—பொன்னோ
கொண்ட சுணங்கணி மென்முலைக் கொம்பன்னாய் [க்கங்
வண்ட லயர்மணன்மேல் வந்து.

**எ-து. புணர்ந்துடன் போய தலைமகன் தலைமகளை ஆற்றுவித்துக்கொண்டுபோவான் சொல்லியது.**

**இ-ள்.** நின்னுடைய நோக்கின்றன்மையைக் கொண்ட மான்களைப் பாராய்: குளிர்ந்த குரவநீழலைப்பாராய்: பொன்னினது காட்சியைக்கொண்ட பூங்கோங்குகளைப் பாராய்; பொன்னினது காட்சியைக் கொண்ட சுணங்கணிந்த மென்முலையையுடைய கொம்பன்னாய்! மணன்மேல் வந்து விளையாட்டை விரும்பாய்; **எ-று.** (அ)

௭௧ அஞ்சுடர்நீள் வாண்முகத் தாயிழையு மாறிலா
வெஞ்சுடர்நீள் வேலானும் போதரக்கண்—டஞ்சி
யொருசுடரு மின்றி* யுலகுபா ழாக
விருசுடரும் போந்தனவென் றார்.†

**எ-து. சுரத்திடைச் சென்ற செவிலிக்குத் தலைமகனையுந் தலைமகளையும் கண்டார் சொல்லிய வார்த்தையைத் தாங்கள் கேட்டார்க்குச் சொல்லி யாற்றுவித்தது.**

**இ-ள்.** அழகிய மதிபோன்ற நீண்ட ஒளியையுடைய முகத்தாயிழையும் எதிரில்லாத வெஞ்சுடர்நீள்வேலானும் இச்சுரத்தின்கண்ணே போதரக்கண்டு அஞ்சி இருசுடரும் ஒரு சுடருமின்றியே உதயம் பாழாம்வகை இருசுடரும் அச்சுரத்தே போந்தன என்று கண்டார் சிலர் சொன்னார்; **எ-று.**

௭௨ முகந்தா மரைமுறுவ லாம்பல்கண் ணீல
மிகந்தார் விரல்காந்த ளென்றென்—றுகந்தியைந்த
மாழைமா வண்டிற்கா நீழல் வருந்தாதே
யேழைதான் செல்லு மினிது.

**எ-து. சுரத்திடைச்சென்ற செவிலியைத் தலைமகளைக்கண்டார்சொல்லி ஆற்றுவித்தது.**

**இ-ள்.** இவள் முகம் தாமரை மலர், இவள் முறுவலையுடைய வாய் ஆம்பல் மலர், இவள் கண் நீலமலர், ஒன்றையொன்றொவ்வாது கடந்தார்ந்த விரல்கள் காந்தளரும்பு என்று கருதிக் காதலித்துப் பொருந்திய மாழைமா வண்டிற்குத்தக்க நீழலிலே வருத்தமின்றி நின்னுடைய ஏழை செல்லாநின்றாள் இனிதாக; **எ-று.** (௪௦)

௭௩ செவ்வாய்க் கரியகட் சீறினுற் கேளாதுங்
கவ்வையாற் காணு மாற்றுறு—மவ்வாயந்
தார்த்தத்தை வாய்மொழியுந் தண்கயத்து நீலமு
மோர்த்தொழிந்தா ளெண்பேதை யூர்ந்து.

* 'யிலகு' எனவும் பிரதிபேதம்.

† இஃது இடைச்சுரத்துக் கண்டோர்கூறிய வார்த்தையைக் கேட்டோராகச் சிலர் கூறியது என்றார் நச்சினார்க்கினியரும். (தொல். அகத். ௪0)

**எ-து. முன்னொருநாளுடன்போக்குவலித்துத் தலைமகனையுந் தலைமகளையும் உடன்படுவித்துப் பின்னை அறத்தொடுநிலை மாட்சிமைப்பட்டமையாற் றலைமகளைக் கண்டு தோழி உடன்போக்கு அழுங்குவித்தது.**

**இ-ள்.** *செவ்வாயின்கட் டார்த்தத்தை வாய்மொழியைக் கேளாதுங் கரிய கண்ணின்கட் டண்கயத்து நீலங்களின் றன்மைகளைக் காணாதும் அவ்வாயம் ஆற்றாதொழிவதனை யோர்த்துப் பின்புடன்போக்கை யொழிந்தாள் என்பேதை அலர்காரணத தான் முன்புடன்போக்கை மேற்கொண்டு;* **எ-று.**

எச *புன்புறவே சேவலோ டுடல் பொருளன்று*
*லன்புற வேயுடையா ராயினும்—வன்புற்*
*றதுகா ணகன்ற வழிநோக்கிப் பொன்போர்த்*
*திதுகாணென் வண்ண மினி.*

**எ-து. காமம் மிக்க கழிபடர்கிளவி; நிலத்தாற்பாலை; ஒழுக்கத்தான் நெய்தல்.**

**இ-ள்.** *புல்லியநிறத்தையுடைய பேடைப் புறவே! நின்சேவலோடுடல் நினக்குக்காரியமன்றால்; எங்காதலர் எமக்கன்புமிகவுடையாராயினும் அவர் மனநெகிழாது வலியரான தன்மையைப் பாராய்; அவர் தேரோடும்வந்து நீங்கிய வழிச்சுவடு நோக்கிப் பொன்னிறம் போர்க்கவந்த வண்ணமிதனைப்பாராய், இப்பொழுது;* **எ-று.** (கஉ)

எரு *எரிந்து சுடுமிரவி யீடில் கதிரான்*
*விரிந்து விடுகூந்தல் வெஃகாப்—புரிந்து*
*விடுகயிற்றின் மாசுணம் வீயுநீ ளத்த*
*மடுதிறலான் பின்சென்ற வாறு.*

**எ-து. மகட்போக்கிய தாய் சொல்லியது.**

**இ-ள்.** *அழன்று சுடாநின்ற பகலோனது ஒப்பிலாக் கதிரான் மாசுணங்கள் முறுக்கிவிட்ட கயிறுபோலப் புரண்டழியும் அத்தம், விரிந்துவிட்ட கூந்தலையுடையாள் அடுதிறலான்பின் விரும்பிச்சென்ற வழி;* **எ-று.** (கங)

எசு *நெஞ்ச நினைப்பினு நெற்பொரியு நீளத்த*
*மஞ்ச லெனவாற்றி னஞ்சிற்று—லஞ்சிப்*
*புடைநெடுங் காதுறப் போழ்ந்தகன்று நீண்ட*
*படைநெடுங்கண் கொண்ட பனி.*

எ-து. பொருள்வலித்த நெஞ்சிற்குச் சொல்லித் தலைமகன் செலவழுங்கியது.

இ-ள். என்னெஞ்சமே! இவளை ஆற்றுவிக்குஞ் சிலசொற்களைச் சொல்ல நினைக்கின்றாயாயின் இவளுடைதான் நெற்பொரியும் நீளத்தத்தைச் சொல்ல நினைப்பதற்குமுன்னே பிரிவினையஞ்சிற்றால்; புடைநெடுங்காதுறப் போழ்ந்தகன்று நீண்ட படைநெடுங்கண்களும் 'பிரிவினையஞ்சிப் பனிகொண்டன; ஆதலான், நமக்கிவளைப் பிரிய முடியாது; எ-று. (கச)

எஎ வந்தாற்றான் செல்லாமோ வாரிடையாய் வார்கதிரால்
வெந்தாற்போற் றோன்றுநீள் வேயத்தந்—தந்தார்
தகரக் குழல்புரளத் *தாழ்துகில்கை யேந்தி
மகரக் குழைமறித்த நோக்கு.†

எ-து. வினைமுற்றிய தலைமகன் தலைமகளை நினைந்தவிடத்துத் தலைமகள்வடிவு தன்முன்னின்றற்போலவந்துதோன்ற அவ்வடிவை நோக்கிச் சொல்லி ஆற்றுவிக்கின்றது.

இ-ள். கொண்டணிந்து நிறையப்பட்ட தகரத்தையுடைய குழல்கள் அசையத் தாழ்ந்து துகிலைக் கையானே ஏந்தி மகரக்குழை மறித்த நோக்குடனே நீ வந்தால் யாம் போகோமோ? அரிய இடையினையுடையாய்! நீயிரங்க வேண்டா; எ-று. (கரு)

எஅ ஒருகை யிருமருப்பின் மும்மதமால் யானை
பருகுநீர் பைஞ்சுனையிற் காணு—தருகல்
வழிவிலங்கி வீழும் வரையத்தஞ் சென்றா
ரழிவில ராக வவர்.

எ-து. ஆற்றளெனக் கவன்ற தோழிக்கு ஆற்றுவல் என்பதுபடச் சொல்லியது.

இ-ள். ஒரு கையினையும் இருகோட்டினையும் மூன்றுமதத்தினையும் உடைய மால்யானைகள் பருகுநீரைப் பைஞ்சுனையின்கட் காணுவாய் மருங்கே வழிவிலங்கித் தளர்ந்துவீழும் வரைகளையுடைய அத்தத்தைச் சென்ற அவர் அவ்வழி இடையூறின்றி அழிவிலராக; எ-று. (கசு)

* 'தாழ்கலையை' எனவும் பிரதிபேதம்.

† இஃது உருவுவெளிப்பாடு. நின்னொடு போதுவேனென்று அவளை ஆற்றுவித்தது. திணை பாலையிற்பாலையென்றார்: நச்சினார்க்கினியர். (தொல். அகத். ௪0)

எகூ சென்றார் வருதல் செறிதொடி சேய்த்தன்று
னின்றார்சொற் றேறாதாய் நீடின்றி—வென்று
ரெடுத்த கொடியி னிலங்கருவி தோன்றுங்
கடுத்த மலைநாடு காண்.

**எ-து பருவங்காட்டித் தலைமகளைத் தோழி வற்புறுத்தியது.**

**இ-ள்.** நம்மைப் பிரிந்துபோயினார் வருதல் செறிதொடி! சேய்த்தன்றால், நின்மாட்டு நின்றொழுகுகின்றாருடைய சொற்களைத் தெரியாதாய் போரின்கண் வென்றாரெடுத்த கொடிகள் போல தெளிந்திலங்கருவி தோன்றாநின்றது மிக்க மலைநாடாதலால் நீடின்றி யின்றே யிரவின்கட் காண்பாயாக **எ-று.** (கஎ)

அ0 உருவவேற் கண்ணா யொருகாற்றேர்ச் செல்வன்
வெருவிவீந் துக்கநீ ளத்தம்—வருவர்
சிறந்து பொருடருவான் சேட்சென்றா ரின்றே
யிறந்துகண் ணாடு மிடம்.

**இதுவுமது.**

**இ-ள்.** அஞ்சத் தக்க வேல்போன்ற கண்களையுடையாய்! ஒருகாலையுடைய தேர்ச்செல்வனார் பிறர் கண்டார் வெருவும் வகை வீந்தவிந்த கானந் தானே முயற்சியாற் சிறந்து பொருடருவான்வேண்டிச் சென்றவர் இன்றே வருவர்; மிக்குக் கண் இடமாடா நின்றது; **எ-று.** (கஅ)

அக கொன்றாய் குருந்தே கொடிமுல்லாய் வாடினீர்
நின்றே னறிந்தே னெடுங்கண்ணாள்—சென்றாளுக்
கென்னுரைத்தீர்க் கென்னுரைத்தாட் கென்னுரைத்தீர்க்
மின்னிரைத்த பூண்மிளிர விட்டு. [கென்னுரைத்தாண்

**எ-து. தலைமகள் இற்செறிப்புக் கண்டபின்னை அவள் நீங்கிய புனங்கண்டு ஆற்றாய் மீள்கின்ற தலைமகன் சொல்லியது. சுரத்திடைச்சென்ற செவிலித்தாய் சொல்லியதூஉமாம்.**

**இ-ள்.** கொன்றாய்குருந்தே: கொடிமுல்லாய் நீர்வாடிநின்றீர்: இதற்கு காரணம் யானறிந்தேன்: நெடுங்கண்ணாளிங்கு நின்று போகின்றாட்கு நீரென்னுரைத்தீர்? நுமக்கு அவளென்னுரைத்தாள்? அவட்கு நீர் பின்னை என்னுரைத்தீர்? அவள் உமக்குப் பின்னை என்னுரைத்தாள், மின்னிரைத்த பூண்விட்டு மிளிராநின்று? **எ-று.** (கக)

அ௨ ஆண்கட னுமாற்றை யாயுங்கா லாடவர்க்குப்
பூண்கடனுப் போற்றிப் புரிந்தமையாற்—பூண்கடனுச்
செய்பொருட்குச் செல்வராற் சின்மொழி நீசிறிது
நைபொருட்கட் செல்லாமை நன்று.

**எ-து தலைமகனது செலவுக்குறிப்பறிந்து ஆற்றுளாய தலைமகளைத்தோழி உலகினதியற்கை கூறி ஆற்றுதுடன்படுத்துவித்தது.**

**இ-ள்.** ஆள்வினைக்கடனுகிய நெறியைஆராயுங்கால், ஆடவர்க்குப்பூணுங்கடனுகப் பாதுகாத்து நல்லார் சொல்லி மேவினமையாற் றமக்கு அவ்வாள் வினை பூணுங்கடனுகத் தேடும்பொருட்குச் செல்வர் நங்காதலர்: ஆதலாற் சின்மொழியையுடையாய்! நீயதற்கு மனனழியுந் திறத்தின்கட் செல்லாமை நன்று; **எ-று.** (௨0)

அ௩ செல்பவோ சிந்தையு டாகாதா னெஞ்செரியும்
வெல்பவோ சென்றூர் வினைமுடிய—நல்லா
யிதடி கரையுங்கன் மாபோலத் தோன்றிச்
சிதடி கரையுந் திரிந்து.

**எ-து தலைமகன் செலவுணர்த்திய தோழிக்குத் தலைமகள் உடன்படாது சொல்லியது.**

**இ-ள்.** இப்பெற்றித்தாகிய சுரத்தின்கட் செல்வாருளரே? நினைத்தலுமாகாதால்: நினைத்த நெஞ்சும் எரியும்: மாறிச்சுரத்தின்கட் சென்றூர் சுரத்தை வெல்லவல்லரோ? தாமெடுத்துக்கொண்ட வினைமுடியும்படி; நல்லாய்! காட்டெருமைப்போத்துக்களைப் பிரிந்தபெண்ணெருமைகள் கதறுநிற்கும்: அங்குப் பலவாய்க்கிடந்த கற்களும் மா பறந்தாற்போலத்தோன்றும்: சிள்வீடுகளும் திரிந்து கதறுநிற்கும் ஆதலான்; **எ-று.** (௨௧)

அச கள்ளியங் காட்ட கடமா விரிந்தோடத்
தள்ளியுஞ் செல்பவோ தம்முடையார்—கொள்ளும்
பொருளில ராயினும் பொங்கெனப்போந் தெய்பு
மருளின் மறவ ரதர்.

**இ-ள்.** கள்ளியங்காட்டின்கட் கடமாக்கள் இரிந்தோடும்வகை மறந்துஞ் செல்வரோ தம்மறிவையுடையார்: வழிபோம் வம்பலராற் கொள்ளும் பொருளிலாராயினும் கதுமெனப் போந்தெய்கின்ற அருளில்லாத மறவர் வாழும் வழியை; **எ-று.** (௨௨)

அ௫ பொருள்பொரு ளென்றார்சொற் பொன்போற் போற்றி
யருள்பொரு ளாகாமை யாக—வருளான்
வளமை கொணரும் வகையினான் மற்றோ
ரிளமை கொணர விசை.

எ-து தலைமகனைத் தோழி செலவழுங்குவித்தது.

இ-ள். பொருள் பொருளாவதென்று சொன்னார் சொல்லைப் பொன்போல விரும்பித்தெளிதலான், அருளுடைமை பொருளாகாமை ஆவதாயினும் ஆக; பொருளைக்கொணரும் வகைமைபோல நின்னருளினாலேவேறோரிளமை கொணர்தற்கு எமக்குடன்படுவாயாக; எ-று. (உ௩)

அ௬ ஒல்வா ருளரே லுரையா யொளியாது
செல்வாரென் றாய்நீ சிறந்தாயே—செல்லா
தசைந்தொழிந்த யானை பசியாலாட் பார்த்து
மிசைந்தொழியு மத்தம் விரைந்து.

எ-து தலைமகள் தோழிக்குச் செலவுடன்படாது சொல்லியது.

இ-ள் ஆற்றுவாருளராயின் அவர்பிரிவின் அவர்கட்குரையாய்தவிராதே நங்காதலர் செல்வாரென்றாய் ஆதலால் நீயெனக்கு மெய்யாகச் சிறந்தாயேயன்றோ; போகமாட்டாதே வருந்தியிறந்து வீழ்ந்த யானைகளை அங்குள்ளவர்கள் தம்பசியானே எங்கும் பார்த்துத்தின்றுபோம்அத்தத்தினை விரைந்து; எ-று (உ௪)

அ௭ ஒன்றானு நாமொழிய லாமோ செலவுதான்
பின்றாது பேணும் புகழான்பின்—பின்றா
வெலற்கரிதாம் வில்வலான் வேல்விடலை பாங்காச்
செலற்கரிதாச் சேய சுரம்.

எ-து புணர்ந்துடன் போக்கு நயப்பித்த தோழிக்குத் தலைமகள் உடன்பட்டுச் சொல்லியது.

இ-ள் பிறழாத வெலற்கரிதாகிய வில்லினை வல்லனாகிய வேல்விடலைதான் துணையாகச் சுரத்தைச் செலற்கரிதாக யாதானுஞ் சொல்லலாமோ? அப்பேணும் புகழான்பின் சேறல் ஒழுக்கத்திற் பிறழாது காண்; எ-று (உ௫)

அ௮ அல்லாத வென்னையுந் தீரமற் றையன்மார்
பொல்லாத தென்பது நீபொருந்தா—யெல்லார்க்கும்
வல்லி யொழியின் வகைமைநீள் வாட்கண்ணாய்
புல்லி யொழிவான் புலந்து.

என்-து புணர்ந்துடன் போவா ளேருப்பட்ட தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

இ-ள் எம்பெருமானோடு பொருந்தி இங்குநின்றும் ஒழிந்து போதற்கு முன்பு வேறுபட்டு மற்றதன்கண் அல்லாத வென்னை நீயிங்கேயிருந்து நம் ஐயன்மார் பொல்லாததென்று கொள்ளும் மனத்தின்கண்ணுள்ள கோளினையுந் திருத்தி நீபொருந்தாய் எல்லார்க்குந் தத்தமனத்தின்க ணுள்ள வேறுபாடொழியுமாயின் வல்லிபோன்றிருவாட்கண்ணாய்; என்-று. அல்லதூஉம் உடன்போகின்ற என்னைப் புல்லிக் கொண்டொழிவான் வேண்டி மனத்தின்கட் புலந்து நீங்குதற்கு வல்லையாயொழியின் வகைமையை யுடைய நீண்ட வாட்கண்ணாய்! ஆண்மை யல்லாத வுரைகளை என்னைநீக்கி நம்மையன்மார் பொல்லாத தென்னுங் கருத்தினையும் நீக்கி எல்லார்க்கும் பொருந்துவாயாக; என்றுமாம். (உசு)

௮௬ நண்ணிநீர் சென்மி னமரவ ராபவே
லெண்ணிய வெண்ண மெளிதரோ — வெண்ணிய
வெஞ்சுட ரன்னானை யான்கண்டேன் கண்டாளாந்
தண்சுட ரன்னாளைத் தான்.*

என்-து சுரத்திடைச் சென்ற செவிலித்தாய் தலைமகனையுந் தலைமகளையுங் கண்டமை எதிர்ப்பட்டார் சொல்லி ஆற்றுவித்தது.

இ-ள் பொருந்தி நீர் சென்மின்: அவரும் நமக்குச்சுற்றத்தாராயின் நீர் அவரைச் சென்றெய்த வேண்டுமென்று எண்ணிய எண்ணம் எளிது: நீர் கருதிய வெய்ய பகலோனன்னானை யான்கண்டேன், கண்டாளாம் தண்மதியனையாளை யிவள்தான் என்-று. (உஎ)

௯௦ வேறுக நின்னை வினவுவேன் றெய்வத்தாற்
கூறுயோ கூறுங் குணத்தினாய் - வேறுக

* "மீண்டா ரெனவுவந்தேன் கண்டு நும்மையிம் மேதகவே, பூண்டா ரிருவர்முன் போயின ரேபுலி யூரெனைநின், றாண்டா னருவரை யாளியன் னானைக்கண் டேனயலே, தூண்டா விளக்கனை யாயென்னை யோவன்னை சொல்லியதே" என்னுந் திருச்சிற்றம்பலக்கோவையினையும் (உ௪௪) ஈண்டைக்கு நோக்கிக் கொள்க.

வென்மனைக் கேறக் கொணருமோ வெல்வளையைத்
தன்மனைக்கே யுய்க்குமோ தான்*

எ-து †'தன்னு மவனும்' என்பதனுள் 'நன்மை தீமை' என்பதனால் நற்றாய் படிமத்தாளை வினயது.

இ-ள். நிமித்தஞ் சொல்வார் பலருள்ளும் நின்னை வேறாகக்கொண்டு வினவாநின்றேன்: உன்னுடைய தெய்வத்தன்மையுடைய கழங்காற் பார்த்துக்கூறாய்; உலகத்தார் கூறும் நற்குணத்தினையுடையனாய் எல்வளையை உடன்கொண்டுபோனவன் என் மனைக்கே மணஞ்செய்வதாகக் கொண்டு வருமோ? அஃதன்றி யாம்வேறாகத் தன் மனைக்கே மணஞ்செய்யக் கொண்டுபோமோதான்; எ-று. (உஅ)

௬௧ கள்ளிசார் காரோமை நாரில்பூ நீண்முருங்கை
நள்ளியவேய் வாழ்பவர் நண்ணுபவோ—புள்ளிப்
பருந்து கழுகொடு வம்பலர்ப் பார்த்தாண்
டிருந்துறங்கி வீயு மிடம்.

எ-து தலைமகன்செலவுடன்படாததலைமகள் தோழிக்குச் சொல்லியது.

இ-ள். புள்ளிப் பருந்துகள் கழுகுடனே வழிபோவாரைப்பார்த்து அங்கிருந்துறங்கப்பட்டுக் கள்ளியுஞ் சாருங் காரோமையும் நாரில்பூ நீண்முருங்கையும் வேயும் பொருந்தியமர்ந்து வீயுமிடத்தை உயிர் வாழ்பவர் நண்ணுவரோ; எ-று. (உகூ)

௬௨ செல்பவோ தம்மடைந்தார் சீரழியச் †சிஃடுவன்றிக்
கொல்பபோற் கூப்பிடும் வெங்கதிரோன்—மல்கிப்
பொடிவெந்து பொருங்கிமேல் வான்சுடுங் கீழா
லடிவெந்து கண்சுடு மாறு.

---

* 'அருஞ் சுர மிறந்த' என்னும் அகப்பாட்டினுள்ளும் 'ஆகுவ தறியுமுதுவாய் வேல, கூறுக மாதோ நின்கழங்கின் றிட்ப, மாறாது வருபனி கழுமுங் கங்குலி, ஞனது துயருமென் கண்ணினிது படீஇய, வெம்மனை முந்துறத் தருமோ, தன்மனை யுய்க்குமோ யாதவன் குறிப்பே' என வருதல் காண்க.

† "தன்னு மவனு மவளுஞ் சுட்டி, மன்னு நிமித்த மொழிப்பொருடெய்வ, நன்மை தீமை யச்சஞ் சார்தலென், றன்ன பிறவு மவற்றொடு தொகைஇ" என்பது தொல்காப்பியம். (அகத். ௩௬)

† 'சிற்றுவன்றி' எனவும் பிரதிபேதம்.

இதுவுமது.

இ-ள். தம்மையடைந்தார் சீர்மையழிய நல்லார் செல்வரோ? சின் வீடு கள் நெருங்கிக் கடியவோசையாற் பிறரைக் கொல்வனபோலக் கூப்பிடா நிற்கும் வெய்ய வெயிலோன் மிக்குப்பொடிகள் வெந்து பொங்கி மேலே விசும்பினைச் சுடாநிற்கும், கீழின்கண் வழிபோவார் அடி வேவ அவர் கண் களைச் சுடாநிற்கும் இப்பெற்றிப் பட்ட அவ்வழியினை; எ-று. (௩௦)

பாலை முற்றியது.

## ௪-முல்லை.

௩௧ கருங்கடன் மாந்திய வெண்டலைக் கொண்மூ
இருங்கடன்மா கொன்றான்வேன் மின்னிப்—*பெருங்கட
றன்போன் முழங்கித் தளவங் குருந்தணைய
வென்சொல்யா னாற்றும் வகை.

எ-து பருவங்கண்டழிந்த தலைமகள் தோழிக்குரைத்தது.

இ-ள். கருங்கடலைப் பருகிய வெண்டலை முகில்கள் இருங்கடலின்கண் ணே புக்கு மாவினைக்கொன்ற முருகன் வேல்போல மின்னிப் பெருங்கட றன்னைப்போல முழங்குதலால் முல்லைக்கொடிகளெல்லாம் குருந்தமரத்தின் மேற் சென்றணையக்கண்டு யான் ஆற்றுந்திறம் என்னைகொல்லோ? எ-று. (௧)

௩௪ பகல்பருகிப் பல்கதிர் ஞாயிறுகல் சேர
இகல்கருதித் திங்க ளிருளைப்—பகல்வர
வெண்ணிலாக் கான்ற மருண்மாலை வேய்த்தோளா
யுண்ணிலா தென்னுவி யூர்ந்து.

இதுவுமது.

இ-ள். பகற்பொழுதைப் பருகிப் பல்கதிர்ஞாயிறு மலையின்கட்சேரத் திங்களானது இருளைப் பகையென்றுகருதிப் பகலின்றன்மைவர வெண்ணி லாவையுகாநின்ற மருண்மாலையின்கண், வேய்த்தோளாய்! என்னிடத்து நிலைகின்றதில்லை, என்னுயிர் சென்று: எ-று. (௨)

* 'பொருங்கடல்' பிரதிபேதம்.

கூ௫ மேனோக்கி வெங்கதிரோன் மாந்தியநீர் கீழ்நோக்கிக்
காேனாக்கங் கொண்டழகாக் காண்மடவாய்—மானோக்கி
போதாரி வண்டெலா நெட்டெழுத்தின் மேற்புரியச்
சாதாரி நின்றறையுஞ் சார்ந்து.

**எ-து தோழி தலைமகளைப் பருவங்காட்டி வற்புறுத்தியது.**

இ-ள். வெங்கதிரோன் மேனோக்கிப் பருகியநீர் கீழ்நோக்குதலால் காடெல்லாம் ஒக்கங்கொண்டழகாகப் போதுதோறும் அரிவண்டுகள் நெட்டெழுத்தோசைமேல் மேவிச் சாதாரியென்னும்பண்ணினைச் சார்ந்தொலியாநின்றன; மானோக்கி இதனைக் காணாய்; எ-று.

அல்லதூஉம் 'போதாரி வண்டெலாம்' என்பது போதினைப்பரந்து இவ்வண்டெல்லாம் என்றவாறு. (௩)

கூசு இருள்பரந் தாழியான் றன்னிறம்போற் றம்மு
னருள்பரந்த வாய்நிறம் போன்று—மருள்பரந்த
பால்போலும் வெண்ணிலவும் பையர வல்குலாய்
வேல்போலும் வீழ்துணையி லார்க்கு.

**எ-து மாலைப்பொழுது கண்டு ஆற்றளாய தலைமகள் தோழிக்குச்சொல்லியது.**

இ-ள். சக்கரத்தையுடைய மாயவனிறம்போல எங்குமிருள் பரந்து, அம்மாயவன் முன்னோனுடைய நிறம்போன்று வியப்புமிக்க பானிறமும் போன்ற வெண்ணிலாவும், பையரவல்குலாய்! இவ்விரும்பப்படுந்துணையில்லாதார்க்கு வேல்போலும்; எ-று. (௪)

கூஎ பாழிபோன் மாயவன்றன் பற்றார் களிற்றெறிந்த
வாழிபோல் ஞாயிறு கல்சேரத்—தோழியோ
மான்மாலை தம்மு னிறம்போன் மதிமுளைப்ப
யான்மாலை யாற்றே னினைந்து.

இதுவுமது.

இ-ள். தனக்கு வலிபோலக் கருதி மாயோன் பற்றார்களிற்றின் முகத தெறிந்த சக்கரம்போல ஞாயிறு குடமலையைச் சேரத் தோழி! மருண்மாலையின்கண் அம்மாயவன்முன்னோன் நிறம்போல மதி தோன்றுதலான் யான் கொண்ட மயலை ஆற்றமாட்டுகில்லேன் வருந்தி; எ-று. (௫)

௯௮ வீயும் வியப்புறவின் வீழ்துளியான் பாக்கடுக்கை
நீயும் பிறரொடுங்கா ணீடாதே—யாயுங்
கழலாகிப் பொன்வட்டாய்க் காராய் மடலாய்க்
குழலாகிக் கோல்சுரியாங் கூர்ந்து.

**எ-து பருவமன்றென்று வற்புறுத்தியதோழிக்குத் தலைமகள் வன்புறையெதிரழிந்து சொல்லியது.**

**இ-ள்.** ஆயப்படுங் கழல்போல அரும்பிப் பொன்வட்டுப் போல முதிர்ந்து பின்னைப் பூமாலையாய்இதழாய் விரிந்து மடவார்குழல்போலக் காய்த்து பின்னைத் துளையையுடைய கோலாய் மிக்கு அழியாநின்றன, வியன்புறவின் கண்ணே வீழ்துளியானே பெருங்கொன்றைகள்: இதனைப் பிறரோடே நீ போய் நீயுங்காணாய் நீடியாதே; **எ-று.** (௬)

௯௯ பொன்வாளாற் காடில் கருவரை போர்த்தாலு
மென்வாளா வென்றி யிலங்கெயிற்று—மென்வாள்போல்
வாளிழந்த கண்டோள் வனப்பிழந்த மெல்விரலு
நாளிழந்த வெண்மிக்கு நைந்து.

**இதுவுமது.**

**இ-ள்.** பொன்போன்ற வெயிலொளியால் வெந்து காடின்றியிருந்த கருவரைகள் கார்ப்பருவஞ்செய்து மலரிதழ்களான் மூடப்பட்டாலும் அதனாற் பயனென்? பருவமன்றென்று சொல்லி வாளாநின்றி; இலங்கெயிற்றையுடையாய்! என் மேனியின் கண்ணுள்ள ஒளிபோல ஒளி யிழந்தன என் கண்களும்: போயிழந்த நாள்களினெண் மிகுதலான் எண்ணி என் விரல்களுந் தேய என்றோள்களும் வனப்பிழந்தன; **எ-று.**

இதனுள் வாளா என்பது பயனின்மையைக் காட்டுவதோர் இடைச்சொல். (எ)

௧00 பண்டியையச் சொல்லிய சொற்பழுதான் மாக்கடல்
கண்டியைய மாந்திக்கால் வீழ்த்திருண்—டெண்டிசையுங்
கார்தோன்றக் காதலர் தேர்தோன்றா தாகவே
பீர்தோன்றி நீர்தோன்றுங் கண்.

**எ-து. பருவங்கண்டழிந்த கிழத்தி தோழிக்குச் சொல்லியது.**

**இ-ள்.** தாமுன்பு நம்மைப் பிரிகின்றநாட் குறிப்படச்சொல்லிய சொற்பழுதாயிற்றால்: பெருங்கடற்சென்று கண்டு நிரம்பப்பருகிக் கால்வீழ்த்தேயிருண்டு திசையெட்டுமெழைதோன்றக் காதலர் தேர் தோன்றுகின்றதில்லை. ஆதலால் என் கண்கள் பீர்தோன்ற நீர்தேன்று நின்றன; **எ-று.** (அ)

௧0௧ வண்டினம் வௌவாத வாம்பலும் வாரிதழான்
வண்டினம் வாய்வீழா மாலையும்—வண்டின
மாராத பூந்தா ரணிதேரான் றன்போத
வாராத நாளே வரும்.

இதுவுமது.

இ-ள். வண்டினங்கள் விரும்பாத * ஆம்பலென்னும் பெயரையுடைய குழலும், ஒழுகிய மலர்களிற்புக்கு வண்டினங்கள் வாய்வீழாத அந்தியாகிய மாலையும், வண்டினங்கள் புக்கொலியாத பூசசெயல்களையுமுடைய புரவி பூண்ட தார்மணிகளையுடைய புரவிகளாலே ஒப்பிக்கப்பட்ட தேரினையுமுடையான் வாராத நாளே வந்து என்னை நலியும்; எ-று. (௯)

௧0௨ மானெங்கு தம்பிணையோ டாட மறியுகள
வானெங்கும் வாய்த்து வளங்கொடுப்பக்—கானெங்குந்
தேனிறுத்த வண்டோடு நீதா வெனத்தேரா
தியானிறுத்தே னவி யிதற்கு.

இதுவுமது.

இ-ள். மான்கள் தம்பிணைகளைக்கூடி எங்கும் விளையாட அவற்றின் மறிகளுழுகள மழையெங்கும் பெய்து வாய்த்துவளங்கொடுப்பக்காடெங்குந் தேன்களும் தம்மொடுசார்ந்த வண்டுகளோடு நீதாவென்றொலித்தலான், ஆராயாதே மயங்கிப் பருவத்துக் கென்னுவியைக் கடனாகக்கொடுத்தேன்; எ-று. (௧0)

௧0௩ ஒருவந்த மன்று லுறைமுதிரா நீராற்
கருமந்தான் கண்டறிவு நால்லோ—பருவந்தான்
பட்டின்றே யென்றி பணைத்தோளாய் கண்ணீரா
லட்டினே னுவி யதற்கு.

**எ-து பருவமன்றென்று வற்புறுத்தின தோழிக்குத் தலைமகள் பருவமே யென்றழிந்து சொல்லியது.**

இ-ள். ஒருவந்தமன்றால் என்பது இது பருவமென்பது மெய்ம்மை யன்றாலென்றவாறு. உறைமுதிராநீரால் என்பது மழைபெயல் நிரம்பாத

* "கஞ்சத்தாற் குழுதவடிவாக அணைசுபண்ணிச்செறித்தலின் ஆம்பற் குழலாயிற்று" என்பர் அடியார்க்குநல்லார் (சிலப்-ஆய்ச்சியர்குரவை)

நீராமென்றவாறு: வம்பமழை என்றவாறும். கருமந்தான் கண்டழிவுகொல்லோ என்பது கருமமாவது பருவமல்லாத பருவத்தைக்கண்டழிவதோ என்றவாறு. பருவந்தான் பட்டின்றே யென்பது பருவம் வந்து பட்டதில்லை என்றவாறு. என்றி என்பது இவையெல்லாஞ் சொல்லி என்னைத் தேற்றாநின்றாய் என்றவாறு. பணைத்தோளாய் கண்ணீரலட்டினேனாவி யதற்கு என்பது கண்ணீரே நீராக வார்த்து என்னுயிரைப் பருவத்துக்குக் கொடுத்தேன் பணைத்தோளாய்! எ-று. (௧௧)

௧௦௪ ஐந்துருவின் வில்லெழுதி நாற்றிசைக்கு முந்நீரை
யிந்துருவின் பாந்தி யிருங்கொண்மூ—முந்துருவி
னொன்றா யுருமுடைத்தாய்ப் பெய்வான்போற் பூக்கென்று
கொன்றாய்கொன் றையேற் குழைந்து.

எ-து பருவங்கண்டழிந்த கிழத்தி கொன்றைக்குச் சொல்லுவாளாய்த் தோழி கேட்பச் சொல்லியது.

இ-ள். ஐந்து நிறத்தினையுமுடைய வில்லையெழுதினாற்போலக் கோலி முந்நீரைப்பருகி ஈந்தின்கனிபோன் றருந்துகின்ற வுருவோடு இருங்கொண்மூ நாற்றிசைக்கண்ணும் ஒன்றா யுருமுடைத்தாய்ப் பெய்யப்படுகின்றன வானம் என்னைக்கொல்கின்றாற்போலத் தழைத்தும் பூப்பேனென்று என்னைக் கொன்றாய், கொன்றைமரமே! எ-று. (௧௨)

௧௦௫ எல்லை தருவான் கதிர்பருகி யீன்றகார்
கொல்லைதரு வான்கொடிக ளேறுவகாண்—முல்லை
பெருந்தண் டளவொடுதங் கேளிரைப்போற் காணாய்
குருந்தங் கொடுங்கழுத்தங் கொண்டு.

எ-து பருவங்கண்டழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

இ-ள். பகலினைத்தருங் கதிரோனுடைய கதிர்கள் நீரை நிலத்தின்கட் பருகியீன்ற காரானே கொல்லைகள் தருகின்ற வாலிய கொடிகண் மரந்தோறுஞ் சென்றேறுவனவற்றைக் காணாய்! அன்றியேயும் முல்லைகள் பெருந்தண்டளவுடனே குருந்தகொடுங்கழுத்தங்கொண்டு தங்கேளிரைப் போலேறுவன காணாய்! எ-று. (௧௩)

௧௦௬ என்னாரே யேற்ற துணைப்பிரிந்தா ராற்றென்பா
ரன்னரோ யாவ ரவரவர்க்கு—முன்னாரே
வந்தாரந் தேங்கா வருமுல்லை சேர்திங்தேன்
கந்தாரம் பாடுங் களித்து.

**எ-து வற்புறுத்துந் தோழிக்குத் தலைமகள் வன்புறையெதிரழிந்து சொல்லியது.**

இ-ள். என்னரே யேற்ற துணை பிரிந்தார் என்பது எப்பெற்றியர் அவர் தமக்கன்புபட்ட காதலரைப் பிரிந்தார் என்றவாறு. ஆற்றென்பாரன்னரோ யாவரவாவாகு என்பது அக்காதலித்தாரைப் பிரிந்தாரோ டொப்பர், பிரியப் பட்டார்க்காற்றி இறந்துபடாதிருக்கச் சொல்லுவார் என்றவாறு. முன்னரே வந்தாரத் தோன்றா வருமுல்லை சேர்ந்தேன் கந்தாரம்பாடுங் களித்து என்பது எனக்கு முன்னேவந்து சந்தனப் பொழிலையும் தோன்றாவின்கண் வளர்முல் லைகளையுஞ் சேர்ந்த தேனீக்கள் காந்தார மென்னும் பண்ணினைக் களித்துப் பாடாநின்றன; எ-று. (௧௪)

௧௦௩ கருவுற்ற காயாக் கணமயிலென் றஞ்சி
உருமுற்ற பூங்கோட லோடி—உருமுற்ற
வைந்தலை நாகம் புரையு மணிக்கார்த்தா
னைந்தலையே வந்த தினி.

**எ-து பருவங்கண்டழிந்த கிழத்திக்குத் தோழி சொல்லியது.**

இ-ள். கருக்கொண்டு பூத்த காயாம்பூவினைத் தொகுதியையுடைய மயிலென்றஞ்சி உருமுற்ற ஐந்தலை நாகங்கள் உருமுற்ற பூங்கோடல்களை யொவ்வாநின்ற அழகிய மேக்கார்ப்பருவந்தான், எம்முடைய மாட்டே நலிய வந்தது இப்பொழுது; எ-று (௧௫)

௧௦௪ கண்ணுள வாயின முல்லையல்லை காணலா
மெண்ணுள வாயி லிறவா வா—லெண்ணுளவா
வொன்றொழிய நோய்மொழிந்தார் வாரா ருருவுடையா
னொன்றொழிய நோய்செய்த வாறு.

**எ-து பருவம் அன்றென்று வற்புறுத்துந் தோழிக்குத் தலைமகள் ஆற் றாது சொல்லியது.**

இ-ள் உருவுடையான் ஒன்றொழிய நோய்செய்தவாறு கண்ணுளவா யின் முல்லையல்லை காணலாம் என்பது உருவுடைய வான் * இறந்துபா டொன்றையும் ஒழிய மற்றைக் குறிப்புக்கள் ஒன்பதும் எனக்குளவாம்

---

*இவற்றைத் **தசாவத்தை** என்ப வடநூலார். அவை அன்பொடு பார்த்தல், உளங்கொடுபெற்றல், புணர்வு வேட்கை, துயிலறுதல், மெலிதல், புறநுகர்வொழிதல், நாணழிதல், புலம்பல், மயக்கம், இறந்துபடுதல் என இவை.

படி என்னை நோய் செய்தவாற்றை நினக்குங்கண்ணுளவாயின் *முல்லை யல்லையாதலின் நக்குக்காண் எ-று. எண்ணுளவாயின் இறவாவால் என்பது அவர் குறித்த இத்துணைநாளுள் வருகின்றேனென்ற எண் பழுதுபடா வாயின் அவர் சொன்னநாளைக் கடவா அன்றே எ-று. எண்ணுளவா வன்றொழிய நோய் மொழிச் சார்வாகாது என்பது என்னை ஆற்றுவிக்க வேண்டி நின் மனத்தின்கண் எண்ணின எண்ணின்கணுள்ளவாவன்றி என்னேயொழிதற்கு நீ யாற்றுவிக்கின்ற நின்மொழி எனக்குச் சார்வா காது; எ-று. (கரு)

கoசு என்போ லிருளை யிருங்கடன் பாந்தியகார்
பொன்போரூர் கொன்றை புரிந்தன—பொன்போற்
றுணைபிரிந்து வாழ்கின்றார் தோன்றாவர் தோன்றா
ரிணைபிரிந்து வாழ்வா ரினி.

எ-து. பருவங்கண்டு ஆற்றாளாய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

இ-ள். என்னைப்போன்றதோழி! பொன்போன்ற தார்களைக்கொன் றைகள் ஈனும்வகை இருங்கடலைப்பருகின முகில்களாதலாற்,பொன்போலப் பெறுதற்கரிய தந்துணைகளைப் பிரிந்துபோய் வாழ்கின்றார் அத்துணைக்கண் மாட்டுத் தோன்றுவர்; நம்மோடிணை தலைப் பிரிந்து வாழ்கின்றார் இப்பருவத் தின்கண்ணுந் தோன்றுகின்றிலர்; எ-று. (கஎ)

கஎo பெரியார் பெருமை பெரிதே யிடர்க்கா
ணரியா ரெளியரொன றாற்றாப்—பரிவாய்த்
தலையழுங்கத் தண்டளவந் தானகக்கண் டாற்றா
மலையழுத சால மருண்டு.

இதுவுமது.

இ-ள். பெரியாராயிருப்பார் பெருமைக்குணம் மெய்ம்மையாகப் பெ ரிதே; காணமுன்னரியாராயுள்ளார் இடர் வந்த இப்பொழுது எளியராயினு ரொன்றிரங்கி யழுங்கி ஆற்றாவாய் மலைகள் மிகவும் அழுதன, தலைசாய்க்கும் வகை பரிவாய்த்தண்டளவங்கள் தஞ்சிறுமையால் நகக்கண்டு; எ-று. (கஅ)

*முல்லை கண்ணிலவாதலின் என்னை நோய்செய்தவாற்றைக் காணாது நகுவன. நீயும் அதுபோல நகுவையேனும் கண்ணுண்மையால் முல்லை யல்லை யாதலின், நக்கே யொழியாது நோய் செய்தவாற்றைப் பார்த்தலும் செய்க; எ-று. 'தண்டளவந்தானகக்கண்டு' என்பர் முன்னும்.

கககக கானங் கடியரங்காக் கைம்மறிப்பக் கோடலார்
வானம் விளிப்பவண் டியாழாக—வேனல்
வளரா மயிலாட வாட்கண்ணாய் சொல்லா
யுளராகி யுய்யும் வகை.

இதுவுமது.

இ-ள். கானங் கடியரங்காகக் கோடலார் வியந்து கைம்மறிப்ப, முகில் பாட, வண்டுகள் யாழாக வேனற்காலத்துக் களியாதமயில் களித்தாடாநிற்க வாட்கண்ணாய்! சொல்லாய்; காதலரைப்பிரிந்தார் இறந்துபடாது உளராகி யுய்யுந்திறத்தை; எ-று. (ககூ)

ககஉ தேரோன் மலைமறையத் தீங்குழல் வெய்தாக
வாரான் விடுவானோ வாட்கண்ணாய்—காயார்
குருந்தோடு முல்லை குலைத்தனகா ணைமும்
விருந்தோடு நிற்றல் விதி.

எ-து பருவங்காட்டித் தோழி தலைமகளை வற்புறுத்தியது.

இ-ள். பகலோன் மலையின்கண் மறைய இனியகுழல் இன்னாதாய் வெய்தாக இக்காலத்தின்கண் வாராதேவிடுவானோ; வாட்கண்ணாய்! பசுமை யார்ந்த குருந்துடனே முல்லைகள் பூங்கொத்தைஈன்றனகாண்; இனிநாமும் அவர்க்கு விருந்துசெய்தல் ஒழுகிநிற்றல் நெறி; எ-று. (உ0)

ககங பறியோலை மேலொடு கீழா விடையர்
பிறியோலை பேர்த்தூ விளியாக் கதிப்ப
நரியுளையும் யாமத்துந் தோன்றாரா லன்னாய்
விரியுளைமான் றேர்மேல்கொண் டார்.

எ-து பருவங்கண்டழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

இ-ள். படுத்துத்துயிலும் பறி *கீழாக ஒலைப்படன் மழைத்துளியை க்காத்தற்கு மேலாக இடையர்கள் கிடந்து யாடுகளைப் பிரித்தற்குக் கருவி யாகிய பிறியோலையைப் புடைபெயர்வித்து அழைத்துரப்ப, நரிகள் அஞ்சிக்

* 'பறியோலைச்சயனத்தர்' எனப் பெரியாநம் பணித்தார். (பெரியாழ் வார்திருமொழி, வண்ணமாடங்கள், ரு) 'மறித்துருத் தொகுத்த பறிப்புற விடையன்' என அகநானூற்றினும் (கூச) 'பறிப்புறத் திட்ட பாலுடை யிடையன்' என நற்றிணையினும (கசஉ) வருதல்காண்க.

கதறும்யாமத்தின்கண்ணுந் தோன்றாநாற் றோழி! விரிந்தஉளையையுடைய மாவாற்பூட்டப்பட்ட தேரைமேல்கொண்டுபோயினார்; எ-று. (உக)

ககச பாத்துப் படிகடன் மாந்திய பல்கொண்மூக்
காத்துக் கனைதுளி சிந்தாமைப் — பூத்துக்
குருந்தே பருவங் குறித்திவளை நைந்து
வருந்தேயென் றாய்நீ வனைந்து.

எ-து பருவங்கண்டழிந்த தலைமகள்கேட்பத் தோழி குருந்தமரத்திற்குச் சொல்லுவாளாய்ப் பருவமன்றென்று வற்புறுத்தியது.

இ-ள். ஒலிக்கின்ற கடலைப்பருகி அந்நீரைக்காத்துக் கருமுற்றிப்பருத்துப்பெறிந்த துளிகளைச் சிதறுவதற்குமுன்பேபூத்துக் குருந்தே! பருவத்தைக் குறித்துக்காட்டி இவளையேவனைந்து வருந்துவாய் என்றாய் நீ; எ-று. (உஉ)

ககரு படிந்தடங்கட் பல்பணைபோல் வான்முழங்கன் மேலுங்
கொடுந்தடங்கட் கூற்றமின் னாக — நெடுந்தடங்கண்
ணீர்நிறை நோக்கி நெடும்பணைமென் றோளாட்குத்
தேர்நின்ற தென்னாய் திரிந்து.

எ-து வினைமுற்றிமீண்ட தலைமகன் தலைமகட்கு தூதுவிடுகின்றான் தூதிற்குச் சொல்லியது.

இ-ள். ஒலியாநின்ற தடங்கண்ணையுடைய பல்முரசுபோல் முகில்கள் முழங்குவதன்மேலும் மின்னே கொடியதடங்கண்ணினையுடைய கூற்றமாக அழுகினறநீர்விடாது நின்ற நெடுந்தடங்கண்ணைக்கினையுடைய நெடும்பணைமென்றோளாட்கு நீமறித்துவந்து நின்மனைவாயிலின்கண்ணே அவன் றேர்நின்றதென்று சொல்லுவாய், எமக்குமுன்னே சென்று தூதாக; எ-று.()

ககசு குருந்தே கொடிமுல்லாய் கொன்றாய் தளவே
முருந்தே யெயிறொடுதார் பூப்பித் — திருந்தே
யரும்பீர் முலையா ளணிகுழறும் வேய்த்தோள்
பெரும்பீர் பசப்பித்தீர் போந்து.

எ-து. பருவங்கண்டு ஆற்றளாய தலைமகள்ஆற்றல்வேண்டித் தோழி தான் ஆற்றளாய்ச் சொல்லியது.

இ-ள். குருந்தே! கொடிமுல்லாய்! கொன்றாய்! தளவே! மயிலிமுருந்தினையொக்கும் இவளெயிற்றுடனே பூமாலையையும் பூப்பித்திருந்து கோங்கரும்

பு முதலாயினவற்றை வென்று சிதைக்கும் முலையினையுடையாளுடைய குழலுழ்ந்த நிறைந்தவேய்த்தோள்களைப் பெரும்பீர்நிறம்போலப் பசப்பித் தீர் மீட்டும்; எ-று. (உச)

ககஎ. கதநாகம் புற்றடையக் காரேறு சீற
மதநாக மார்ப்ப முழங்கப்—புதனாகம்
பொன்பயந்த வெள்ளி புறமாகப் பூங்கோதா
யென்பசந்த மென்றோ ளினி.

**எ-து தலைமகளைத் தோழி பருவங்காட்டி வற்புறுத்தியது.**

இ-ள். சினத்தினையுடைய பாம்புகளும் புற்றினை அடையும்வகை உருமேறு வெகுண்டிடிப்ப, மதத்தையுடைய யானைகள் அவ்வுருமேற்றுக்கு எதிரேமுழங்கப், புகலாற்சூழப்பட்ட நாகமரங்கள் வெள்ளிபோலும் இதழ் கள்புறஞ்சுற்றப் பொன்போலுங்தாதுக்களை உள்ளே பயந்தனவாதலாற் பூங்கோதாய்! நின்மென்றோள்கள் யாதுகாரணத்தாற் பசந்தன இப்பரு வத்து; எ-று (உரு)

ககஅ கார்தோன்றிப் பூவுற்ற காந்தண் முகைவிளக்குப் [றித்
பீர்தோன்றித் தூண்டுவாண் மெல்விரல்போ—னீர்தோன்
தன்பருவஞ் செய்தது கானந் தடங்கண்ணா
யென்பருவ மன்றென்றி யின்று.

**எ-து பருவம் அன்றென்று வற்புறுத்துந் தோழிக்குத் தலைமகள் வன் புறை யெதிரழிந்து சொல்லியது.**

இ-ள். விளக்குமழுங்கிப் பீர்நிறங்கோடலான் அவ்விளக்கினைத்தூண் டுவாள் மெல்விரலினைத் தோன்றிப்பூவின்மேற் சென்றன காந்தண்முகை கள் போலும்வகை கார்நீர்தோன்றுதலாற் காரின் பருவத்தைச் செய்தன கானங்கள், இத்தைக்கண்டும் தடங்கண்ணாய்! எனக்குக் காதலர் சொல்லிய பருவம் அன்றென்றாயின்றி; எ-று. (உசா)

ககககூ. உகவுங்கா லன்றென்பா ரூரா ரதனைத்
தகவுந் தகவன்றென் றேனோ—னகவேகொல்
வண்டுடுப்பாய்ப் பாம்பாய் விரலாய் வளைமுறியாய்
வெண்குடையாந் தண்கோடல் வீந்து.

இதுவுமது.

இ-ள். மழைத்துளிகள் உகவுங் கார்ப்பருவம் அன்றென்று சொல்லா நின்றார் இவ்வூரார்: அச்சொலவுதான் அவர்க்குக்குணமோ குற்றமோ என்ப

தறியேன்: அதுதான் அவர்க்குக் குணமேகொல்லோ! வளவிய துடுப்பாய்ப் பாம்பாய் விரலாய் வளைமுரியாய்வெண்குடையாகாநின்றது தண்கோடலழி ந்து; எ-று. (உஎ)

கஉ0 பீடிலா ரென்பார்கள் காணார்கொல் வெங்கதிரார்
கோடெலாம் பொன்னாய்க் கொழுங்கடுக்கைக்—காடெலா
மத்தங் கதிரோன் மறைவதன்முன் வண்டொடுதேன்
றத்த மறையுந் தொடர்ந்து.

இதுவுமது.

இ-ள். நம்மைப்பெருமையிலரென்று சொல்லுவார் காணாதாராகாரோ! வளவிய கொன்றைகள் கொம்பெல்லாம் பொன்னாகப் பூக்க வண்டோடு தேன்கள் தத்தம் என்னும் பண்ணினைத் தம்முட் பொருந்தி ஒலியாநின்றன காடெல்லாம்; வெய்யகதிரோடுகூடி வெங்கதிரோன் அத்த மலையை அடைதற்கு முன்னே; எ-று. (உஅ)

கஉக ஒருநதியா னென்றல பல்பகைக யென்னை
விருந்தியாக் கொண்டன வேறாய—பொருந்தின்
மடலன்றின் மாலை படுவசி யாயபல்
கடலன்றிக் காரூர் கறுத்து.

இதுவுமது.

இ-ள். யானொருத்தி: எனக்கு ஒன்றல்ல பலபகைகள் என்னை மலைத்தலே தமக்கு ஒழுக்கமாகக்கொண்டன; வேறாகத் துணையைப் பிரிந்து பொருந்தின் மடற்பனைமேலிருந்த அன்றில், மாலைப்பொழுது, மழைபெயல் ஆம்பற்குழல், கடல் அன்றியே முகில்கள் என்று சொல்லப்பட்ட இவை யெல்லாம் மேல் வெகுண்டு; எ-று. (உகூ)

கஉஉ கானந் தலைசெயக் காபார் குழற்றோன்ற
வேன மிடந்த மணியெதிரே—வான
நகுவதுபோன் மின்னுட நாணவென் னாவி
யுகுவது போலு முடைந்து.

இதுவுமது.

இ-ள். காடுகள் தழைத்துத் தலையெடுக்க ஆயர்ஊதுங் குழலோசை தோன்ற ஏனங்கள் இடந்த மணிகளினெதிரே முகில்கள் சிரிப்பதுபோல மின்கள் ஒளிவிட இக்காலத்தும் இறந்துபடாமையான் நாணில்லாத என்னுயிர் ஒழுகுவதுபோல்வுளது; எ-று. (ந0)

கஉகூ இம்மையாற் செய்தவை யிம்மையே யாம்போலு
மும்மையே யாமென்பா ரோரார்கா—ணம்மை
யெளிய ரெனநலிந்த வீர்ங்குழலா ரோடு
தெளியச் சுடப்பட்ட வாறு.

எ-து குறித்த பருவத்தின்கண் வந்த தலைமகனைப் புணர்ந்திருந்த தலைமகள் முன்பு தன்னை நலிந்த குழலோசை அந்திமாலைப்பொழுதின்கட் கேட்டதனாற் றுயருறுதாளாய்த் தோழிக்குச் சொல்லியது.

இ-ள். இப்பிறப்பின்கட் செய்த தீவினை இப்பிறப்பின்கண்ணே விளையும்போலும்! மறுபிறப்பின்கண் ஆம் என்பார் அறியாதார்காண்; முன்பு நம்மை எளியரெனக்கொண்டு துயர்செய்த ஈர்ங்குழலார், தோழி! எல்லாரும் அறியச்சுடப்பட்டவாற்றைப் பாராய்; எ-று. (நக)

குழல்நலிவது நெருப்பாற் சுடப்பட்டுத் துளைப்பட்டபின்: சுடுண்டது பிறரை நலிந்ததாற் பயனென்று குழலைச்சொல்லுயாறென்னையெனிற் பிறரை நலியுந்தன்மை முன்பே அதற்குளதாதலாற் பட்டதெனக்கொள்க.

முல்லை முற்றியது.

# ரு.--மருதம்.

கஉ-ச செவ்வழியாழ்ப் பாண்மகனே சீரார்தேர் கையினு
லிவ்வகை யீர்த்துய்ப்பான் றோன்றுமு—னிவ்வழியே
யாடினு னைவய லூரன்மற் றெங்கையர்தோள்
கூடினுன் பின்பெரிது கூர்ந்து.

எ-து பாணற்குத் தலைமகள் வாயின் மறுத்தது.

இ-ள். செவ்வழியாழையுடைய பாண்மகனே! சீரார்ந்த விளையாட்டுத் தேரினைத் தன் கையால் இம்மனையின்கண் ஈர்த்து நடத்துகின்ற என்மகன் பிறப்பதற்குமுன் இம்மனையின்கட் பிரியாது ஆய்வயலூரன் ஒழுகினுன் பின்னையெல்லாம் எங்கையர்தோளே மிக விரும்பி முயங்கினுன்; ஆதலான் இப்பருவம் யாம் அவர்க்குத்தக்கேம் அல்லேம்; எ-று. (க)

கஉரு மாக்கோல்யாழ்ப் பாண்மகனே மண்யானைப் பாகனுர்
தூக்கோற் றுடியோடு தோன்றுமுன்—றூக்கோற்
றுடியுடையார் சேரிக்குத் தோன்றுமோ சொல்லாய்
கடியுடையேன் வாயில் கடந்து.

## இதுவுமது.

இ-ள். அழகிய *காம்பையுடைய யாழ்ப்பாணனே! மண்ணுற்செய்யப்பட்ட யானைப்பாகராகிய என்மகனூர் தாஙகொட்டுகின்ற தூக்கோற்றுடியோடு இங்குத்தோன்றி ஒழுகுவதற்கு முன்புதூய புரிப்புச் செயல்களையுடைய தொடியுடையார் மனையின்கட் சென்று தோன்றியொழுகுமோ சொல்லாய் இப்பொழுது; அவனும் வரையப்பட்ட வாழ்வினையுடையேன் வாயில்கடந்து; எ-று. (உ)

கஉரு விளரியாழ்ப் பாண்மகனே வேண்டா வழையேன்
முளரி மொழியா துளரிக்—கிளரிநீ
பூங்கண் வயலூரன் புத்தில் புகுவதன்மு
னாங்க ணறிய வுரை.

## இதுவுமது.

இ-ள். விளரி யென்னும் பண்ணை ச செயகின்ற யாழையுடைய பாண்மகனே! யாங்கள் விரும்பாதன அழையாதொழிக: எஙகண்மாட்டு நினக்கு ஈரமில்லாத முளரிபோன்ற மொழிகளை சொல்லாது இங்கு நின்றும் புடைபெயர்நது கிளர்ந்து நீபோய்த் தாமரைப்பூப்போன்ற கண்களையுடைய வயலூரன் இன்று புதுமனையின்கண்ணே புகுவதன்முன் அப்புதுமனைக்கண் நீ சென்று வாராநின்றான் என்று அவளுற் காதலிக்கப்பட்ட பரத்தையர்க்கு உரை; எ-று. (ங)

கஉ௬ மென்கட் கலிவய லூரன்றன் மெய்ம்மையை
யெங்கட் குரையா தெழுந்துபோ—யிங்கட்
குலங்கார பென்றுனுகான் கூடுங்கூர்த் தென்றே
யலங்கார நல்லார்க் குறை.

## இதுவுமது.

இ-ள். மெல்லிய இடத்தையுடைய மிக்க வயலூரனுடைய மெய்யுரைகளை எங்கட்குச் சொல்லாதே இங்குநின்று மெழுந்துபோய் இவ்வுலகத்தின்கட் குலமுடைய மனையாளைப் புணர்தல்*.. ... ... ........ (ச)

---

* பாணர் தம் பிறப்புணர்த்தற்கு ஓர்வகை மூங்கிற்கோல் கைக்கோடல் பண்டைவழக்கு: இதனை "நுண்கோல் கொண்டு களம்வாழ்த்து மகவன் பெறுகமாவே' (௫-ங) என்னும் பதிற்றுப்பத்துரையானுணர்க; 'இருங் கழை யிறம்பி ஞெய்ந்துகொண் டறுத்த,நுணங்குகட் சிறுகோல் வணங்கிறை மகளிரோ, டகவுநர்' (கஎ) என்றார் அகநானூற்றினும்.

* இதன் பின்னுரையும், இனிவரும் பாடல்களினுரையும் பிரதிகளிலில்லை. சிலபாடல்களிலும் எழுத்துக்கள் விடுபட்டும் பிறழ்ந்தும் இருப்

௧௨௮ செந்தா மரைப்பூ வுறநிமிர்ந்த செந்நெல்லின்
பைந்தார்ப் புனல்வாய்ப்பாய்ந் தாடுவா—னந்தார்
வயந்தகப்போற் றோன்றும் வயலூரன் கேண்மை
நயந்தகன் றற்றமை நன்று. (௫)

௧௨௯ வாடாத தாமரைமேற் செந்நெற் கதிர்வணக்க
மாடா வரங்கினு ளாடுவா—வீடாய
புல்லகை யேய்க்கும் புகழ்வய லூரன்ற
னல்லகந் சேராமை நன்று. (௬)

௧௩௦ இசையுரைக்கு மென்செய் திரநின் றவரை
வசையுரைப்பச் சால வழுக்கீர்—பசைபொறை
மெய்ம்மருட் டொல்லா திருபுன லூரன்றன்
பொய்ம்மருட்டுப் பெற்ற பொழுது. (௭)

௧௩௧ மடங்கிறவு போலும்யாழ்ப் பண்பிலாப் பாண
தொடங்குறவு சொற்றுணிக்க வேண்டா—*முடங்கிறவு
பூட்டுற்ற வில்லேய்க்கும் பூம்பொய்கை யூரன்பொய்
கேட்டுற்ற கீழ்நாட் கிளர்ந்து. (௮)

௧௩௨ எங்கை யரிலுள்ளா னோபாண நீபிறர்
மங்கையரி லென்று மயங்கினாய்—மங்கையரி
லென்று திறவா திவணின்னி ...........
பின்னுரி லந்தி முடிவு. (௯)

௧௩௩ பாலையாழ்ப் பாண்மகனே பண்டுநின் னையகற்கு
மாலையா ழோதி வருடாயோ—காலையாழ்
செய்யு மிடமறியாய் சேந்தாநின் பொய்ம்மொழிக்கு
னையு மிடமறிந்து நாடு. (௧௦)

* "இறவுக்கலித்துப், பூட்டறு வல்விலிற் கூட்டுமுதற் றெறிக்கும்" (௯௬) என அகநானூற்றினும் "புலவுநுனைப் பகழியுஞ் சிலையு மானச், செவ்வரிக் கயலொடு பச்சிறாப் பிறழும்" எனப் **பெரும்பாணாற்றுப்படையினும்** வருதல் காண்க.

கநச கிழமை பெரியோர்க்குக் கேடின்மை கொல்லோ
பழமை பயனோக்கிக் கொல்லோ—கிழமை
குடிநாய்கர் தாம்பல பெற்றாரிற் கேளா
வடிநாயேன் பெற்ற வருள். (கக)

கநரு என்கேட்டி யேழா யிருநிலத்தும் வானத்து
முன்கேட்டுங் கண்டு முடிவறியேன்—பின்கேட்
டணியிகவா நிற்க வவனணங்கு மாதர்
பணியிகவான் சாலப் பணிந்து. (சஉ)

கநசு எங்கை யியல்பி னெழுவல்யாழ்ப் பாண்மகனே
தங்கையும் வாயு மறியாம—லிங்க
ணுளர வுளர வுவேறடிச் சால
வளர வளர்ந்த வகை. (கந)

கநஎ கருங்கோட்டுச் செங்க ணெருமை கழனி
யிருங்கோட்டு மென்கரும்பு சாடி—வருங்கோட்டா
லாம்பன் மயக்கி யணிவளை யார்ந்தழகாத்
தாம்ப லசையின*வாய்த் தாழ்ந்து. (கச)

கநஅ கன்றுள்ளிச் சோர்ந்தபால் காலொற்றித் தாமரைப்பூ
வன்றுள்ளி யன்னத்தை யார்த்துவான்—சென்றுள்ளி
வந்தையா வென்னும் வகையிற்றே மற்றிவன்
றந்தையார் தம்மூர்த் தகை. (கரு)

கநகூ மருதோடு காஞ்சி யமர்ந்துயர்ந்த நீழ
லெருதோ டுழல்கின்றா ரோதை—குருகோடு
தாராத்தோ ராய்க்கெடுப்புந் தண்ணங் கழனித்தே
யூராத்தே ரான்றந்தை யூர். (கசு)

கசO மண்ணூர் குலைவாழை யுட்டொடுத்த தேனமதென்
றுண்ணூப்பூந் தாமரைப் பூவுள்ளூங்—கண்ணூர்
வயலூரன் வண்ண மறிந்து தொடுப்பாண்
மயலூ ரரவர் மகள். (கஎ)

* 'வாய்தாழ்ந்து' பி-ம்.

௧௪௧ அணிக்குரான்மே னல்லாரோ டாடினே னென்ன
மணிக்குரான்மேன் மாகரா ளூடி—பணிச்சிரல்
பாட்டை யிருந்தாரும் பாய்நீர்க் கழனித்தே
யாட்டை யிருந்துறையு மூர். (௧௮)

௧௪௨ தண்கயத்துத் தாமரைநீள் சேவலைத் தாழ்பெடை
புண்கயத் துள்ளும் வயலூர—வண்கயம்
போலுநின் மார்பு புளிவேட்கைத் தொன்றியெண்
மாலுமா றுநோய் மருந்து. (௧௯)

௧௪௩ நல்வய லூர னழுஞ்சாந் தணியகலர்
புல்லிப் புடைபெயரா மாக்கிரைக்கட்—புல்லியார்
கட்டு முதலுறையுங் கோழி துயிலெடுப்ப
பாட்டு முரலுமாம் பண். (௨௰)

௧௪௪ *அரத்த முடைஇ யணிபூப்பப் பூசிச்
சிரத்தையாற் செங்கழுநீர் சூடிப்—பரத்தை
நினைநோக்கிக் கூறினு நீமொழிய லென்று
மனைநோக்கி மாண விடும். (௨௧)

௧௪௫ பாட்ட ரவப்பண் ணரவம் பணிபாத
சோட்டார மின்னிலை தாங்குழமங்—கோட்டரவ
மந்திரங் கொண்டோங்க லென்ன மகரகமு
திந்திரன்போல் வந்தா னிடத்து. (௨௨)

௧௪௬ மண்கிடந்த வைய...... மற்றுப் பெரியரா
வெண்கிடந்த நானா னிகழ்ந்தொழுகப்—பெண்கிடந்த
தன்மை பொழியத் தரள முலையினண்
மென்மைசெய் திட்டாண் மிக. (௨௩)

௧௪௭ செங்கட் கருங்கோட் டெருமை சிறுகனையா
லங்கட் கழனிப் பழனம்பாய்ந்—தங்கட்
குவளையம் பூவொடு செங்கயன்மீன் சூடித்
தவளையுமேற் கொண்டு வரும். (௨௪)

---

* 'இது தோழி செவ்வணியணிந்துவிட்டமை தலைவன்பாங்காயினார் கூறியது' என்றார் நச்சினார்க்கினியர் (தொல்-பொ-சற்-சஎ).

௧௪௮ இருணடந் தன்ன விருங்கோட் டெருமை
மருணடந்த மாப்பழன மாந்திப்—பொருணடந்த
கற்பெருங் கோட்டாற் கனைத்துத்தங் கன்றுள்ளி
நெற்போர்வு சூழ் வரும். (௨௫)

௧௪௯ புண்கிடந்த புண்மனுநின் னீத்தொழுகி வாழினும்
பெண்கிடந்த தன்மை பிறிதரோ—......கிடந்து
செய்யாத மாத்திரையே செங்கயல்போற் கண்ணிணு
ணையாது தானுணு மாறு. (௨௬)

௧௫௦ கண்ணுங்கா லென்சொல் கலவையாழ்ப் பாண்மகனே
பெண்ணுங்கான் மற்றின் றிவனொடுநே—ரெண்ணிற்
கடல்வட்டத் தில்லையாற் கற்பெயர் சேரா
வடல்வட்டத் தாருளரோ லாம். (௨௭)

௧௫௧ சேறாடுங் கிண்கிணிக்காற் செம்பொன்செய் பட்டத்து
நீறாடு மாயுதிவ னின்முறு—வேறாய
மங்கையரி னுடுமோ பாக்கோல்யாழ்ப் பாண்மகனே
யெங்கையரி னுடலா மின்று. (௨௮)

௧௫௨ குலையாலும் பூணலு *முன்கட்டாஞ் சேர்ந்த
விலையாலு மிட்ட குறியை—புலையாது
நீர்சிதைக்கும் வாய்ப்புதல்வ னிற்கு முனைமுலைப்பா
றார்சிதைக்கும் வேண்டா தழூஉ. (௨௯)

௧௫௩ துனிபுலவி யூடலி னோக்கேன் றொடர்ந்த
கனிகலவி காதலினுங் காணேன்—முனிவகலி
னுணு நடிக்கு நளிவய லூரனைக்
காணுவெப் போதுமே கண். (௩௦)

மருதம் முற்றியது.

முனிந்தார் முனிவொழியச் செய்யுட்கண் முத்துக்
கனிந்தார் களவியல் கொள்கைக்—கணிந்தா
ரிணைமாலை யீடிலா வின்றமிழால் யாத்த
திணைமாலை கைவரத் தேர்ந்து.

## திணைமாலை நூற்றைம்பது மூலமும் உரையும் முற்றின.

* 'முன் கடஞ் சேர்ந்த' பி-ம்.

# திணைமாலை நூற்றைம்பது மூலமும் உரையும்.

## பிழைதிருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| ௧௨ | ௧௮ | வைத்தார் | வைத்தார் |
| ௧௪ | ௨௩ | வரவிளை | வளைவிளை |
| ,, | ௨௪ | பாக்கத்தார்க் | பாக்கத்தார் |
| ௧௭ | ௨௨ | ஓப்புவைமை | ஓப்புமைம |
| ௧௯ | ௨௧ | அடிப்பெல்லாம் | அடும்பெல்லாம் |
| ௨௩ | ௧௩ | ௧௩ | ௬௩ |
| ௨௯ | ௧௰ | மலைநாடாதலால் | மலைநாடு: ஆதலால் |
| ,, | ௨௮ | குருந்தே: | குருந்தே |
| ௩௩ | ௨௭ | றைனது | றைறது |
| ௩௫ | ௨௪ | முகத | முகத் |
| ௩௬ | ௩௪ | நீர்தேன்று | நீர்தோன்று |
| ௩௮ | ௧௨ | சொன்றுமேயற் | கொன்றுமெயற் |
| ௪௰ | ௮ | நிமொழி | நின்மொழி |
| ,, | ௩௨ | தாணகக் | தாநகக் |
| ௪௧ | ௨௬ | பிரிக்தற்கு | பிறிந்தற்கு |
| ,, | ௩௰ | பாெறுடை | பாறொடை |
| ௪௨ | ௮ | தலைமகன் | தலைமகள் |
| ,, | ௧௫ | ணீர் நிறை | ணீர்நின்ற |
| ௪௪ | ௫ | வெங்கதிரார் | வெங்கதிராற் |

ஸ்ரீ:

கடவுள் துணை.

# பன்னிரு பாட்டியல்

## பாயிரம்.

சொல்லின் கிழத்தி மெல்லிய லிணையடி
சிந்தையில் வைத்து முன்னோர் பொருணெறி
கூட்டி யுரைப்பல் பாட்டியன் மரபே.

## எழுத்தியல்.

க. வுத்திய வோத்திய லெழுத்திய லியம்பிற்
பிறப்பும் வருணமுஞ் சிறப்பாங் கதியு
மிருவகை யுண்டியு மூவகைப் பாலும்
பொருவி ரூனமுங் கன்னலும் புள்ளு
நயம்பெறு நாளு மியம்புதல் கடனே. (க)

### க.—பிறப்பு.

உ. சிறப்புடை யெழுத்தின் பிறப்பினி துரைப்பின்
முந்நான் குயிரு முதல்வன் படைத்தனன். (க)

ங. நல்லுயிர்ப் பகுதி நான்முகன் படைத்தனன்:
பொய்கையார். (உ)

ச. கண்ணுத றிருமால் கதிர்வேன் முருகன்
விண்ணவர் தலைவன் வெங்கதிர் வெண்மதி
*திதிக்கோன் கூற்றுவ னெடுநீர் வருண
னென்னுங் கடவுள †ரீரிரண் டாக
மன்னிய வொற்று ‡வகைவேறு படைத்தனர். (ங)

ரு. ஒன்பது தேவரு முடம்பு படைத்தனர்:
பொய்கையார். (ச)

---

* நிதிக்கோ னியமன் எனவும் பிரதிபேதம்.

† ரிரண்டிரண்டாக பி-ம்.

‡ வகை படைத்தனரே பி-ம்.

## உ.—வருணம்.

௬. நறுமலர்த் திசைமுக னீச னாரண
னறுமுகன் படைத்தன வந்தணர் சாதி.

அவை :—அகரமுதற் பன்னீருயிரும், க, ங, ச, ஞ, ட, ணவும். (க)

௭. திருமா லரனே திசைமுகன் குமரன்
மரபிற் படைத்தன மறையவர் சாதி :

பரணர். (உ)

௮. இந்திரன் வெங்கதிர் சந்திரன் படைத்தன
துன்னருஞ் சிறப்பின் மன்னவர் சாதி.

அவை :—த, ந, ப, ம, ய, ர. (௩)

௯. இந்திர னிரவி சோமனிம் மூவர்
தந்த வெழுத்தே யரசர் சாதி :

பரணர். (௪)

௧௦. திருமிகு நிதிக்கோன் வருணன் படைத்தன
வணிமிகு சிறப்பின் வணிகர் சாதி.

அவை :—ல, வ, ற, ன. (௫)

௧௧. வருண னிதிக்கோ னென்றிவர் படைத்தன
வசைதீர் சிறப்பின் வணிகர் சாதி :

பரணர். (௬)

௧௨. கூற்றுவன் படைத்தன கூறன விரண்டு
மேத்திய மரபிற் சூத்திரர் சாதி.

அவை :—ழ, ள. (௭)

௧௩. இயமன் படைத்த விருவகை யெழுத்துந்
துகடீர் மரபிற் சூத்திரர் சாதி :

*பரணர். (௮)

௧௪. ஒற்றுமைக் காலையும் வேற்றுமைக் காலையும்
பிறவியும் வருணமும் பெறுமென மொழிப. (௯)

இது வேறொரு மதம் எனவும் பி-ம்.

௧௫. உயிர்மெய் போல வொற்றுமிம் முறைபெறும். (௧0)

௧௬. உயிர்மெய் வழக்க மெய்வழக் காகும்
வேற்றுமைக் கண்ணே யென்றார் பிறரும். (௧௧)

௧௭. நால்வகை வருணத் தோர்க்கு நால்வகை
யியம்பு மெழுத்தை யியம்புவர் முதன்மொழி
மற்றவை மயங்கினும் வரையா ராண்டே. (௧௨)

௧௮. மக்கட் சாதி நான்கிற்கும் வகுத்த
தத்தஞ் சாதி யெழுத்தே யவரவர்கு
வைத்துமுன் னெடுபபி னதுமாண் புடைத்தே
மயங்கினும் வரையார் பயன்பட வரினே :

இந்திரகாளியார். (௧௩)

௩.—கதி.

௧௯. வானவர் மக்க ணரகர் விலங்கென
வூனமில் கதியே யொருநான் காகும். (௧)

௨0. கதியெனப படுபவை காண்டக விரிப்பிற்
றேவர் மகக ணரகர் விலஙகென
மேவிய கதிக ளீரிரண் டாகும் :

இந்திரகாளியார். (௨)

௨௧. தேவர் மகக ணரகர் விலங்கென
மேவிய நான்கே யெழுததியல் கதியே :

பரணர். (௩)

௨௨. அவற்றுள், உயிர்ககுறில வல்லின மீற்றெழுத் தொழியப்
பயிர்ப்புறு வானவர் கதியெனப் படுமே. (௪)

௨௩. தேவர் கதியே தெரியுங் காலே
அஇ உஎ கசட தபவே :

பரணர். (௫)

௨௪. மக்கட் கதியே நெட்டுயிர் நான்கொடு
மிக்க சிறப்பின ஙஞண நமவே. (௬)

௨௫. அவை தாம்;—ஆஈ ஊஏ ஙஞண நமக்கள். (௭)

உசு. ஒழிந்தன ஐஔ ஆய்த வெழுத்துங்
கழிந்தன வளனவு நரகர் கதியே. (அ)

உஎ. எ ஒ விரண்டும் யரல றழவெனத்
தொக்கன வைந்தும் விலங்கின் கதியே. (௯)

உஅ. மன்னுவர் தேவர் மக்கள் செய்யுளுண்
மன்னார் விலங்கொடு நரகர் கதியே. (௧0)

உ௯. விலங்கு ¶நரகும் விலங்கின வென்ப:
இந்திரகாளியார். (௧௧)

௩0. ||நரகும் விலங்கும் வரைவ ரீண்டே
தேவரு மக்களு மேவின பாட்டே. (௧உ)

ச.—உண்டி.

௩௧. அமுதென விடமென வருமிரு வகையு
முணவெனப் புலவ ருரைத்தன ருளரே. (௧)

௩உ. நஞ்சென வமுதென நவிலவும் படுமே:
பொய்கையார். (உ)

௩௩. உணவே யமுதம் விடமு மாகும்:
அவிநயனார். (௩)

௩ச. உயிர்க்குறி ஞன்கொடு கசதப நமவ
*மயக்கற வமுத வெழுத்தாகு மென்ப.

அவை:—அ, இ, உ, எ, க, ச, த, ப, ந, ம, வ. (ச)

௩ரு. இவ்வுயிர் மெய்யோ டியைந்தன கொளலே. (ரு)

௩௬. ஆஓ விரண்டும் யரல மூன்றுந
தாவிலிவ் விருவகைக் கூட்டத் தியைந்தவு
மளவு மாய்தமு மைவகைக் குறுக்கமு
†முளமலி புலவ ருரைத்தனர் நஞ்சென்
றவையொரு பெயர்மருங் கணைய நிற்பி
‡னவையுறு துஞ்சலு நடுக்கமுஞ் செய்யும்.

---

¶ நரகரும் பி-ம்.
|| எனப்பதி ஞென்று மமுதென மொழிப பி-ம்.
† முளமகிழ் பி-ம்.
‡ னவையுறத் துஞ்சலுங் கெடுதலுஞ் பி-ம்.

௩௭. இருவகைக் கூட்டத் தியைந்தமேற் கூறிய
ஆகார வோகாரத் தொடிய ரலக்க
ளென்னு மொற்றொடு மியைந்தவுயி ரளபெடை. (௭)

௩௮. ஐவகைக் குறுக்கமு மறையுங் காலை
இகர ஒகர ஐகார ஔகார
மகர மென்னு மிவற்றின் குறுக்கம். (௮)

௩௯. ஆ ஓ யரல முதலிய வளபெடை
யாய்தமைங் குறுக்க முளப்பட வெல்லாம்
விடமென மொழிப மெய்யுணர்ந் தோரே:
பரணர். (௯)

௪0. நஞ்சா மொற்றொடு நடந்த வுயிர்களும்
வஞ்சமில் புலவர் மறுத்தில ரென்ப; (௧0)

௪௧. இருவகை யுண்டியென் றெடுத்தன வல்ல
தரமே நிற்பினுந் தோமில வென்ப; (௧௧)

௪௨. நஞ்சு மமுதா மங்கலம் புகினே; (௧௨)

௪௩. அமுதெழுத் தென்ற வாதியுயிர் நான்கொடும்
புணர்ந்த மெய்யை யுணர்ந்தமு தென்ப; (௧௩)

௪௪. மெய்யா மமுதின் மேவிய வுயிரும்
பொய்தீர் புலவர் பொருந்தின வென்ப:
$இவை இந்திர காளியார். (௧௪)

## ௫.—பால்.

௪௫. ஆண்பால் பெண்பா லலியென நின்ற
மூன்றே பாலென மொழிந்தனர் புலவர். (௧)

௪௬. இருவகை யைங்குறி லாண்பா லென்ப. (௨)

௪௭. அகரமோ டைங்குறி லென்று ராண்பால். (௩)

$ "தெரிந்த யரலமேல்" என்னும் வெண்பாவுரையில் இவ்வைந்து சூத்திரங்களையு மெடுத்தோதி இவற்றை இந்திரகாளியமென்றார் வச்சணந்தி மாலையுரைகாரரும்.

௪௮. நெடிலே யிருவகை பெண்பா லென்ப. (௪)

௪௯. ஒற்று மாய்தமு மலியெனப் படுமே. (௫)

௫0. ஒற்றின் வருக்கமு மொன்பதிற் றிரட்டியும்
பெற்ற வாய்தமும் பேடெனப் படுமே. (௬)

௫௧. அவ்வவ் வெழுத்தே யப்பாற் குரிய
விரவினும் வரையா ரலியெழுத் தொழித்தே. (௭)

௫௨. அவ்விரு பாற்கு மலியெழுத் தாகா
தம்முண் மயங்கினுந் ¶தாவின் றென்ப.|| (௮)

௫௩. உயிரீ ராறு பாணென மொழிப
வுயிர்மெய் யெல்லாம் பெண்ணென மொழிப
வுடம்பெழுத் தெல்லா நபுஞ்சக மாகும்:
பொய்கையார். (௯)

௯.—தானம்.

௫௪. குறிலோ டடனெடில் கூட்டி நின்ற
ஐ ஔ விரண்டும் இ உ வடக்கிப்
பால குமார வரசு மூப்பு
மரணமென் றைவகைத் தானம் வகுத்தனர். (௧)

௫௫. முன்பிற் செய்யுண் முதலெழுத் ததற்குப்
பொருத்தமும் விருத்தமும் பகையுங் கொளலே:
அகத்தியர் பாட்டியல். (௨)

௫௬. நட்பே யுதாசி னம்பகை யென்னு
மொப்புடைக் குறிப்பி னொருமூன் றாகும். (௩)

௫௭. பால குமார வரச வென்னு
மூவகைத் தானமு நட்பெனப் படுமே. (௪)

௫௮. ஒழிந்த விரண்டு முதாசீ னம்பகை.* (௫)

¶ தவறின்றதுவே பி-ம்.

|| இது பரணர் பாட்டியல் என்பது "குற்றெழுத்தாடு" நவநீதப்பாட்டியலுரையால் விளங்குகின்றது.

* பகையுமாம். பி-ம்.

ருகூ. பாட்டுடைத் தலைவ னியற்பெயர் முன்னெழுத்துப்
பால ஞாக நால்வகை யெழுத்தும்
வட்டமாய் முறைமைபி னியலு மென்ப. (சா)

சுO. பெயர்முத லெழுத்துப பால ஞாக
நால்வகை யெழுத்தினும் வட்ட மாக
முறையே நட்புதா சீனம் பகைவரும். (எ)

சுக. அகரந் தனக்காய நட்பென் றுரைப்ப
விகர வுகரங்க டாம்; (அ)

சுஉ. அகரக் கெகர முதாசீன மாகு
மகரக் கொகரம் பகை; (கூ)

சுங. உகர மெகர மெனவிரண்டு மென்ப
விகரந் தனக்காய நட்பு; (கO)

சுச. இகரக் கொகர முதாசீன மாகு
மிகரக் ககரம் பகை; (கக)

சுரு. உகர வெழுத்துக்கு நட்பாய் வருமே
யெகர வொகரங்க டாம்; (கஉ)

சுசா. உகரக் ககர முதாசீன மென்ப
†வுகரக் கிகரம் பகை; (கங)

சுஎ. எகரக் கொகர மகரநட் பாகு
மிகர முதாசீன மாப; (கச)

சுஅ. எகரந் தனக்குப் பகையென் றுரைப்ப
துகர வெழுத்தென் றுணர்; (கரு)

சுகூ. ஒகர வெழுத்துக் ககர வெழுத்து
மிகர வெழுத்துநட் பாம்; (ககா)

எO. ஒகரக் குகர முதாசீன மாகு
மெகரம் பகையா மெனல்; (கஎ)

† விகரம் பகையென் றறி பி-ம்.

V.B.SUBRAHMANIYASARMA TAMIL-PANDIT.

எக. நட்புப் பகையாம் பகையுநட் பாமவை
வைத்த முறையே ‡கொளல்:
இவை கல்லாடனார். (கஅ)

## எ.—கன்னல்.

எஉ. குணபாற் பரிதி தென்பா லியமன்
குடபால் வருணன் வடபாற் சோமன்
றிசைமுக னடுவாந் தெய்வ நிலைகளிற்
குறிநிலந் தமைத்து முதன்மூன் றுங் கொள்கென
நெறியறி புலமை யறிஞர்நேர்ந் தனரே. (க)

எங. அருக்க னியமன் வருணன் சோமன்
பிரமனுந் தெய்வ நிலையெனப் பேசுவர். (உ)

எச. அகரமுத லாக முறையா னெய்தவத்
தெய்வந் தம்மேல் வைக்கப் படுமே:
கபிலர். (ங)

எரு. உரைத்த குறிநிலந் தொறோவொன் றாக
வருக்கத் தோ டாகுமவ் வாறு நாழிகை. (ச)

எசா. அகரந் தானே யருக்கத் தோடுதிப்ப
விகர மின்புற வெய்தி யிருக்கு
முகர நடக்கு மெகர முறங்கு
மொகரந் துஞ்சுமென் றுரைத்தனர் புலவர். (ரு)

எஎ. அவரவர் பெயர்முத லெழுத்துவந் துதிப்ப
வவரவர்ப் பாடி னாக்கந் தருமே:
இந்திரகாளியார். (சா)

எஅ. இராப்பொழு திற்கு மிவ்வகை கொள்க. (எ)

## அ.—புள்.

எகூ. ஐவகைக் குறிலு மகரமுத லாக
வல்லூ றாந்தை வலியன் குறுகே
மெல்லியன் மயிலென விளம்பின ரிவற்றின்

‡ கொளின் பி-ம்.

பொருத்தமும் விருத்தமும் பகையும் பலனும்
விரித்தினி தெண்ணி மேவினர் கொளலே. (௧)

அ0. எண்ணப் பட்ட அகரமுத லெந்தும்
வல்லூ ருந்தை வலியான் குருகே
மெல்லியன் மயிலென விளம்பிய வியற்கையிற்
புள்ளென விளம்பும் புலவரு முளரே :
பரணர். (௨)

௬.—நாள்.

அக. $மொழிக்கு முதலா வாகிய வெழுத்துக்
கோதிய நாள்வகை யியற்றுதல் கடனே. (௧)

அ௨. உயிர்முத னன்குஞ் ¶செயிர்தபு கார்த்திகை
யைந்து மூன்று மவற்றி னடைவே
வந்தபூ ராட முத்திரா டமமே. (௨)

அ௩. ககர வருக்க வகைநாள் விரிப்பி
னன்கு மிரண்டு மூன்று மூன்று
மோண மாதிரை புனர்பூசம பூசம். (௩)

அ௪. சகர நான்கைந் தொருமூன் றிவற்றின்
வகைநா ளிரேபதி முதன்மூன் றென்ப. (௪)

அ௫. ஞகர வருக்கத் ||தொருமூன் றவிட்டம்.
ஞா, ஞெ, ஞொ. உ-ம்-ஞாலம், ஞெகிழ், ஞொள்கல். (௫)

அ௬. தகர வருக்கத் திரண்டேழ் மூன்றற்கு
வகைநாள் சோதி விசாகஞ் சதயம். (௬)

அஎ. நகரத் தாறு மருடத் தடைவே
யேனை யாறுங் கேட்டைபூ ரட்டாதி. (எ)

அஅ. *பத்திய பகரத் தொருநான் கிரண்டா
றுத்திர மத்தஞ் சித்திரை யாகும். (அ)

---

$ நாமநாண் மொழிக்கு முதலாகிய வெழுத்து. பி-ம்.

¶ செயிர்தீர் பி-ம்.

|| மூன்றுமவிட்டம் பி-ம்.

* பற்றிய பி-ம்.

௮௯. மகரத் தாறு மூன்று மூன்று
மகமா யிலியம் பூர மாகும். (௯)

௯௦. யாவே யுத்திரட் டாதி யேனை
யூயோ மூலமென் றுணர்ந்திசி னோரே. (௰)

௯௧. யூயோ விரண்டு பேறுண் மூலம்
யாவே யுத்திரட் டாதிநாள் பெறுமே. (௧௧)

௯௨. ஒருநான் குரோகணி வகர மவ்வகை
மற்றை நான்கு பகசிர மாகும். (௧௨)

௯௩. †மூவகை யாய்ச்செய் தொன்றுமூன் றைந்தே
ழுட்டம ராசி வைநா சியத்தால்
விட்டனர் பின்னர் மேவினர் கொளலே. (௧௩)

௯௪. இரண்டீ ரிரண்டா றெட்டொன் பானெனத்
திரண்ட நாளே செல்வம் புகுதரும். (௧௪)

௯௫. நன்மை பொருள்பே றின்பந் தருமெனத்
தொன்னெறிப் புலவ ருரைத்தனர் துணிந்தே.
அவை,- மூவகை யொன்பதின் முதன்முத னாளாம். (௧௫)

௯௬. சிறந்தசீர்த் தலைவன் பிறந்தநா ளாயினும்
பெயர்நா ளாயினு மியலுற வுணர்ந்தபின்
னொன்றற் கேனு மிரண்டற் கேனு
‡மூன்றிகழ் பொருத்த மொழிவது கடனே. (௧௬)

எழுத்தியல் முற்றிற்று.

---

† "சொல்லியநாளிருபத் தேழையும் ஒன்பதொன்பதாக மூன்று கூறுக்கிப் பாட்டுடைத்தலைவனியற்பெயரின் முதலெழுத்திருளைத் தொடங்கிக் கூறுகளையெண்ண, ஒன்று மூன்று ஐந்து எழ்வரிற் பொருந்தா. அல்லாத நாட்களுட் பாட்டுடைத்தலைவன் பெயர் முதலெழுத்தினிராசி தொடங்கி எட்டாமிராசி நாட்களும் பொருந்தா. வைநாசியமாகிய எண்பத்தெட்டாங்கால் நின்றநாளும் பொருந்தாது." என்பது வச்சணந்திமாலையுரை.

‡ மூன்று இகழ் பொருத்தம் ௩, ௫, ௭ என்னும் மூன்றினையும் விட்டபொருத்தம்.

# சொல்லியல்.

கூஎ நவையறு சீர்க்கண மங்கலச் சொற்பெய
ரிவையொரு நாளுக் கியம்புதல் சொல்லியல். (க)

## க.—சீர்க்கணம்.

கூஅ ஈரசைச் சீரே மூவசைச் சீரே
நாலசைச் சீரே யோரசைச் சீரென
சீர்வகை நான்குந் தெரிந்தனர் புலவர். (உ)

கூகூ ஈரசை யகவன் மூவசை நான்கு
நேரிறில் வெள்ளை நிரையிறில் வஞ்சி
நாலசை பொதுமற் றோரசைச் சீரே. (ங)

க00 மூவசை *யெண்சீர்க் கணமென மொழிந்தன
ரீரசை நாலசை யோரசை யொழித்தே. (ச)

க0க கணமே மூவசைக் கூட்ட மாகும:
கபிலர். (ரு)

க0உ முற்பாட் டெடுப்பின் முதலீ ரசைச்சொல்
சொற்பான் மங்கல ரொல்லொடு தோன்றி
நிற்பினுங் கொள்ளார் நெறியுணர்ந் தோரே. (சா)

க0ங நன்மைசெய் கடவு ளுபு னவற்றிற்குத்
தொன்னெறி மரபி னின்மை யானே
நாலசைச சீரு மேலோ ரொழித்தனர்:
இந்திரகாளியார். (எ)

க0ச நீடிய மானன் றிங்க ணிலநீர்
சூரியன் வான மங்கி காற்றென
வியம்பினர் தெய்வ நலம்பெறு புலவர். (அ)

க0ரு †நேரசை மூன்றிய மான னதற்குச்
சீர்புனை நாளே பரணி வாழ்நாண்
மற்றது பயக்குமென் றுய்த்துணைத் தனரே. (கூ)

---

* யொண்சீர் பி-ம்.

† இயமானனைச சுவர்க்கம் என்னும் பெயராற் கூறுவர் வெண்பாப் பாட்டியலார். இந்திரகணமென்பர் நவநீதப்பாட்டியலுரைகாரர். "இந்திர கணமே பெருக்கஞ் செய்யுஞ், சந்திர கணமே வாழ்நா டருமே"—மாமூலம்: என்பது நவநீதப்பாட்டியலுரை மேற்கோள்.

கOஎ நிரைநேர் நேரது நீண்மதி யதற்கு
வருநாண் மகசிர மலிபுக ழாகும். (கO)

கOஎ நிரையசை மூன்று நிலக்கண மதற்குத்
தருநாள் கேட்டை திருமிகத் தருமே. (கக)

கOஅ நீர்க்கண நேர்நிரை நிரைநாள் சதயம்
பார்க்கதிர்ப் பெருக்கம் பார்க்கு மென்ப. (கஉ)

கOகூ கண்ணிய நேர்நிரை நேர்வரிற் கடுங்கதிர்
நண்ணிய நோய்தரு நாள்புனர் பூசம்
நிரைநிரை நேர்தாம் வரினது வானம்
பெருகிய கேடது ‡தருநா ளோணம். (கங)

ககO நெருப்பின் கணநிரை நேர்நிரை கார்த்திகை
விருப்புறு நாள திடுக்கண் செய்யும். (கச)

ககக. காட்டிய நேர்நேர் நிரைவரிற் காற்றது
நாட்டறை போக்குநாள் சோதி யாகும். (கரு)

ககஉ நிற்பன தீக்கண நான்கவை நீக்கி
நற்கண நான்கவை நாட்டினர் கொளலே. (கசு)

ககங அவைதாம் ;—
நீரே நிலனே வானே நீண்மதி
சீரிய மானன் செந்தீத் தெறுகதிர்
காற்றெனக் கிளர்ந்த கூற்றன வென்ப. (கஎ)

ககச நேர்முத லாகி நிரையிணை பின்வரி
னீர்க்கண மென்ப நெறியுணர்ந் தோரே. (கஅ)

ககரு நிரைமூன் றியைந்தது நிலனெனத் தகுமே. (ககூ)

ககசு மூன்றுநிரை யிணைந்து நேரிறு மூவகை
யந்தர கணமென் $றறிதல் வேண்டும். (உO)

ககஎ முதனிரை யாகி யிணைநேர் வழிவரி
னதுமதிக் கணமென் ¶றறிந்தனர் கொளலே. (உக)

---

‡ நாளோண மென்ப பி-ம்.
$ றறைதல் பி-ம்.
¶ றறைந்தனர் பி-ம்.

௧௧௮ நேரசை மூன்றிய மானன் கணமே.|| (௨௨)

௧௧௯ நேர்நடு வாகி நிரையிரு பாலுஞ்
சேரு மாயிற் செந்தீக் கணமே. (௨௩)

௧௨0 நிரைநடு வாகி நேரிரு பால்வரி
னலர்கதிர்க் கணமென் றறிந்தனர் கொளலே. (௨௪)

௧௨௧ ஈறுநிரை யாகி யிணைநேர் முன்வரின்
மாறி வந்த மாருத கணமே. (௨௫)

௧௨௨ நிலனு மதியு நீருமிய மானனு
நலமிகு முதல்வரிற் பிறநான் கும்பகை. (௨௬)

௧௨௩ யாவர்செய் யுட்கு மினமொடு புணரு
மூவகைச் சீரே முதனிற் பனவே. (௨௭)

௧௨௪ அவைதாம்;—
பெருக்கஞ் செய்தலின் வாழ்நாள் பயத்தலிற்
றருக்கிய சீர்த்தி தன்னைத் தருதலின்
மிகுதிரு வாக்கலின் வேந்தர்க்கும் பிறர்க்குந்
தகுமெனப் பகரினுந் தகாது மற்றச்
சீர்க்குரிய நாளொடு செய்யுட் செய்யும்
பொருபடைக் குரிசினுள் பொருந்தாக் கடையே. (௨௮)

௧௨௫ அவைதாம்;—
தேயம் போக்குதல் செல்வத்து விளிதல்
சூனிய மாதல் சுழன்றே யுறுத
லூனம் பயக்குமென் றுரைத்தன ராயினு
மாதி யமுதெழுத் தாகிய சீர்கட்
கோதிய தெய்வத் திற்குரித் தாக
வோதிய நாளொடு பாடப் படுமே. (௨௯)

---

|| "நேரசை மூன்றிய மான னிரைப்பின்பு நேரிரண்டு-சேர்வன திங்க ணிரையசை மூன்றுஞ் செழுநிலமா-நேரசைப் பின்னர் நிரையிரண் டாய்வரி னீர்க்கணமாங்-தேரிய லல்குற் றிருவே யிதுநல்ல சீர்க்கணமே." என்பது நவநீதப்பாட்டியல்.

௧௨௫ எல்லாக் கணமு நாணால மில்லெனிற்
பொல்லாங்கு தருமெனப் புகல வேண்டும்.:
இந்திரகாளியார். (௯௦)

௧௨௭ மங்கல மமைந்த சொல்லொடு பொருந்திய
வீரசை நான்கினு ணேரீ றொழித்து
நிரையீற் றியற்சீர் முதற்க ணிற்பினும்
வரையார் மூவகை வாராக் காலே. (௯௧)

௧௨௮ ஈரசை முதலா நேரீ றொழித்து
நிரையீற்று மங்கலம் புணர்ந்தனர் கொளலே. (௯௨)

௧௨௯ நிரைநிரை கொற்றவை நேர்நிரை சாத்தன். (௯௩)

௧௩௦ அவைதாம் :—
மிகுதரு திருவும் புகழுஞ் செய்யும்:
சேந்தம்பூதனார். (௯௪)

௧௩௧ ஓரசைச் சீரு நாலசைச் சீரு
மீரசைச் சீரு மோரிறு சீரு
மங்கலம் புணரினு மங்குதல் செய்யும்:
கோவூர்க்கிழார். (௯௫)

## உ.—மங்கலச் சொல்.

௧௩௨ பொன்பூத் திருமணி புனலா ரணங்கடல்
செங்கதிர் திகிரி தேர்பரி யெழுததே
மாநிலங் கங்கை மலைபுக ழமுதங்
கார்புய லுலகங் களிறே யருந்ததி
பார்மதி நாள்சீர் ஞெண்டுட னென்ன
வெண்ணிய சொல்லே யவையல் பிறவுங்
கண்ணிய மங்கலச் சொல்லெனக் காட்டினர். (௧)

௧௩௩ சொல்லெனப் படுபவை சொல்லுங் காலைத்
திருப்பொன் பூமி புனன்மணி கடல்யா
றெழுத்தமு தெழின்மழை பசுங்கதிர் செஞ்சுடர்
நாள்சொன் ஞெண்டு நாட்டிய பரிமலை
கருட னருந்ததி மற்றிவை யென்ப
நிலைபெறு மங்கல நெறிநிற் பனவே:
பொய்கையார். (௨)

கஙச செப்பிய வுடம்பொடு சேரா துயிர்முத
னிற்பன மக்கட் காமெனி னோர்ந்திலர்
மற்றவை கடவுளர் முனிவர்க் காமே. (௩)

கஙரு உயிரொடு புணரா மென்மையு மிடையுஞ்
செயிரிற் றீமையுஞ் செப்பத் தகுமே. (௪)

கஙசு ஓதிய மெய்யொடு புணரா துயிரெழுத்
தாதி நிற்பி *னானந் தமமே. (௫)

கஙஎ உடம்பு பிரிவுயிர் சாதற் றனே:

இந்திரகாளியார். (௬)

கஙஅ நரகரும் விலங்கு மமுதொடு வரினவை
புகரில வென்ப புலமை யோரே:

பரணர். (எ)

கஙகூ மூன்றைந் தேழொன் பானெழுத் தான்ற
வொற்றுட னெண்ணிமுன் சொற்ற முறையிற்
பல்பொருட் படவருஉஞ் சொல்லா லகற்றி
யொருபொருட் டாகி வருமொழி பற்றித்
திரித லொழியத் திருந்திச சொல்லினுட்
டெரிவோர் வகையுளி மறுத்து நட்டது
மங்கலச் சொல்லென வகுத்தனர் புலவர். (அ)

கச0 முன்னிலை யெழுத்தின் †வியநிலை நலனே
‡சமநிலை யாயின் முதல்வற் றனம். (கூ)

கசக சொல்லிய மரபின் மங்கலஞ் சிதைத்துப்
புல்லுதல் குற்றப் பொருட்டலை மகற்கே. (க0)

கசஉ. தொடுகழல் வேந்தன் றுன்னு தோரும்
வடுவறு பரிசில வழங்கா தோருங்
கெடுதல் வேண்டிச் சிதைத்தலு முரித்தே. (கக)

* ஆனந்தம்—சாக்காடு.
† வியம்—ஒற்றை யெண்.
‡ சமம்—இரட்டை யெண்.

## ங—பெயர்ப் பொருத்தம்.

கசங எண்வகைப் பெயரு நண்ணுதல் செப்பிற்
குலங்குடி கோத்திர நலம்பெறு குணமே
மனமே யாணை மன்னிய சிறப்பே
யியற்பெய ரென்றிவை தம்மு ளியன்ற
சிறப்பியற் பெயரெனு மிருதிறத் திற்கு
மயக்கற மொழிமுத லெடுக்குஞ் சொல்லுடன்
பொருத்தங் கொள்வர் கருத்துணர்ந் தோரே. (க)

கசச பார்ப்பா ரரசர் வணிகர்வே ளாளரெனப்
பாற்படு நாற்பெயர் குலப்பெய ராகும். (உ)

கசரு குடிப்பெய ராவன கூறுங் காலைச்
சேரன் சோழன் பாண்டிய னென்றிப்
போல்வன பிறவும் பொருத்தங் கொளலே. (ங)

கசசு கோத்திரப் பெயரே கூறுங் காலைத்
தாதைகுடிப் பெயரைத் தக்கவற் றியற்றல. (ச)

கசஎ குணப்பெய ரேனைப் புலவோர் கொடுபடத்
தணப்பில வாகித் தழுவும் பெயரே. (ரு)

கசஅ மனப்பெய ராவன தனக்குத் தானே
யெனக்கிது வேண்டுமென் றெய்தும் பெயரே. (சு)

கசகூ ஆணைப் பெயரோ வலியோ ரஞ்சப்
பேணி யுலகம் பேசும் பெயரே. (எ)

கருO சிறப்புப் பெயரோ தெரியுங் காலைச்
சிறப்புடை வேந்தன் கொடுக்கும் பெயரே. (அ)

கருக சாதியி னுள்ளோர் தமக்குத் தாமே
நீதிகொள் சிறப்பியற் பெயர்கொளற் குரியர். (கூ)

கருஉ முடியுடை வேந்தன்முற் குலத்தோர்க் கல்லது
பட்டமும் பூவும் பூணு மாழியு
நட்டமி னலமலி சிறப்புப் பெயருங்
கொடாஅ னெனமொழிப குலமொழிப் புலவர். (கO)

கருங விணைசெயன் மருங்கின்மிக் கோரும் பெறுப. (கக)

௨௦௫. வரன்முறை பிறழ வுறுப்பு மயங்கி
மிக்குங் குறைந்தும் வருவது கொச்சக
வொருபோ காமென வுரைத்தனர் புலவர். (௫௬)

௨௦௬. * கொச்சகத் தன்மையிற் கொச்சக மென்ப. (௫௭)

௨௦௭. தேவப் பிரணவ மெனும்வட மொழியைத்
தேவ பாணியெனத் திரித்துவழங் கினரே. (௫௮)

௨௦௮. தேவ பாணி தெரியுங் காலை
மாசறு துழாய்முடி மலைந்த சென்னி
நீர்நில மளந்த நெடியோன் மேற்றே. (௫௯)

௨௦௯. சுடர்கதிர்த் திங்கள் சூடி யோற்கும்
படர்திரைப் பணிக்கடன் மாதடிந் தோற்கு
முரிய காலமு முளவென வொழிப. (௬௦)

௨௧௦. வேந்தன் வேண்டு நெறிசெய் தாலும்
வாய்ந்த மதியு மரபும் வாழ்த்தலும்
விதியென மொழிப மெய்ந்நெறிப் புலவர். (௬௧)

## ௫—கலம்பகம்.

௨௧௧. சொல்லிய கலம்பகஞ் சொல்லி லொருபோகு
முதற்கண் வெண்பாக் கலித்துறை புயமே

---

* 'கொச்சக மென்பது ஒப்பினாகியபெயர். ஓராடையுள் ஒருவழியடுக்கியது கொச்சகமெனப்படும்: அதுபோல, ஒரு செய்யுளுட் பல குறள் அடுக்கப்படுவது கொச்சக மெனப்படும்' (தொல், செய், ௧௨௧) எனவும், 'இனிக் கொச்சக மென்பது ஒப்பினாகியபெயர்: என்னை? பலகோடுபட அடுக்கியுடுக்கும் உடையினைக்கொச்சகமென்ப; அதுபோலச் சிறியவும் பெரியவும் விராயடுக்கியுந் தம்முளொப்ப அடுக்கியுஞ் செய்யப்படும் பாட்டதனைக் கொச்சகமென்றாராகலினென்பது. இக்காலத்தார் அதனைப்பெண்டிர்க்குரிய உடையுறுப்பாக்கிக்கொய்சகமென்று சிதைத்தும்வழங்குப. (௸, ௸ ௧௨௫) எனவும் **பேராசிரியரும்**, "பலகோடுபட அடுக்கியுடுக்கும்உடையினைக்கொச்சக மென்பவாகலின் அதுபோலச் சிறியவும் பெரியவும் விராயடுக்கியுந் தம்முளொப்ப அடுக்கியும் வருஞ் செய்யுளைக் கொச்சகமென்றார். இது ஒப்பினாகியபெயர். இக்காலத்து இது மகளிர்க்குரியதாய்க் கொய்சக மென்றுவழங்கிற்று" (௸, ௸, ௸) என **நச்சினார்க்கினியரும்** கூறியவாற்றானறிந்துகொள்க. இனிக் கொச்சைத்தன்மையினென்பதூஉம் பாடம். "கொச்சக மராகம்" (தொல், செய், ௧௨௧) என்பதனுரையில் "சிறப்பிலதனைக்கொச்சையென்று கூறும் வழக்கு நோக்கி இதனையும் சிறப்பின்மையாற் கொச்சகமென்றாரென்பாருமுளர்" என அந்நச்சினார்க்கினியரே கூறினார்.

யம்மனை யூசல் யமகங் களிமறஞ்
சித்துக் கால மதங்கி வண்டே
கொண்டன் மருள்சம் பிரதம் வெண்டுறை
தவசு வஞ்சித் துறையே யின்னிசை
புறமே யகவல் விருத்த மெனவருஞ்
செய்யுட் கலந்துட னெய்திய வந்த
மாதி யாக வருமென மொழிப. (௪௨)

உ௧௨. தேவர்க்கு முனிவர்க்குங் காவ லரசர்க்கு
நூறு தொண் ணூற் றைந்துதொண் ணூறே
ஒப்பி லெழுப தமைச்சிய லோர்க்குச்
செப்பிய வணிகர்க் கைம்பது முப்பது
வேளா ளர்க்கென விளம்பினர் செய்யுள்.

௬—உலா. (௪௩)

உ௧௩ முதனிலை பின்னெழு நிலையுலா வெண்கலி. (௪௪)

உ௧௪ பாட்டுடைத் தலைவ னுலாப்புற வியற்கையு
மொத்த காமத் திணையாள் வேட்கையுங்
கலியொலி தழுவிய வெள்ளடி யியலாற்
றிரிபின்றி * நடப்பது † கலிவெண் பாட்டே.

பொய்கையார். (௪௫)

உ௧௫ பேதை முதலா வெழுவகை மகளிர்கண்
டோங்கிய வகைநிலைக் குரியா னொருவனைக்

* 'நடப்பினது' பி-ம்.

† "இனி யொருபொருணுதலாது திரிந்து வருங் கலிவெண்பாட்டும் ஈண்டுக்கூறிய நெடுவெண்பாட்டோ டொருபுடை ஒப்புமையின் அக்கலி வெண்பாட்டாக இக்காலத்தார் கூறுகின்ற உலாச்செய்யுளும் புறப்புறக் கைக்கிளைப் பொருட்டாதல் ஒன்றெனமுடித்தல் என்னு முத்தியாற் கொள்க. அவ்வுலாச் செய்யுளிரண்டுறுப்பாயும் வெண்பாவிற் கெட்டும் வருதலிற் கலிவெண்பாவின் கூறும். இக்காலத்து அதனை ஒருறுப்பாகச் செய்து செப்பலோசையாகவுங் கூறுவர். அது துள்ளலோசைக்கே யேற்குமாறுணர்க" (தொல், செய், ௧௧௮) எனவும், "அது திருவுலாப்புறத்துள் 'வாமான வீசன் வரும்' (சேரமான் பெருமாணாயனார் ஞானவுலா) எனமுடித்து மேல் வேறோருறுப்பாயவாறும் ஒழிந்தவுலாக்களுள் வஞ்சியுரிச்சீர் புகுந்தவாறும் அடிவரையறையின்மையும்" (ஷை, ஷை, ௧௫௧) எனவும் நச்சினார்க்கினியர் கூறுவர்.

காதல்செய் தலின்வருங் கலிவெண் பாட்டே. (௪௬)

௨௧௬ குடிநெறி மரபு கொளல்கொடை விடிய
னன்னீ ராட னல்லணி யணித
றொன்னக ரெதிர்கொள னன்னெடு வீதியின்
மதகளி றூர்தன் முதனிலை யாகும். (௪௭)

௨௧௭ ஆதி நிலையே குழாங்கொள லென்றெடுத்
தோதிய புலவரு முளரென மொழிப. (௪௮)

௨௧௮ ஏழு நிலையு மியம்புங் காலை
பேதை பெதும்பை மங்கை மடந்தை
யரிவை தெரிவை பேரிளம் பெண்ணெனப்
பாற்படு மகளிர் பருவத் தாத
னோக்கி யுரைப்பது நுண்ணியோர் கடனே. (௪௯)

௨௧௯ பேதைக் கியாண்டே யைந்துமுத லெட்டே. (௫௦)

௨௨௦ பெதும்பைக் கியாண்டே யொன்பதும் பத்தும். (௫௧)

௨௨௧ மங்கைக் கியாண்டே பதினொன்று முதலாத்
திரண்ட பதினா லளவுஞ் சாற்றும். (௫௨)

௨௨௨ மடந்தைக் கியாண்டே பதினைந்து முதலாக்
திடப்படு மொன்பதிற் றிரட்டி செப்பும். (௫௩)

௨௨௩ அரிவைக் கியாண்டே யறுநான் கென்ப. (௫௪)

௨௨௪ தெரிவைக் கியாண்டே யிருபத் தொன்பது. (௫௫)

௨௨௫ ஈரைந் திருநான் கிரட்டி கொண்டது
பேரிளம் பெண்டுக் கியல்பென மொழிப.
பொய்கையார். (௫௬)

௨௨௬ காட்டிய முறையே நாட்டிய வாண்பாற்
கெல்லையும் பெயரு மியல்புற வாய்ந்து
சொல்லிய தொன்னெறிப் புலவரு முளரே. (௫௭)

௨௨௭ பாலன் யாண்டே யேழென மொழிப. (௫௮)

௨௨௮ மீளி யாண்டே பத்தினை காறும். (௫௯)

௨௨௯ மறவோன் யாண்டே பதினான் காகும். (௬௦)

௨௱௦ திறலோன் யாண்டே பதினைந் தாகும். (௬௧)

௨௱௧ பதினா றெல்லை காளைக் கியாண்டே. (௬௨)

௨௱௨ அத்திற * மிறந்த முப்பதின் காறும்
விடலைக் காகு மிகினே முதுமகன்.

அவிநயனார். (௬௩)

௨௱௩ நீடிய நாற்பத் தெட்டி னளவு
மாடவர்க் குலாப்புற முரித்தென மொழிப. (௬௪)

௨௱௪ சிற்றில் பாவை கழங்கம் மனையே
பொற்புறு மூசல் பைங்கிளி யாழே
பைம்புன லாட்டே பொழில்விளை யாட்டே
நன்மது நுகர்ந் தின்ன பிறவு
மடவரர்க் குரிய வாகு மென்ப. (௬௫)

௨௱௫ வேந்தர் கடவுளர் விதிநூல் வழியுணர்
மாந்தர் கலிவெண் பாவிற் குரியர். (௬௬)

௨௱௬ நாலு வருணமு மேவுத லுரிய
வுலாப்புறச் செய்யுளென் றுரைத்தனர் புலவர்;

அவிநயனார். (௬௭)

## எ.—சின்னப்பூ.†

௨௱௭ மலையும் யாறு நாடு மூரும்
பரியுங் களிறுங் கொடியு முரசுந்
தாரும் பெயரு மெனத்தெரி பத்துஞ்
சொல்லு மெல்லையின் முதற்குறட் கண்ணே
சின்னத் தொழிலை மன்ன வைத்துப்
பின்னர்க் குறளுட் பாட்டுடைத் தலைவ
ரியற்பெயர் வைத்தவர்க் குரிமை தோன்றுஞ்

---

* 'மியன்ற' பி-ம்.

† "வழக்கொடு சிவணிய வகைமை யான" (தொல். புற. ௩௧) என்பத னுரையில் நச்சினார்க்கினியர் "சிவணியவகைமை' என்றதனானே முற்கூறிய வற்றோடே நாடும், ஊரும், மலையும் யாறும் படையுங் கொடியுங் குடையும் முரசும் நடைநவில்புரவியும் களிறுந் தேருந் தாரும் பிறவும் வருவனவெல் ங் கொள்க. இவற்றுட் சிலவற்றை வரைந்துகொண்டு சின்னப்பூ என்று ரிட்டு இக்காலத்தார் கூறுமாறுணர்க" என்பர்.

செயல்பெற வைப்பது சின்ன மதுவே
யாதிப் பாவின ததனினம் வருமே. (சூஅ)

உரு௮ மலையே யாறே நாடே யூரே
பறையே பரியே †களிறே தாரே
‡பெயரே கொடியே யென்றிவை தராங்கம். (சூகூ)

உருகூ பத்தே யேழே மூன்றே சின்னம். (எ0)

அ.—பரணி.

உச0 மயக்கறு கொச்சகத் தீரடி யியன்று
நயப்புறு தாழிசை யுறுப்பிற் பொதிந்து
வஞ்சி மலைந்த வுழிஞை முற்றித்
தும்பையிற் சென்ற தொடுகழன் *மன்னனை
வெம்புசின மாற்றான் றானைவெங் களத்திற்
குருதிப் பேராறு பெருகுஞ் செங்களத்
†தொருதனி யேத்தும் பரணியது பண்பே. (எக)

உசக தேவர் வாழ்த்தே கடைநிலை பாலை
மேவி யமருங் காளி கோயில்
கண்ணியை யேத்த லலகை விநோதங்
கனநிலை நிமித்தம் பசியே யோகை
பெருந்தேவி பீட மழகுற விருக்க
வமர்நிலை நிமித்த மவள்பதம் பழிச்சா
மன்னவன் வாகை மலையு மளவு
மரபினி துரைத்தன் மறக்களங் காண்டல்
செருமிகு களத்திடை யடுகூழ் வார்த்தல்
பரவுத லின்ன வருவன பிறவுந்
தொடர்நிலை யாகச் சொல்லுதல் கடனே. (எஉ)

உசஉ யானை சாய்த்த வடுகளத் தல்ல
தியாவரும் பெறுஅர் பரணிப் பாட்டே. (எங)

---

† களிறொழித்துப் படைகோடலுமுண்டு. அவ்வாறு திருவாசகத்துள்ள திருத்தசாங்கத்துக் காண்க.

‡ பெயரை ஆணை என்பாருமுளர். (இலக்கணவிளக்கப்பாட்டியல்-உஉ)

* 'மன்னன்' எனவும், † 'தொருவற்போற்றும்' எனவும் பி-ம்.

௨௪௩ ஏழ்தலைப்பெய்த நூறுடை யிபமே
யடுகளத் தட்டாற் பாடுதல் கடனே. (௭௪)

## ௯.—மடல்.

௨௪௪ அறம்பொருள்*வீடு திறம்பெரி தழித்துச்
சிறந்த வேட்கை செவ்விதிற் பராஅய்ப்
பாட்டுடைத் தலைமக னியற்பெயர்க் கெதுகை
நாட்டிய வெண்கலிப் பாவ தாகித்
தனிச்சொல் லொரீஇத் தனியிடத் தொருத்தியைக்
கண்டபி னந்த வொண்டொடி யேத்தன்
மற்றவன் வடிவை யுற்ற கிழியெழுதிக்
காமங் கவற்றக் கரும்பனை மடன்மா
வேறுவ ராடவ ரென்றனர் புலவர். (௭௫)

௨௪௫ மடன்மாப் பெண்டி ரேறா ரேறுவர்
கடவுளர் தலைவ ராய்வருங் காலே. (௭௬)

௨௪௬ கடவுளர் மேற்றே காரிகை மடலே. (௭௭)

௨௪௭ எந்தை யுடைப்பெயர்க் கெதுகை சாற்றி
யந்தமி லின்பம் பொருளா வேத்திப்
பொருளு மறனும் வீடும் பழித்து
மடன்மா வேறுதன் மாதர்க் குரித்தே.* (௭௮)

## ௧௦.—மறம்.

௨௪௮ பெருநில வேந்தன் மகட்பால் வேண்டி
யொருபெருந் தூத னுரைத்தமொழி கேட்டுக்
குறுநில மறவன் †வெஞ்சினந் திருகி
மாற்றமிக வுரைப்பது மறமென மொழிப. (௭௯)

## ௧௧.—பல்சந்தமாலை.

௨௪௯ சொன்ன கலம்பக வுறுப்புவகை நீக்கி
மன்னிய பத்து முதனூ றளவா

---

* இவ்வாறு வந்தன மங்கையர்கோன் அருளிச் செய்த பெரியதிருமடல் சிறியதிருமடல் என்பன.

† 'வெஞ்சின வஞ்சின' பி-ம்.

வந்த மரபின் வரூஉஞ்செய்யுண் முதலா
வந்தது பல்சந்த மாலை யாகும். (௮௰)

௧௨.—இணைமணிமாலை.

௨௫௰ இணைமணி மாலை தணிவிலந் தாதியாய்
மறையவர் பாவும் வணிகர்தம் பாவின்
றுறையு மியைந்தீ ரைம்பது வருமே. (௮௧)

௨௫௧ வெண்பாக் கலித்துறை யீரிரண் டியைந்த
வொண்பா நூறவை யிணைமணி மாலை.* (௮௨)

௧௩.—இரட்டைமணிமாலை.

௨௫௨ வெண்பா முதலாக் கலித்துறை பின்வரு
மிந்த விருப திரட்டைமணி மாலை. (௮௩)

௨௫௩ ஆதி யந்தம் வெண்பாக் கலித்துறை
யேதமின் றி வருவ திரட்டைமணி மாலை
யதுவே நாலைந் தியலு மென்ப. (௮௪)

௧௪.—மும்மணிமாலை.

௨௫௪ விருத்தவெள்ளை கலித்துறையகவல்
விருத்த மும்மணி விளம்புமந் தாதி.† (௮௫)

௧௫.—நான்மணிமாலை.

௨௫௫ வெண்பாக் கலித்துறை யகவல் விருத்த
நண்பாய் வருவது நான்மணி மாலை. (௮௬)

௨௫௬ ‡அகவலு மகவல் விருத்தமு நாற்ப
தகவலை முன்வைத் தறைவது கடனே. (௮௭)

௨௫௭ வெள்ளை கலித்துறை யகவல் விருத்தங்
கொள்வது நான்மணி ¶கோத்தவந் தாதி. (௮௮)

* வெண்பாவகவலிணைமணிமாலையுங் கொள்வர் இலக்கணவிளக்கப்பாட்டியலார்.

† 'மாலையந்தாதி' பி-ம்.

‡ இதற்கு அளவு முப்பது.

¶ வெண்பாக் கலித்துறை விருத்தம் அகவல் எனத்தொடுப்பர் பிற்காலத்தார்.

### ௧௬.—கலம்பகமாலை.

௨௫௮ ஒருபோ குடனம் மனைநனி நீக்கி
வெள்ளை முதலா வெல்லா வுறுப்புந்
தள்ளா வியலது கலம்பக மாலை. (௮௯)

௨௫௯ ஒருபோ கம்மனை யொழித்துவெண் பாமுதற்
கருதிய பெயரது கலம்பக மாலை. (௯0)

### ௧௭—மும்மணிக்கோவை.

௨௬0 வெள்ளையு மகவலு நேரிசை யாகக்
கலித்துறை வரவந் தாதி யாகி
முறைமையி னியல்வது மும்மணிக் கோவை. (௯௧)

௨௬௧ தோன்றிய வகவல் வெள்ளை கலித்துறை
மூன்றும் வருவது மும்மணிக் கோவை.* (௯௨)

௨௬௨ மும்மூன் றொருபொருண் மிசைவரு மென்ப. (௯௩)

### ௧௮—கலியந்தாதி.

௨௬௩ வல்லின மெல்லின மிடையின வெழுத்துப்
புல்லி மருங்கு போகா தொன்றிக்
குறிலெனிற் குறிலே நெடிலெனி னெடிலே
பொருந்தி நாற்கலை கொண்டோ ரடியாய்த்
திருந்து மிவ்வகை நான்கடி யாகியு
மோரொலி யாகியு மெண்ணான் காகிய
கலையொடு பொருந்தியுங் குறிலு நெடிலு
முறைமுதல் வரினு மவ்வெழுத் தாகியு
மிப்பரி சியன்ற முப்பது கட்டளை
மிக்கது கலியந் தாதி யாகும். (௯௪)

௨௬௪ வெண்கலி யுஞ்சில சிறுபான்மை வருமே. (௯௫)

### ௧௯.—ஒலியந்தாதி.

௨௬௫ தத்த மினத்தி லொப்புமுறை பிறழாது

* இதற்கும் அளவு முப்பது. இஃது ஆசிரியம் வெண்பாக் கலித்துறை
ருமெனவும், மும்மணிமாலை வெண்பாக் கலித்துறை ஆசிரியவிருத்த
ருமெனவுங் கொள்க.

நாலடி யீரெண் கலையொரு முப்பது
கோலிய தொலியந் தாதி யாகும். (௯௬)

உ௬௬ ஈரொலி யாகிய வெண்ணான்கு கலையெனச்
சீரியற் புலவர் செப்பினர் கொளலே. (௯௭)

உ௬௭ வண்ணக மென்ப தொலியெனப் படுமே. (௯௮)

## ௨௦—யானைத் தொழில்.

உ௬௮ மூவகை நிலனு மூவகை நிறையும்
பல்வகைத் தேயமு மெழுவகை யுறுப்பு
யங்கமும் வருணமும் யாண்டு மைவகைக்
கொலையு மிருவகை நடையு மைவகை
யுணர்வு முடையோர்ப் பேணலு முளப்பட
நண்ணிய வேளாண் பாவி னலம்பெற
வெண்ணி யுரைப்ப தியானைத் தொழிலே. (௯௯)

உ௬௯ கிரிசரம் வனசர நதிசர மென்றிவை
நிலைபெறு நிலனென நிறுத்திசி னோரே. (௧௦௦)

உ௭௦ உயரமு நீளமுஞ் சுற்று மளவினிற்
குறையா தியல்வது நிறைவெனப் படுமே. (௧௦௧)

உ௭௧ பல்வகைத் தேயங் கொல்களிறு பிறக்கும்
பல்வகைத் தேயமு மென்மனார் புலவர். (௧௦௨)

உ௭௨ பாத நாலுங் கையும்வா லதியுங்
கோசமு நிலனுறத் தீண்டுதல் குறியே. (௧௦௩)

உ௭௩ குலமெனப் படுவது பல்வகை வருணமு
நலனுற வுரைக்கு நலத்த தென்ப. (௧௦௪)

உ௭௪ நலமிகு வாழ்நாள் பொலிவுற வியம்புதல்
யாண்டென மொழிப வியனெறிப் புலவர். (௧௦௫)

உ௭௫ கையுமுற் கூறுங் கடியபிற் கூறுங்
கூர்ங்கோ டிரண்டுங் கொலைத்தொகை வகையே. (௧௦௬)

உ௭௬ முன்ன ரூன்றிய காற்குறி தன்னிற்
பின்னர்ப்பத மிடுவது தோரண மென்ப. (௧௦௭)

உ௭௭ பிறழ விடுவது வக்கிர மதுவே
சாரிகை விகற்பமு மாகு மென்ப. (௧௦௮)

உ௭௮ நன்மை யியற்றலுந் தீமை யியற்றலும்
பற்றிய நன்மை தீமை நினைத்தலுங்
கயக்கறு கால நினைத்தலும் புலனே. (௧௦௯)

உ௭௯ வழுவா துடையோ ரேவ லியற்ற
லுடையோர்ப் பேண லென்மனார் புலவர். (௧௧௦)

மேல் நண்ணிய என்றதனாலாசிரியவடியாற் பாடுவாருமுளர்.

உ௮௦ அகவலு முரித்தென வறைகுந ருளரே. (௧௧௧)

## உ௧—வருக்கமாலை.

உ௮௧ மொழிக்குமுத லாகிய வெழுத்துக் கெல்லாம்
வருக்க முரைப்பது வருக்க மாலை. (௧௧உ)

## உஉ—நாமமாலை, புகழ்ச்சிமாலை.

உ௮உ. * மைந்தர்க் காயின் வஞ்சிப் பல்வகை
நேர்ந்தவடி †மயக்க நாம மாலை. (௧௧௩)

உ௮௩ ஆடவர் திறத்து வஞ்சி யின்னெறி
நாடிய பாத மயங்க வைப்பி
னும மாலை மற்றது மடந்தையர்க்
காமெனிற் புகழ்ச்சி மாலை யாகும். (௧௧௪)

உ௮௪ அதுவே-செங்கலை வண்ணப் பாவு மியங்கும் ;
கோவூர் கிழார். (௧௧௫)

உ௮௫ வெள்ளடி யியலாற் புணர்ப்போர் குறிப்பிற்
றுள்ளா வியல்பது புகழ்ச்சி மாலை ;
சேந்தம்பூதனார். (௧௧௬)

## உ௩—இன்னிசைத் தொகை.

உ௮௬ தொண்ணூ றேனு மெழுப தேனு
மின்னிசை தொடுப்பி னின்னிசைத் தொகையே. (௧௧௭)

---

* 'மாந்தர்க்' பி-ம்.

† 'மடக்கு' பி-ம்.

௨௮௭ எண்ணிய வகையா னின்னிசை வெண்பாத்
தொண்ணூ றெழுபது தொடுப்பதுத் தொகையே; கோவூர் கிழார். (௧௧௮)

## ௨௪.—விருத்தவகை.*

௨௮௮ பரிசிலை யானை †வாள்குடை வேல்செங்
கோலொடு நாடூ ருறுப்பி னகவல்
விருத்தம் பத்தென வேண்டினர் புலவர். (௧௧௯)

## ௨௫—ஐம்படைவிருத்தம்.

௨௮௯ சக்கரந் தனுவாள் சங்கொடு தண்டிவை
யைம்படை யகவல் விருத்த மாகும். (௧௨0)

## ௨௬—நாழிகைக்கவி.

௧௯0 ஈரிரண் டியாமத் தியன்ற நாழிகைச்
சீர்திகழ் வெண்பாப் பாடுநர் யாவரு
மிருநான் கேழே ழிருநான் காமெனக்
கன்னன் முப்பது மெண்ணின ரினிதே. (௧௨௧)

௨௯௧ மன்னர் கடவுளர் முன்னிலை யாக
வன்ன கடிகை யென்னு மியல்பிற்
றெருகுநெறி யன்னவை நேரிசை வெண்பா.

முதல்யாமம் எழளவும் பாடி எட்டாவதில்யாமம்ஒன்றென்றும் இரண்டாம்யாமம் ஆறளவும்பாடி எழில் யாமம்இரண்டென்றும் மூன்றாம்யாமம் ஆறளவும்பாடி எழில் யாமம்மூன்றென்றும் நான்காம்யாமம் எழளவும்பாடி எட்டில் யாமம்நான்கென்றும் பாடின் முப்பது வெண்பாவாம். (௧௨௨)

## ௨௭—நவமணிமாலை.

௨௯௨ பாவே யினமே யென்றிவை யிரண்டு
மேவிய வகையது நவமணி மாலை. (௧௨௩)

## ௨௮—கைக்கிளைமாலை.

௨௯௩ ‡இரங்க வருவது மடங்கிய வொருதலை
யியைந்த நெறியது கைக்கிளை மாலை. (௧௨௪)

---

* பரி முதலியவற்றைப் பத்துப்பத்தாகக் கூறும் ஒன்பதுவகை விருத்தமும் அவ்வப்பெயரான் விளங்குமென்றுணர்க.

† 'வாளொடு வேறோ' பி-ம்.

‡ 'இயங்க' பி-ம்.

௨௯௪ தாயர் சேரிய ராயர் தீங்குழ
றென்றல் சேமணி யன்றி றிங்கள்
வேலை வீணை மாலை கங்குல்
காம னைங்கணை கண்வளர் கனவென
வெஞ்சிய நன்னிற வேனில் குயிலே
கொஞ்சிய கிள்ளை கொய்தளிர்ச் சேக்கை
பயிறரு நன்னலம் பாங்கர் பாங்கிய
ரியன்ற பருவர லென்மனார் புலவர். (௧௨௫)

௨௯௫ முல்லை யசோகு பசுந்தளிர் தாமரை
யல்லி நீல மைங்கணை யாகும. (௧௨௬)

பயாகிய என்றதனு' ரினப்படுத்திப்பாடுவாருமுளர். பாடும்பொழுது மருட்பாவாற்பாடப்படும்: அல்லாதவழி ஆசிரியமும் வஞ்சியும்ஒழிய அல்லாத பாவானும் இனத்தானும் பாடப்படும். சிறுபான்மை ஆசிரியப்பாவானு மினத்தானும் பாடப்படும் எனக் கொள்க.

## ௨௯—அரிபிறப்பு.

௨௯௬ சேலே யாமை யேனஞ் சிங்கங்
கோல வாமனன் மூவகை யிராமர்
கரியவன் கற்கி யெனவரு கடவுளர்
புரிதரு தோற்றந் தெரிதரப் பராஅய்ப்
பாட்டுடைத் தலைவனைக் காக்க வேண்டி
யினமொழி நாட்டி யகவல் விருத்த
மொருப தியற்றுத லாழியோன் பிறப்பே. (௧௨௭)

## ௩௦—அட்டமங்கலம்.

௨௯௭ ஒருவனைக் காக்கவென் றிறைவனை யேத்திய
வெண்வகை யகவல் விருத்தம் புணர்த்த
னண்ணிய வட்ட மங்கல மெனப. (௧௨௮)

௨௯௮ இறைவனை யேத்திய வெண்வகை மங்கல
மறிதரும் பாவே யகவல் விருத்தம்;

**சேந்தம்பூதனர்.** (௧௨௧)

### ௩௧—இல்லறவெள்ளை.

௨௯௯ கலிதரு வண்ணமும் வெள்ளையு மொன்பா
னிலைபெறப் புணர்ப்பினஃ தில்லற வெள்ளை. (௧௩௦)

இதனுட் கலிதருவண்ணம் என்றதனால் வெண்கலிப்பா ஒன்றானும் பாடுவாருமுளர். நிலைபெற என்றதனாற் சந்தவகை யொன்பதும் வெண்பா ஒன்பதுமாகப் பாடுவாருமுளர்.

### ௩௨—மங்கலவெள்ளை.

௩௦௦ சந்தமும் வெள்ளையுந் தருவன கற்புடை
மங்கல வெள்ளை வருவன வொன்பான். (௧௩௧)

௩௦௧ அதுவே, வெண்கலி தானும் வருதற்கு முரித்தே.
மாபூதனார். (௧௩௨)

௩௦௨ சந்தமும் வெள்ளையுந் தனித்தனி புணர்த்தலு
மந்தமில் புலவ ராமென மொழிப;
சீத்தலையார். (௧௩௩)

### ௩௩—தாரகைமாலை.

௩௦௩ இரண்டு பொருள்புண ரிருபத் தெழுவகைச்
சீரிய பாட்டே தாரகை மாலை. (௧௩௪)

### ௩௪—செந்தமிழ்மாலை.

௩௦௪ எப்பொரு ளேனு மிருபத் தெழுவகை
செப்பிய †நெறியது செந்தமிழ் மாலை. (௧௩௫)

பாவானும் இனத்தானும் பாடுவாரு முளர். நான்கு முதற்பாவானாதல் ஒருபாவி னினத்தானாதல் பாடுக என்பாருமுளர்.

### ௩௫—தாண்டகம்.

௩௦௫ மூவிரண் டேனு மிருநான் கேனுஞ்
சீர்வகை நாட்டிச் செய்யுளி னாடவர்
கடவுளர்ப் புகழ்வன தாண்டக மவற்று
ளறுசீர் குறியது நெடியதெண் சீராம். (௧௩௬)

௩௦௬ அறுசீ ரெண்சீ ரடிநான் கொத்தங்
கிறுவது தாண்டக மிருமுச் சீரடி
குறியது நெடிய திருநாற் சீரே;
பல்காயனார். (௧௩௭)

---

† 'வகையது' பி-ம்.

௬0எ மங்கல மரபின் மானிடர் கடவுளர்
தம்புக ழுரைப்பது தாண்டக வகையே. (க௬அ)

௬0அ தாண்டக மானிடர் கடவுளர்க் குரித்தே:
மாபூதனார். (க௬கூ)

௬0கூ அடிவரை நான்கும் வருமெழுத் தெண்ணி
நேரடி வருவது தாண்டக *மாகும்.
சீத்தலையார். (கஎ0)

௬௬—பதிகம்.

௬க0 ஆசிரி யத்துறை யதனது விருத்தங்
கலியின் விருத்த மவற்றி னொன்கடி
யெட்டின் காறு முயர்ந்த வெண்பா
மிசைவைத் திரைந்து நாலந் தென்னப்
பாட்டுவரத் தொடுப்பது பதிக மாகும். (கஎக)

௬எ—சீர்மெய்க்கீர்த்தி.

௬கக சீர்நான் காதி யிரண்டடித் தொடையாய்
வேந்தன் மெய்ப்புக ழெல்லாஞ் சொல்லியு
மந்தத் தவன்வர லாறு சொல்லியு
மவளுடன் வாழ்கெனச் சொல்லியு மற்றவ
னியற்பெயர்ப் பின்னர்ச் சிறக்க யாண்டெனத்
திறப்பட வுரைப்பது சீர்மெய்க் கீர்த்தி. (கஎஉ)

௬கஉ நிலைபெறு சீர்மெய்க் கீர்த்தியி னந்த
முரையாய் முடியு மெனவுரைத் தனரே;
கோவூர்கிழார். (கஎ௩)

௬அ—செருக்களவழி.

௬க௩ தலைவன் செய்த நிலைபெறு புகழ்புனை
நேரிசை வெண்பா வின்னிசை வெண்பாப்
பஃறொடை வெண்பா மறக்கள வழியே. (கஎச)

௬கச நேரிசை யின்னிசை பஃறொடை வெண்பா
போரினக் களவழி புகலப் படுமே. (கஎரு)

---

*மன்ப'பி-ம்.

௩௯.—மறக்களவஞ்சி.

௩௧௫ குறள்சிந் தளவடி யகவ லடிவிராஅய்
வஞ்சிச் செய்யுளின் மன்னவர் மறக்கள
மெஞ்சா துரைப்பது மறக்கள வஞ்சி. (௧௪௬)

௩௧௬ இயங்குபடை மன்ன ரிகற்கனம் புகழ்ந்த
மயங்கியல் வஞ்சி மறக்கள வஞ்சி. (௧௪௭)

௪௰.—செருக்களவஞ்சி.

௩௧௭ விருத்தவகை பத்தான் விளம்பு பதனைச்
செருக்கள மெனவே செப்பினர் புலவர். (௧௪௮)

௪௧.—ஆற்றுப்படை.

௩௧௮ புரவலன் பரிசில் கொண்டு மீண்ட
விரவலன் வெயிறெறு மிருங்கா னத்திடை
வறுமை யுடன்வரூஉம் புலவர் பாணர்
பொருநர் விறலியர் கூத்தர்க் கண்டப்
புரவல னூர்பெயர்கொடை பராஅய்
யாங்குநீ செல்கென விடுப்பதாற் றுப்படை. (௧௪௯)

௩௧௯ ஓங்கிய வதுதா னகவலின் வருமே. (௧௫௰)

௩௨௰ புலவராற் றுப்படை புத்தேட்கு முரித்தே, (௧௫௧)

௪௨.—கண்படைநிலை.

௩௨௧ காலைபகன் மாலை யாழ்முறை யறத்திய
லமைச்சிய லரசிய லேனை யியலிசை
நாடகத்திய லோடு *நான்மறை
முறையே யெய்தினை யூழி வாழி
யினிய மகளிரோ டின்பத்துயில் கொள்கென்
†றிங்ஙன முரைப்பது கண்படை யாகும். (௧௫௨)

௪௩.—துயிலெடைநிலை.

௩௨௨ கண்படை மன்னவர் முன்னர்த் தண்பத
விடிய லெல்லை யியல்புறச் சொல்லித்

* 'நான்கு, முறைமுறை யெய்தினை' பி-ம்.
† 'றின்ன' பி-ம்.

தந்த திறையருந் தாராத் திறையரு
*மேத்தி நின்மொழி கேட்டினி தியங்க
வேண்டின ரித்துயி லெழுகென விளம்பி
னதுவே மன்னவர் துயிலெடை நிலையே. (கருரு)

சச.—விளக்குநிலை.

ௗ௨ௗ துளக்கமின் மன்னர்க் காம்விளக் குரைப்பது
விளக்கு நிலையென வேண்டினர் புலவர். (கருச)

சரு.—கடாநிலை.

ௗ௨ச கொற்றவை தனக்குக் கொற்றவ ரெறியுங்
கடாநிலை புரைப்பது கடாநிலை யாகும். (கருரு)

ௗ௨ரு வடாஅதுறை கன்னிக்கு மன்னவ ரெறிந்த
கடாநிலை புரைப்பது கடாநிலை யாகும்:

பெருங்குன்றூர்க்கிழார். (கருசு)

சசு—யாண்டுநிலை.

ௗ௨சு வையக மன்னவன் †மன்னுக பல்யாண்
டெய்துக வென்ப தியாண்டுநிலை யாகும். (கருஎ)

இது பெரும்பான்மை நேரிசை வெண்பாவாற் பாடப்பெறும். சிறு பான்மை எல்லாப்பாவானும் பாடப்பெறும்,

சஎ.—பறைநிலை.

ௗ௨எ காவல ரினிதுறத் தேவர்காத் தளிக்கெனக்
கடவுளர் விழவினுங் கதிர்முடி விழவினு
நாடு நகரமு நலம்பெற வியம்பி
வருநெறி வஞ்சி வழங்கப் பற்றிய
மொழிவரத் தொடுப்பது பறைநிலை யாகும். (கருஅ)

சஅ.—அந்தாதித்தொகை.

ௗ௨அ வெண்பாக் கலித்துறை வேண்டிய பொருளிற்
பண்பா புரைப்பதந் தாதித் தொகையே. (கருகூ)

---

*'மேத்திநின் மொழிகேட் டினிதியங்க வேண்டின, ரித்துயி லெழு
ழியம்பி னதுவே, மன்னவ ரின்பத் துயிலெடை நிலையே.' பி-ம்.

† 'மன்னிய பல்யாண், டெய்துவ னென்பது' பி-ம்.

௪அ.—மருட்பா.

௩௨௯ புறநிலை வாயுறை செவியறி வுறாஉவெனத்
திறமையின் மருட்பாச் செய்யுளின் வருமே. (௧௬௦)

௪௯.—பாதாதி.

௩௩௦ அகவடி யுகிரே விரல்புற வடியே
பரடே கழலே கணைக்கால் முழந்தாள்
குறங்கே யல்குல் கொப்பூழ் வயிரதன்
வரையே யிடையே மயிரி னொழுக்கே
முலையுகிர் விரலே முன்கை யகங்கை
தோளிணை கழுத்தே முகநகை செவ்வாய்
மூக்கே கண்ணே காது புருவ
நுதலெனு மாறைந் துறுப்புட னிரண்டும்
பாத மாதியா வேண்டுதல் புணர்ப்பினஃ
தோதிய பாத மாதியா மென்ப. (௧௬௧)

௫௦.—பன்மணிமாலைநயனம்.

௩௩௧ பணிமாலை நயனம் பாங்கா மகவல்
விருத்தம் பத்தென விளம்பினர் புலவர். (௧௬௨)

௩௩௨ ஆகிய கண்மாலை யகவல் விருத்தம்:
பெருங்குன்றூர்க்கிழார். (௧௬௩)

௫௧.—உழத்திப்பாட்டு.

௩௩௩ புரவலற் கூறி யவன்வா ழியவென்
றகல்வயற் றொழிலை யொருமை யுணர்ந்தன
னெனவரு மீரைந் துழத்திப் பாட்டே. (௧௬௪)

௫௨.—குறத்திப்பாட்டு.

௩௩௪ இறப்பு நிகழ்வெதிர் வென்னுமுக் காலமுந்
திறப்பட வுரைப்பது குறத்திப் பாட்டே. (௧௬௫)

௩௩௫ குறத்திப் பாட்டு மதனோ ரற்றே. (௧௬௬)

௫௩.—ஒருபாவொருபஃது.

௩௩௬ வெள்ளை யாத லகவ லாத
றள்ளா வொருப தொருபா வொருபஃது. (௧௬௭)

### ௫௪.—இருபாவிருபஃது.

௩௩௭ வெள்ளை யகவல் பின்னர் முறைவைத்
தெள்ளா தியல்வ திருபா விருபஃது. (௧௬௮)

௩௩௮ ஒருபா வொருபஃது மிருபா விருபஃதுங்
கருதிய வெள்ளையு மகவலுங் காட்டினர். (௧௬௯)

### ௫௫.—கோவை.

௩௩௯ கோவை யென்பது கூறுங் காலை
மேவிய களவு கற்பெனுங் கிளவி
யைந்திணை திரியா வகப்பொரு டழீஇ
முந்திய கலித்துறை நானூ றென்ப. (௧௭௦)

௩௪௦ களவினுங் கற்பினுங் கிளவி வகையாற்
றிணைநிலை திரியாச் செம்மைத் தாகி
நாட்டிய கலித்துறை நானூ றுரைப்பது
கோட்ட மில்லாக் கோவை யாகும். (௧௭௧)

௩௪௧ ஐந்திணை தழுவிய வகநிலைக் கோவை
தந்தநா னூறுந் தாங்கலித் துறையே. (௧௭௨)

### ௫௬.—கணக்கு. (மேற்கணக்கு—கீழ்க்கணக்கு.)

௩௪௨ மேல்கீழ்க் கணக்கென *இருவகைக் கணக்கே. (௧௭௩)

௩௪௩ மேற்கணக் கெனவுங் கீழ்க்கணக் கெனவும்
பாற்படும் வகையாற் பகர்ந்தனர் கொளலே. (௧௭௪)

௩௪௪ அகவலுங் கலிப்பா வும்பரி பாடலும்
பதிற்றைந் தாதி பதிற்றைம்ப தீறா
மிகுத்துடன் றொகுப்பன மேற்கணக் கெனவும்
வெள்ளைத் தொகையு மவ்வகை யெண்பெறி
னெள்ளறு கீழ்க்கணக் கெனவுங் கொளலே. (௧௭௫)

௩௪௫ ஐம்பது முதலா வைந்நூ றீறா
வைவகைப் பாவும் பொருணெறி மரபிற்
றொகுக்கப் படுவது மேற்கணக் காகும். (௧௭௬)

---

* 'விதித்தனர் புலவர்' பி-ம்.

௩௪௬ அடிநிமிர் பில்லாச் செய்யுட் டொகுதி
யறம்பொரு ளின்ப மடுக்கி *யவ்வத்
திறம்பட வுரைப்பது கீழ்க்கணக் காகும். (௧௭௭)

௫௭.—தொடர்நிலைச் செய்யுள்.

௩௪௭ வித்தெண் டளிகொடி தலைவனொடு மேவி
யொத்த வெள்ளை விருத்த மகவல்
லைவத்த வொருதொடை கொச்சக வுறுப்பு
நடைபெற வருவது தொடர்நிலை யென்ப. (௧௭௮)

௩௪௮ வித்தே யெண்டளி விருந்தியல் கொடியென
யொத்த மூவகை யிறைவனொடு பொருந்தி
யொழுகிய வெள்ளை விருத்த மகவ
லுரையொடு மிடைந்த பாட்டிடைக் கொச்சக
நடைபெற வருவது தொடர்நிலை வகையே. (௧௭௯)

௩௪௯ தொடர்நிலைச் செய்யுள் பாட்டுப்பல தொடுத்துத்
தலையிடை கடையென நுவலவும் படுமே. (௧௮௦)

௩௫௦ அவற்றுள்.—
தலையெனப் படுபவை மலைவின் றாகி
யறம்பொரு ளின்பம் வீடென விவற்றிற்
றிறந்தெரி மரபி னீங்கா தாகி
வென்றிகொ ளிருக்கை யென்றிவை யனைத்துஞ்
சந்தி யாகத் தந்துநிலை பெறுமே. (௧௮௧)

௫௮.—பாட்டு. (பத்துப்பாட்டு.)

௩௫௧ நூறடிச் சிறுமை நூற்றுப்பத் தளவே
யேறிய வடியி னீரைம் பாட்டுத்
தொடுப்பது பத்துப் பாட்டெனப் படுமே. (௧௮௨)

௩௫௨ அதுவே: அகவலின் வருமென வறைகுநர் புலவர்: (௧௮௩)

௫௯.—கடைநிலை.

௩௫௩ கடைநிலை யென்பது காணுங் காலைப்
பரிசி லுழப்புங் குரிசிலை முனிந்தோர்
கடையகத் தியம்புங் காட்சித் தென்ப. (௧௮௪)

---

* வகை’ பி-ம்.

௩௫௪ பரிசினீட் டித்த லஞ்சி வெறுத்தோர்
கடைநின் றுரைப்பது கடைநிலை யென்ப. (௧௮௫)

கடையெனினும் அங்கதமெனினு மொக்கும்.

௩௫௫ வலங்கெழு வேந்தர் வான்புகக் கவிஞர்
கலங்கித் தொடுப்பது கையறு நிலையே. (௧௮௬)

௩௫௬ வெற்றி வேந்தன் விண்ணக மடைந்தபின்
கற்றோ ருரைப்பது கையறு நிலையே. (௧௮௭)

௩௫௭ கலியே வஞ்சியிற் கையற வுரையார். (௧௮௮)

௩௫௮ மற்றவை வல்ல வினம்பிறி தொன்றினு
மத்தகு மரபி னடக்கினர் கொளலே. (௧௮௯)

இனவியல் முற்றும்.

பன்னிருபாட்டியல் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

# திருச்செந்திற் கலம்பகம்.

---

## விநாயக வணக்கம்.

---

நிலம்பக வீழ்சடை நீறணி வான்மைந்த னீடயிலோன்
கலம்பகஞ் செந்தமிழ்ப் பாமாலை யாற்செந்தூர் கண்மருவு
சிலம்பக மெல்லடி வள்ளியை கேள்வனைத் திங்களவெண்கோட்
டிலம்பக யானை முகத்தானை வாழ்த்தி யியம்புவனே.

---

## நூல்.

### மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா.

#### நாலடித்தரவு— உ.

சொல்வாயமை தருந் தடவுட் சுருதிகரு தியபொருளைப்
பலசான்ற பெருங்கேள்விப் பனிமலைய முனிவனவ
வம்புயனு மறியாத வறமுதலாந் தமிழ்மூன்றுஞ்
சம்புவுமன் றுடனுணரத் தருவோய்நீ முருகோனே
கண்சுருங்க விரித்தபசுங் கலவமயி லெனத்திருமுன்
மண்சுருங்க விரித்தகுண மணியாழி யெழுபரித்தே
ரந்தினக ரனைத்துக்கு மணிமணிமா ளிகைப்புரிசைச்
செந்திநகர்ச் சினகரத்துத் திருத்தகவிற் றிருந்தனையால்.

#### ஈரடித்தாழிசை—

ஊனாகி யுயிராகி யுணர்வாகி யுணர்வுதவுங்
கோனாகி வினையளவுங் குணத்தளவுந் தனக்களவாய
விரவாதி யந்தமிலா வெளியாகித் தெளியாது
பரவாதி யருமூலவாப் பாமறையுந் தாமறைய
வாக்குமன முங்கடந்து மண்ணொடுவிண் ணிடத்தியற்றும்
போக்குவர வொழிந்துவிழிப் புலத்துருவு மருவுமாய
வேதாந்தஞ் சித்தாந்தம் விளங்குகலாந் தந்தெளிந்த
போதாந்த நாதாந்தப் புறத்தினுமப் புறம்போகி

# திருச்செந்திற் கலம்பகம்.

யுணர்ந்தாரு முணராரு முணராம லுயிர்க்குயிராய்ப்
புணர்ந்தாலு மாறுறு புலனலமுங் கலவாது
நின்றதனிப் பரம்பொருளா நினக்கொருபே ரிலையெனினு
மின்றுருக னெனப்பெறுவ திளையோய்நின் விளையாட்டே.

## ஓரடி அராகம்—௪.

அருமறை முறையிட வறைகழல் பறையிட வடியரு ணினைவதுன்னடி
யொருமையி னிருமையு முதவிய மதியென வொளியொடு குளிர்வதுன்முகம்
வருமுலை வனிதைய ரிருவரு மயிலின மழையென விழைவதுன்னெழில்
பெருகலை செழுகலி கடலினு மெழுமடி பெருகுவ தருகுநின்னருள்.

## பெயர்த்தும்-ஈரடித்தாழிசை—௩.

தாயென்றுந் தந்தையென்றுஞ் சகமீன்று தருமுனக்குச்
சேயென்று பின்னுமொரு திருநாமம் வருமாறென்?
முந்திலென்றே யடியருள முளரிதொறு மிருந்தாய்க்குச்
செந்திலென்றே யுரைக்குமொரு திருப்பதியும் விருப்புளதே!
மயிலேற்று வருங்கால மல்லாணீ கொல்லாயோ
மயிலேற்ற மேனுனக்கு மற்றேற்றம் பெற்றிலையோ ?
வோராறு பனிமதியி னொடுபவள வரையினிரைத்
தீராறு தினகரரு மிடையிடையே யுதித்தாங்குக்
கருணைபொழி திருமுகமுங் கணமணிக்குண் டலநிரையுந்
திருநெடுந்தோள் களுங்கமலச் சேவடியுந் தூவடிவும்
பாடாது நினையாது பரவாத வெனக்குவினை
கூடாத தொண்டரொடுங் கூட்டியுநீ காட்டினையால்.

## நாற்சீரடி அம்போதரங்கம்—௨.

பிறந்தது மிறந்ததும் பெரும நின்புகழ்
மறந்தது மல்லது வணங்கி லேனினைக்
காமமும் வெகுளியுங் களியயக்கமுந்
தாமிடை கலந்தெனைத் தலைமயக்கலால்.

## நாற்சீரடி அம்போதரங்கம்—௪.

உண்பது முடுப்பது முவந்து தேடினேன்
கண்படை நனவினிற் கலங்கி வாடினே
னுய்திற மீதுவென வுணர்வு போயினேன்
செய்திற மிதுவெனுந் தெரிவில் பேயினேன்.

### முச்சீரடி அம்போதரங்கம்—ச.

எவ்வா றெனையுய் யக்கொள்வா
யெழுதா மறையின் றிறத்துள்ளாய்
செவ்வா னனையான் றிருப்பிள்ளாய்
தெரியா தினியுன் செயல்விள்ளாய்.

### இருசீரடி அம்போதரங்கம்—அ.

மெய்யுநீஇ பொய்யுநீஇ விண்ணுநீஇ மண்ணுநீஇ
மையைநீஇ செய்யைநீஇ யாதிநீஇ சோதிநீஇ.

### தனிச்சொல்.

எனவாங்கு.

### ஆறடிநேரிசையாசிரியப்பா—சுரிதகம்.

நீயல தில்லை யாவையு முள்க
மற்றவற் றிடையா னவத்துடற் பொறையொடு
கறங்கெனத் திரியாது பிறங்குசுற வெறியு
நந்தூர் கடற்றுறைச் செந்தூர் பரவுவன்
காமரு பூந்தொடைக் கடம்பனின்
றாமரை மலரடி தருகயா வெனவே. (௧)

### வெண்பா.

எனதே குகன்செந்தி லேத்துதொழி லென்றேன்
றனதே யெனையாளுந் தன்மை—வினவின்
மறத்திமணா ளன்புமுதல் வாழ்வையெலா நெஞ்சே
குறத்திமணா ளன்புகழே கொள். (௨)

### கலித்துறை.

கொள்ளார் பவப்பிணி கூற்றுக்கஞ் சாரன்பர் கூட்டமல்லா
னள்ளார் பிணியி னலிவு படார்தெய்வ நாளுமற்றோன்
றுள்ளார் முருகன்செந் தூர்பிரி யாதவ னொண்கமலக்
கள்ளார் விரைமலர்த் தண்டையந் தாடொழக் கற்றவரே. (௩)

### ஆசிரியவிருத்தம்.

கற்றாலு நீடுழி கழித்தாலுங் கழியாத களையில் வாழ்வு
பெற்றாலு முருகனடிக் கன்புபெறா தவருலகிற் பிறவி தீரா
ரிற்றாலுங் கலிநலிய விரந்தாலும் பேதையரா யெழுத்தா றுள்ளத்
தற்றாலு மவனிருக்குஞ் செந்திலென்றோர் முந்திலென்று மடைவர் தாமே.

# திருச்செந்திற் கலம்பகம்.

## ஆசிரியப்பா.

தாமரை பயின்ற நான்முகக் கடவு
ளெழுதா மறைப்பொருட் பழுதாங் குரைப்ப
வீங்குமணிக் கடகந் தாங்குதிணி தடக்கை
முன்வருத் தியவா றின்னரும் வருத்த
விருப்பிய தாமெனத் திரும்பிட நஞ்சேய்
பாயிருள் பருகும பசுங்கதிர்க் குழவி
ஞாயிறு நூற வெறி நாண்முறி திரைமுகட்
டெழுவது போல மஞ்ஞைத் தழை கலாபச்
செறியயிர்ச் சிறையார் பொறிமயிற் புறத்துச்
சேயொளிமேனி திகழவீங் கெழுந்தனை
செய்யவான் சருணியு மொய்யனை யருணியுந்
தாவலங் கயிறு மேவலங் கொடியு
மாறு முகமு நீறணி புயங்களும்
பண்டைய மறைபுகழ் கண்டையார் தாள்களுங்
நாதரின் றுமமுஞ் செந்திலம் பதியும்
வணங்கவு நினைக்கவும் வாழ்த்தவு
மிணங்கலிற் பாவினே னெனை விதித் ததற்கே. (ரு)

## வெண்பா

அதற்கிதற் கென்றுள் ளவம்போக்கி யாக்க
முதற்பொருட்கு மின்றி முயன்ற—னதற்சணவன்
சந்ததியா னஞ்செய்யான் றனுவந்து செந்தினகர்
வந்ததியா னஞ்செய்யா மல். (௬)

## புயவகுப்பு-ஆசிரிய வண்ண விருத்தம்.

மலர்தலை ஞாலத் தலகில் வாமுற் றுயிர்களு முந்திக் கண்பண்டு தந்தன
மறைபகர்வாயமைத் திசைமுகனோவுற் றிடுமுறை தண்டித் தன்றங்கைகன்றின
மகபதி வானத் தரசுவ ழாமற் றிருமுடி யன்பிற் கொண்டுமெபு னைந்தன
வழிபடு கீரற் கழிசிறை மீரப் பரிவொடு முந்திச் சென்றஞ்ச லென்றன
குலமடமான்மெயப்புதல்வியும் யானைகுமரியுமொன்மெருத்தின்பங்கவர்ந்தன
குழையுமென் வாய்மைத் தமிழ்நனீபத் தொடையலு மொண்பொற் சந்து
[ந்த வழ்ந்தன
குரைகழ லுடித் தொழுநெறி சேர்கொத் தடியவர் தங்கட் கின்பங்களீந்தன
... கை வேலைக் கவிழிணர் மாவைத் தடிதலு மன்றிக் குன்றும்பிளந்தன
... ராமுத் தமிழுணர் நீதிக் குறுமுனி வந்தித் தென்றும்பு கழ்ந்தன
... வாகைத் திருநெடு வேலிற் சிரமலி தங்கட் கங்கங்கி யைந்தன

வுமைமுலை யீர்விட் டொழுகிய பாலுக் கழுதுயர் பொன்றக் கொண்டங்க [ணுறங்கின
வருகெழுகோலத் திருமுது சூரைக்கிளையொடு மஞ்சக் கொன்றங்கம் வென்
கலவமயூரத் துரகத மேறிப் புவனியு மெண்டிக் கெங்குந் திரிந்தன [றன
ககனவ ளாகத் தளவிய கோழிக் கொடிவளர் கம்பத் தம்பம்பொ ருந்தின
கலைமதி போலத் திருமுக நீள்கட் கடையருள் பொங்கிச் சிறந்தி பம்பின
கடலலைவாய்முத் தினவலை வீசிக்கரைபொரு செந்திற் கந்தன்புயங்களே. (எ)

### கலித்துறை.

புயமா றிரண்டுக்கும் பொன்னணி யாம்புள்ளி மான்மகட்குங்
கயமான் மகளுக்குங் கண்ணணி யாங்கடுங் கூற்றுவந்தா
னயமாய தொண்டர்க்கு நற்றுணை யாஞ்செந்தி னன்னகர்மே
வியமான் மருகன் றிருக்கரத் தேந்திய வேற்படையே. (அ)

### கலிவிருத்தம்.

படைக்கணார் மையலேய்ப் பருவ சல்லது
சடைக்கணுள் பாகதி காணு மாறுண்டோ
விடைக்கணு திபன்றனக் கிளஞ்செங் கார்த்தமிழ்த்
தொடைக்கணன் றுயர்புயத் தோகை பாகனே. (௯)

### குறளடிவஞ்சிப்பா.

பாகந்தரு பனிவான்மதி
தாரகையொடு கார்முகிலிடைப்
பொருதெனவளை யுடனிலகிய
நவமணியுமிழ் சலிகெழுபுனற்
றிரைபொருமொலி முரசுடனதிர்
பைந்தமிழ்வளர் செந்திலின்வரு
சேயோன்
திருந்தடி துணையெனச் சேர்பவர்
பொருந்துவர் யாரும் புகலரு நெறியே. (௰)

### கலிப்பா.

நெறிக்குஞ்சித் தலைமறலி நெருங்கியெதிர் வருங்காலஞ்
செறிக்குஞ்சித் திகடருநின் செந்திலுமென் புந்தியதே
பொறிக்குஞ்சித் திரத்தினுடப் பொரியாகப் புகுந்து கொத்திக்
கொறிக்குஞ்சித் திரச்சரணப் படைச்செவ்வேற் கொடியோனே. (௰௧

### வண்டோச்சி மருங்கணைதல்—ஆசிரிய விருத்தம்.

கொடியாநின் றிடைதேய்ந்து கொழுங்கலைவைத் துணைமுலையுங் குழலுந்தாங்கி
யொடியாநின் றுளதின்னு முமக்குநிறங் காதவுள்ள முளவோ வண்டீர்
வடியாநின் றிலங்கிலைவேல் வலனேந்தி செந்திலுறு மருந்தன் றூடன்
முடியாநின் றளியெனுஞ்சொன் முடியாநின் றநுராக முயல்கின் றீரே. (௰௨)

### வண்டுவிடுதூது—வெளிவிருத்தம்.

ஈரநான்முகை யிணைமுலைப் பசப்பொழித் தளியீரே
சூரனுள்விழித் துணையிணை சொல்வதற் களியீரே
நாரநாளமென் னளிணைநீர்ச் செந்திற்புக் களியீரே
யாரராள்வரு வேரசையின் மலர்சொணர்ந் தளியீரே. (௰௩)

### வஞ்சித்துறை.

அளியாலுஞ் சோலை
யொளிசேர்வான் செந்தூர்
தெளிவாயா னஞ்சே
யறியாவீ டின்டே. (௰௪)

### பேசவிடுதூது —கலித்துறை

உண்டு வாருதி பசுஞ்சிறைக் கிளிமயி லுருவாகி
யெண்டிசாமுகம் புதைத்தயி லெனநினி யிளைத்தீரேற்
கண்டு நானிரு கண்களு முள்ளமுங் களிகூரக்
கொண்டல் நாளினிச் செந்தில்வாழ் குமரனைக் கொணர்வீரே. (௧௫)

### அம்மானைமடக்குத்தாழிசை.

வீரனெடு வெள்வேல் வியன்செந்தி லெம்பெருமான்
பாரிலுயி ரெல்லாம் படைத்தனன்கா ணம்மானை
பாரிலுயி ரெல்லாம் படைத்தனனே யாமாகி
லாரணங்க ளொன்கு மறிவனோ வம்மானை
யறிந்து சிறையயனுங் காக்கினன்கா ணம்மானை. (௧௬)

### இரங்கல்-வஞ்சிவிருத்தம்.

மான்மகள் காதலர் மஞ்சூருந்
தேன்மலி காவுயர் செந்தூரார்
கான்மண நாறு கடம்பேனும்
யான்மகிழ் கூர விரங்காரோ. (௧௭)

### ஈரொலி வெண்டுறை.

காரோய் நிறத்தருகட் கழுவுடைக் கடுங்கூற்றங் கலந்த காலை
யாரோ விலக்குவா ரங்கோ தமரங்கா ளறிதி ரன்றே
நீரோ வுயப்போமா றின்று வலித்தீரேற்
கூடோய் வடிவேற் குமரன் குடநாட்டுச்
சீரோய் திருச்செந்திற் சென்று தொழுதிரே. (கஅ)

### வெண்பா.

தொழுதிரந்து வெம்பசியாற் சோர்ந்திடுவார் கைபார்த்
தழுதலமந் தேங்கி யலைவார்—முழுதும்
பெருகுகலை வாரிமணி பெய்திரைக்குஞ் செந்தில்
வருகுகனை வாழ்த்தாதவர். (கக)

### கலிப்பா.

வரங்கொண்ட புனைமுலைப்பான் மணங்கொண்ட செவ்வாயும்
பரங்கொண்ட களியயிலும் பன்னிரண்டு கண்மலருஞ்
சிரங்கொண்ட மறையிறைஞ்சுஞ் சேவடியுஞ் செந்தூரன்
கரங்கொண்ட வேலுமென்றன் கண்ணைவிட்டு நீங்காவே. (உ0)

### பாண்—கலித்துறை.

நீங்காத நேயத்தி னீதைத்த தையலுநின் னையன்றிப்
பாங்காய பாண பிரிந்ததென் றுழலுமை பாலன்செந்தில்
யாங்கா ணலமெனி லொய்ம்மை விறைவுதி யேதிலனாத்
தாங்காது நின்மதி தான்றூசி யின்றிறந்தான் பிழைத்தே. (உக)

### ஆசிரியவண்ணவிருத்தம்.

பிழையாத தொண்டர் சிறிதேசெ யன்பு பெரிதாக நெஞ்சு மகிழ்வா
ருழையீனு மெங்கள் குறமாது கொண்க ருமைபாலர்தங்கு மிடமாம்
புழைவாய் திறந்து வளைகுல லைந்து பொழியார மிந்து வெணவே
மழைபோன் முழங்கி யலையாழி சிந்து வளமேவு செந்தி னகரே. (உஉ)

### தலைவிகூற்று—வெண்பா.

நகைமதிய மேவடவை நாப்போலிவ் வண்ணந்
தகைமதியாய் நின்று தழல்வா—யகமகிழ்ந்து
கற்பகலை தந்தார் கடற்செந்தில் வாயெமக்குப்
பொற்பகலை தந்தார்முன் போய். (உ௩)

# திருச்செந்திற் கலம்பகம்.

## கலித்துறை.

போய்வத ஞரம்ப மாடார் திருச்செந்தில் புக்குறையார்
சேய்மலர்த் தாளிணை சிந்தைசெய் யார்திரு மான்மருகன்
காய்சின வேலு மயிலுமென் ஞர்கடல் சூழுலகிற்
பேயறி வாளரொவ் வாறுய்ப் பார்தம் பிறப்பினையே. (உச)

## தலைவிநெஞ்சொடுகிளத்தல்—ஆசிரியத்தாழிசை.

பிறர்வாய் வசையடங்கப் பிஞ்ஞகன்சேய் திண்டோ
ணறவார் துணர்க்கடம்பு நாம்பெறுதல் வேண்டிச்
சிறைவான் புனற்செந்தில் சேருதுமா னெஞ்சே
குயில்வா யொலியடங்கக் கூத்தன்சேய் திண்டோ
ணயமாந் துணர்க்கடம்பு நாம்பெறுதல் வேண்டிச்
செயிர்தீர் புனற்செந்தில் சேருதுமா னெஞ்சே
முரந்நீ ரொலியடங்க முக்கணன்சேய் திண்டோ
ணன்னீர்த் துணர்க்கடம்பு நாம்பெறுதல் வேண்டிச்
செந்நீர் புனற்செந்தில் சேருதுமா னெஞ்சே. (உரு)

## கைக்கிளை—மருட்பா.

நெஞ்சே நுதல்வியர்க்கு நீடுகுகன் செந்திலன்னாட்
கஞ்சேல் விழிக ளவையிமைக்கும்—பஞ்சே
ரடியிலுந் தோயு மதனாற்
கமழுங் குழலிவள் கடலிடத் தணங்கே. (உசு)

## பாங்கிவெஃகல்—வெண்பா.

அணங்கா மிவளுக் கவிர்மதிய மொன்றே
வணங்கா வருந்தென்ற லொன்று—வணங்கூ
ரிளமுருகா செந்தினக வெந்தாய்வந் தாளா
யுளமுருகா வேயிசையு மொன்று. (உஎ)

## தலைவியைவியத்தல்—கலித்துறை.

ஒன்றுடை யான்புலித் தோலுடை யான்மைந்த னெங்குபரங்
குன்றுடை யான்றிருச் செந்திலன் ஞர்குல வாழையினை
மென்றுடை யானடை யாலிடை யால்விழி வேற்கடையா
னின்றுடை யானிற்ப ராலெவ ரோனு மிலைகுலைந்தே. (உஅ)

கடவுள் துணை.

# இராமநாதபுரம் ஸம்ஸ்தானம்

மாட்சிபொருந்திய ஸ்ரீமத்:

# பாஸ்கர சேதுபதிமகாராஜா அவர்கள்

சிவபதமடைந்தமைக்காற்றாது பாடிய

# சரமகவிகள்.

பாலவநத்தம் ஜமீந்தாரவர்களும்,

**மதுரைத் தமிழ்ச்சங்கத் தக்கிராசனாதிபதியுமான**

## பொ. பாண்டித்துரைத் தேவரவர்கள்

பாடியவை.

---

1. *சேதுபதி மன்னர்குலக் கடற்றோன்றி யருணனையே சேர்ந்தோ ராழி
மேதினியெங் கணுஞ்செலுத்தி யிரவொழித்துப் புகழொளியை விரித்
துத் தேன்போ, லோதுபிர சங்கமழை யுவந்துதவு பாற்கரநீ யொடுங்
குங் கால, மீதுகொலோ விண்ணமுநீ யெய்துவையோ யிரங்கியெமக்
கிசைத்தி டாயே.*

2. *என்னாவி யுளங்குளிர அண்ணாவென் றன்பொடினி யெனையார் சொல்
வார், மன்னாமன் னாமன்னா வெனயாரை யானினிமேல் மதித்துச்
சொல்வேன், பொன்னாடுந் தொழுஞ்சேது நன்னாடு புரந்தளிக்கப் போ
ந்த நீவே, றென்னாடு சென்றனையோ வெங்கள்குல மணிவிளக்கே
யிசைத்தி டாயே.*

3. *அவியுணவொன் றேயருந்து மமரருணா வவியாவுன் னமுத வாக்காற்
செவியுணவுங் கொடுப்பதற்கோ நிதிமணியைந் தருகாமதேனுவென்னு
மவையுணரும் படியிரப்போர் குறிப்பறிந்து கொடுக்குநல மறைதற்
கோவிப், புவியிலெல்லை வருந்தவிட்டு வானடைந்தாய் பாற்கரநீ புக
ன்றி டாயே.*

4. நீணிலமீ தானடியார் பெருமையுமன் னவன்சமய நெறியும் பல்கான் மாணவெடுத் தெடுத்துரைத்துந் திருந்துகிலார் மடமதியின் வலிமை காணா, வீணிதென வானடைந்தாய் பாற்கரசே துபதியவண் மெய் யில் போகம், பேணுநலா யுளங்தெருட்டி யுய்விப்பான் விழைந்தனையோ பெரும நீயே,

5. பண்புலவு தமிழ்ச்சங்க நிறுவல்கரு தியநான்று பரிவு கூர்ந்து நண்புலவு திருவாக்காற் றளர்வொழிகென் றெனக்கிசைத்த நலம்பொ ய்யாதே, மண்புலவ ரொடுநனிபொன் வழங்கியமை யாதெனவே மதி த்து வான்போய், விண்புலவ ரோடுதம னியநகொண ர நினைந்தனை யோ வேந்த ரேறே.

6. சோபகிரு தாண்டொன்பான் றாய்மதியீ ராறுவளர்
மாபிறையெண் ணளிரவி வாரமீன்—நீபமலை
மாதுபதி தாக்கு மலரடியைப் பாற்கரனுஞ்
சேதுபதி சேர்ந்த தினம்.

இராமநாதபுரம் சம்ஸ்தான வித்துவானும்

'செந்தமிழ்' ப்பத்திராசிரியருமாகிய

ரா. இராகவையங்கார் அவர்கள்

பாடியவை.

---

வெண்பா.

1. என்னி னெனக்கினிய னின்பாற் கரசேது
மன்ன னிறந்த வகையானே—யின்னே
யொளியின் மணியானே னூழில்செய லானேன்
களிறில் * வெளிலானேன் காண்.

2. செவிக்கினிய கேளேன்சிந் தித்தினிய தேறேன்
கவிக்கினிய பாடிக் களியேன்—புவிக்கினிய
வள்ளியோன் பாற்கரப்பேர் மன்னன் சொலல்வல்ல
தெள்ளியோன் சென்றபொழு தே.

---

* வெளில்-யானைகட்டுந்தறி.

## சரமகவிகள்.

3. இரவாமை யீயு மெழிற்றகையு முள்ள
கரவாமை நல்குங் களிப்பு—மிரவாள
ரின்முகங் காணு மியல்பு மினிக்காணே
னன்முகப் பாற்கரனே நான்.

4. சேது பதிக டிலகமே பாற்கரனே
கோது பதியாக் குணக்குன்றே—மூதுலகி
னீயிறந்தா யல்லையா னீள்புகழா லுள்ளனையெம்
வாயிறந்து போய மதி.

5. வாயிலா மூங்கை மதியிலா நெஞ்சகநற்
றாயிலாச் சேயிவையே தானனையே—னீயிலா
தென்செய்வே னின்றமிழை யாவர்க் கெடுத்துரைப்பேன்
கொன்செய்வேற் பாற்கரவேள் கூறு.

6. பாட்டு முரையும் பயிலாப் பதடிகட
மோட்டைச் செவியி லுகுப்பேனோ—நீட்டுகொடைச்
செங்கையாய் பாற்கரனே செந்தமிழ்ப்பா வின்சுவையை
யெங்கையா சொல்வே னினி.

7. அருமை யறியா ரவர்செவ்வி நோக்கிப்
பெருமை யழியவைத்த பெட்பென்—னொருமை
யுயிர்த்துணை நீயென் றுரைத்த மொழியை
யயர்த்தனையே பாற்கரமன் னே.

8. மண்புலவர் சொல்லமுதே மாந்திச் சுவைதெரிநீ
விண்புலவர் புல்லமுது மேவியுண்ண—வெண்ணியது
பாலே நுகர்வான் பயனில் புளிவேட்டல்
போலேயாம் பாற்கரவேள் போற்று.

9. ஈவாருங் கொள்வாரு மில்லாத வானத்து
வாழ்வாரே வன்க ணவரென்னுந்—தூவாய்மை
மன்னிய சொல்லை மதியாமல் வானெய்த
வுன்னியதென் பாற்கரவே ளோது.

10. பாருலகு நங்கொடைக்குப் பற்றா தெனவுள்ளிச்
சீருலகு பொன்னென்று சென்றனையப்—பேருலகிற்
கொள்வா ரிலாமை குறித்திலையே பாற்கரப்பேர்
வள்ளா லிதனை மதி.

11. கார்புக்க தோகற்ப கம்புக்க தோவறியேன்
சீர்புக்க பாற்கர சேதுபதீ—பேர்சிற்க
வீத்து மலர்ந்திவ் விருநீர் வரைப்பெல்லாங்
காத்து வளர்ந்தநின் கை.

12. கேளாருங் கேட்கக் கிளக்கும்வா யெங்கேயோ
வேளாரும் வேட்ப மிகுநிதியந்—தாளாரு
மன்னர்க்கும் யார்க்கும் வழங்குகர மெங்கேயோ
கன்னற்கு நேர்பாற் கர.

13. சோப கிருதாண்டிற் றூய தநுமாதத்
தீபமிகு பக்கத் திதியெட்டிற்—பூபரவு
வார முதலாம் வளர்பாற் கரன்வேந்தர்
நீரன் சிவமாந் தினம்.

*சேற்றூர்ச்சம்ஸ்தான வித்வானும்*

**மதுரைத்தமிழ்ச்சங்கப்புலவருளொருவருமாகிய**

## மு. ரா. அருணாசலக்கவிராயர் அவர்கள்

*பாடியவை.*

### கலித்துறை.

1. விண்பாற்கரனென்றுபெற்றதுபோலிந்தமேதினியா
மண்பாற்கரனென்றுபெற்றேயெவரும்வறுமையிருள்
கண்பார்க்கக்கூடுதலில்லாதிருக்கக்களித்தநந்தோ
எண்பாற்கரநிகர்புண்படவேயின்றிழந்ததுவே.

2. எல்லாவுலகிற்கும்பாற்கரனென்றென்றிருக்கவிந்தப்
பொல்லாவுலகநதனக்கெனவேயொன்றுபோதப்பெற்ற
தில்லாதவொன்றுநிகழ்வததிசயமென்றுமது
நில்லாதெனவின்றிழந்தேதுயருற்றுநின்றதுவே.

3. அப்பாற்கரனேர்கவியேதன்முன்வரவன்றுவந்தா
னைப்பார்க்குஞ்சொல்லமுடியாக்கவிகள்பல்லோருமென்று
மிப்பாற்கரன்றன்முன்னேவந்துசூழ்ந்திடவின்றுவந்தா
னெப்பார்க்குளேசென்றொளித்தானிவனிங்கிருந்திலனே.

## சரமகவிகள்.

4. அரங்கண்டுமொறுவரவழைத்தேவந்தவர்கடரா
தாரங்கண்டுபோலினிக்குங்கவியாற்பிரசங்கத்தினாற்
பரங்கண்டுபொன்றரும்பாற்கரசேதுபதிவள்ளலெங்
காரங்கண்டுயர்படமோதும்படிக்குக்காந்தனனே.

5. பாற்கரசேதுபதிவானவர்தம்பதிபுகுந்தா
னாற்கவிராசரென்செய்வாரந்தோவிந்தநாட்டிலினி
யேற்கவென்றாலெங்குச்செல்வாரிரப்பினிலெய்துமிழி
பாற்கவலைப்படவேண்டாமிநன்றொன்றுண்டாயதுவே.

6. ஆதாரமாகிப்புலவோர்கலிமுற்றகற்றினரிப்
போதார்நம்பாற்கரசேதுபதியன்றிப்பூதலத்தின்
மாதாரமர்புயப்போசன்முன்னானவரையுரைத்தல்
காதாரக்கேட்டகதையாமொருவருங்கண்டிலமே.

7. நிலையாதியாக்கைபுகழேயுலகினிலைத்ததென்று
கலையாய்ப்புலவர்க்குவேண்டும்பொருள்கள்கனிந்தளித்து
மலையாமல்வாழ்வித்தநிற்கழகோவின்றுவான்சென்றுகம்
பலையாரவைப்பதுபாற்கரசேதுபதிவள்ளலே.

8. வண்டமிழ்ச்சங்கம்வளர்பொருளீயுநின்வள்ளன்மையைக்
கண்டவரேயன்றிக்கேட்டவர்நெஞ்சுங்கசிந்துருக
விண்டலமேவினையாங்குளிர்நெஞ்சுமெலிவிப்பையோ
பண்டறியேமிதுபாற்கரசேதுபதியரசே.

9. மகாராசபாற்கரசேதுபதிதன்கைவண்மையவன்
மகாராசன்மார்க்கமன்றென்றுவிடுப்பர்மடநெஞ்சுசெப்
புகாராசரியவர்க்கீதறிந்தாரவன்போந்துயருட்
புகா* ராசனம்புலவோர்பாடலுக்கப்புரவலரே.

10. முகவையமர்ந்தும்பரம்பொருள்போலெங்குமுந்துவியா
பகவையமன்புசெய்பாற்கரசேதுபதியரசே
மகவையகன்றவர்போலேயிவண்விட்டுவானகநீ
புகவையகோவென்றலறாரெவரிப்புவிதனிலே.

* ஆசனம்-இருப்பிடம்.

## சரமகவிகள்.

திருவாவடுதுறை ஆதின வித்துவானும்
மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் சைவநூற் பரிசோதகரும் ஆகிய

### சேற்றூர்ச் சுப்பிரமணியக்கவிராயர்

பாடியவை.

---

1. *சந்தமுறும் பாற்கரமன் னவனடரா சன்பதத்தைச் சார்ந்த னதைக்கண்*
*டிந்திரனங் கற்பமுமங் கற்பமா மெனவுரைத்தா னெண்கண் ணனு*
*மந்தமறைப் பதமுமறைப் பதமாமென் றேயுரைத்தா னச்சுதன்றா*
*னந்தமணிப் பணத்தணையோர் காலுநே ராமென்றா னாவல் வீரே.*

2. *மண்ணுலகந் தன்னினும்வா னுலகுமே லானதென மதித்தவ் வான*
*நண்ணினையென் றாலென்று மிரவலர்கள் புரவலரா நயக்கத் தானம்*
*பண்ணியத னாற்புகழே கொள்ளும்பாற் கரசேது பதியே யங்க*
*ணெண்ணிலிர வலருண்டோ பொன்னுலகென் பதையுமறந் தேன்சென்*
*றாயே.*

வேறு.

3. *அலகில்புண் ணியத்தன் பாற்கர மன்ன னாயுளோங் கிடாமலிங் ககன்று*
*விலகுதற் கென்ன காரண மென்னில் விளங்குபே ரரசுஞ்சிற் றரசு*
*நிலவவிங் கிரண்டு புதல்வரைத் தந்தாய் நீயவ்வா னரசுநின் றாதைக்*
*கிலகுசிற் றரசா யிருவென விறைவ னேவச்சென் றானென்பேம் யாமே.*

4. *இரவலர் குமுத மன்றியே தன்னாட் டிரவல ரிலையென யாரும்*
*பரவிய செல்வ ராச்செய்தா யவர்நிற் பார்த்திடாக் கண்பழங் கண்ணு*
*விரவவான் சென்றா யாங்குநின்கொடைக்கு மிளிரஞ்சு தருவஞ்சு தருவாந்*
*தரமுறு மெங்கள் பாற்கர மன்னீ தணந்ததா லெவர்க்கென்ன சுகமே.*

வேறு.

5. வானவர் போற்ற வுறைகின்ற பாற்கர மன்னவன்றான்
றேன் துக் கொண்ட லெனவே பிரசங்கஞ் செய்திருவா
ங் தீயுண்ட தந்தோபொன் மேகம தானதுநேர்
ப் பொன்மழை பெய்திருக் கையுந் தழலுண்டதே.

## சரமகவிகள்.

*தஞ்சாவூர் 'பிரைமரிஸ்கூல் சூபர்வைசரும்'*

**மதுரைத்தமிழ்ச்சங்க வித்துவான்களுளொருவருமாகிய**

### ஐ. சாமிநாத முதலியார் அவர்கள்

பாடியவை.

---

1. சீரார் முகவைவந்த பாற்கர சேதுபதி
நீரார் வியனுலகை நீத்தகன்று விண்ணுலகுக்
காரா விருந்தா யமரவமர்ந் தாயதற்கிங்
காரா ரிரங்காதார் ஐயாவே ஐயாவே.

2. பாரிரங்கு கற்பகம்போற் பாங்கினதை யூட்டினையால்
நீரிரங்கு தண்மையிற்றன் னேரா யிருந்தனையால்
காரிரங்கு மீகைவினை கற்றுக் கொடுத்தனையால்
ஆரிரங்கார் யாதிரங்கா தையாவே ஐயாவே.

3. கல்லிரங்கும் மற்புயங்கள் காட்டுவலி மாய்ந்ததற்கே
புல்லிரங்கும் தற்றேயாப் பூம்பதங்கள் சாய்ந்ததற்கே
எல்லிரங்கும் தன்மே லிரவுதவிர்ப் போயந்ததற்கே
அல்லிரங்கும் தன்னி னவிர்மதியை வீந்ததற்கே.

4. நூலிரங்குங் கோணலெல்லாம் நூறிடுவை தன்னினென்றே
பாலிரங்கு தன்னினின்சொல் பாரவிர சத்ததென்றே
வேலிரங்கும் நீயிளையாய் வேலுடைய சேயினென்றே
ஆலிரங்குந் தன்னின்மிகுத் தாதரிக்க வல்லையென்றே.

5. செந்தமிழை யோரார் செருக்கடக்க வந்நாளில்
எந்தை மதுரேச னென்றுநின்றா னிந்நாளில்
வந்தை முகவேசா வென்று மகிழ்ந்ததுல
இந்தமகிழ் வின்னுமஃ தேன்சிலநா ளேய்ந்திலதே.

6. ஆருயிரின் றாயே யறத்தின் பிறந்தகமே
பேரருளின் கண்ணே பிறந்த குலப்பேறே
பாரிற் றமிழ்ப்பதுமப் போதலர்த்தும் பாற்கரனே
ஊருன் முகவையைவிட் டுற்றதுவென் வானகமே.

## சரமகவிகள்.

7. காவலருட் செல்லாது காக்குங் கடிவாயில்
பாவலர்க்குச் சூரியனைக் கண்ட பதுமச்செம்
பூவை நிகர்முகவைப் பொற்பதியிற் றெய்விகப்பூங்
காவை யுடையபதி சீரியதாய்க் கண்ணினையோ.

8. காவலரைப் பாவலரைக் காக்கவல்ல வாற்றலுள்ளாய்
காவலர்காப் புன்னரிய காதலிளஞ் சேய்க்களித்துப்
பாவலரை மட்டும் பரிந்தளித்து வந்தைநின்றாள்
பாவலரைக் காப்புமிந்நாள் பாரமாய் மேவியதோ.

9. மண்ணிற் புலவர்தமை வாய்ந்துகா வாதகன்று
விண்ணிற் புகுந்தகருத் துய்த்தறியோ மேலவனே
விண்ணிற் புலவ ரிலையோ விண்ணிற்புலவர்
மண்ணிற் புலவரினு மாற்றி லுயர்ந்தவரோ.

10. பூவுலகைக் காவல் புரியப் புகுந்தமைந்தன்
காவலர்போற் பாவலரைக் காக்கவல்லா னென்றேயோ
தேவுலக வாட்சி சிறந்ததென்றோ யாதெனினும்
பூவைமைந்த னீடாள் புரியவருள் ஐயாவே.